# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

## பாகம் 2 (101 முதல் 200 வரை)



உரையாசிரியர்:

ஸ்ரீமதுபயவே ரஹஸ்யார்த்த கோவித நாவல்பாக்கம் யக்ஞும்

Dr. V. கண்ணன் ஸ்வாமி

Sincere Thanks to:
Oppiliappan Koil Sri V. Sadagopan Swamy for hosting this title under his sadagopan.org website portal

**Cover Picture: Swamy Desikan, Sri Thooppul**
**(Courtesy: Sri U.Ve. Satakopa Tatachar, Kancheepuram)**

**Cover Design by: Sri Murali Desikachari**

## ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்.

(யஜ்ஞும்)

**இந்த இரண்டாவது நூறில் ஒவ்வொரு நீதித் தலைப்பும் ஆ என்ற எழுத்தில் தொடங்கும்.**

### 101. ஆத்மோத்கர்ஷம் பேசாதே.

தற்புகழ்ச்சி கூடாது.

> **கார்பண்யம் குலையாமைக்காகச் சொல்லாதொழியவேண்டுமவற்றில் ப்ரதானம் ஆத்மோத்கர்ஷம்.**
>
> ***---ரஹஸ்யத்ரயஸாரம், உத்தரக்ருத்யாதிகாரம்.***

ப்ரபத்தி பண்ணிக்கொண்டபிறகு எப்படி வாழவேண்டும் என்பதை விளக்குவது உத்தர க்ருத்யாதிகாரம். அதன் இறுதியில் சுருக்கமாக ஆறு அறிவுரைகளைக் கூறுகிறார். அதிலொன்று தற்புகழ்ச்சியைத் தவிர்க்கவேண்டும் என்பது.

> சொல்லக்கூடாதவை பல உண்டு. அவற்றுள் முக்கியமானது தன்னைத்தானே உயர்வாகப் பேசுவது. இது குறிப்பாக ப்ரபத்தி பண்ணியவர்களுக்குக் கூடவே கூடாது. ஏனெனில் இது அவர்களது கார்பண்யத்தைக் குலைத்துவிடும்.

வன்சொல், பொய்ச்சொல், மிகைச்சொல், என்று பல பேச்சுத் தோஷங்கள் இருந்தாலும், அவற்றையெல்லாம் விஞ்சுவது தற்புகழ்ச்சி என்கிற தோஷம். அது நம்முடைய **(சரணாகதியின் ஐந்து அங்கங்களில் ஒன்றான)** ஆகிஞ்சந்யத்தையே (**கைம்முதலற்ற உணர்வையே)** அழித்து விடும். ஆதலால் சரணாகதி பண்ணிக்கொண்டவர்கள் கவனமாகத் தவிர்க்கவேண்டிய தோஷம் தற்புகழ்ச்சி.

### 102.ஆத்மா உடலே என்னாதே.

உடலே ஆன்மா என்கிற மருள் அபாயகரமானதால் அந்த எண்ணத்தை முதலில் தொலைக்கவேண்டும்.

> **சேதனனுக்குத் தன் விசேஷணங்களை விவேகியாமையாலே வருகிற ப்ரக்ருத்யாத்ம ப்ரமமும் ... கழிகைக்காக தத்வநிரூபணம் பண்ணவேணும். ...சீரமே ஆத்மா என்றதுவும் அநுபபந்நம்.**
>
> ***--- பரமதபங்கம்.***

ஜீவதத்வாதிகாரத்திலும் லோகாயதிகபங்காதிகாரத்திலும் ஜீவாத்மா உடலிலிருந்து வேறுபட்டவன் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

> சேதனன் என்பது ஆத்மா. அவனுக்குச் சரீரம் என்பது விசேஷணம். உரிபொருள். அவனே சரீரமன்று. சரீரத்தையே ஆத்மாவாகப் பிரமிப்பவர் அனேகர். இந்த மருளுக்குப் ப்ரக்ருத்யாத்மப்ரமம் என்று பெயர். ப்ரக்ருதிக்குள் அடங்கியது சரீரம். அடங்காதது ஆத்மா. இவ்விரண்டையும் ஒன்றென மருளக்கூடாது. உடல் வேறு, ஆன்மா வேறு, என்பதைப் புரிந்துகொள்ள பல உபபத்திகள் உள்ளன.

நான் பருமனாக இருக்கிறேன். அவள் இளைத்திருக்கிறாள். என்றெல்லாம் வ்யவஹாரம் பண்ணுகிறோம். இந்தப் பருமனும் இளைப்பும் உடலுக்குத்தான். ஆத்மாவுக்கு இல்லை. என் உடல் பருமனாக இருக்கிறது என்று சொல்வதே பொருந்தும். அது போகட்டும், எத்தனையோ கௌணமான வழக்குகளில் இதுவுமொன்று; ஆனால் பலர் தம் தேகத்தையே ஆத்மா என்று கருதி அதற்காகவே அல்லும் பகலும் உழைக்கிறார்கள். ஆத்மாவின் நன்மைக்காக எதுவுமே பண்ணுவதில்லை. லோகாயதிகர்கள் உடலிலிருந்து வேறான ஆத்மா இருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை; அது தவறு. பல காரணங்களைக் கொண்டு உபபாதிக்க முடியும், உடலின் வேறுபட்ட ஆன்மாவை. இப்படி ஆத்மாவையும் சரீரத்தையும் பிரித்து அறிவது தத்வஜ்ஞானத்தின் முக்கியப் பகுதி ஆகும். இந்த நிச்சயம் இல்லாதவன் ஆத்மஹிதத்தைப் பண்ணமாட்டான்.

## 103.ஆத்மாவையே திருடாதே.

தன்னைச் சுதந்திரமான ஆத்மாவாக நினைப்பது திருட்டுக்குற்றம் ஆகும். இப்படி ஆத்மாவைத் திருடக்கூடாது.

**पाप्मनां तमसि पातयितॄणाम् आत्मचौर्यं अधिराजपदस्थम् ।**
**चोदितेन नियतोऽपि हृतात्मा चोरदण्डं अवशात् उपयाति॥**

--- ***யாதவாப்யுதயம்.***

பௌண்ட்ரகவாஸுதேவனின் தூதன் கிருஷ்ணனிடம் சொல்வதாக அமைந்த ச்லோகம். இருபத்தோராவது ஸர்க்கத்தில் இருப்பது.

> நம்மை இருளில் வீழ்த்தக்கூடிய பாவங்கள் பல உண்டு. அவற்றுக்கெல்லாம் ராஜா என்று சொல்லத்தக்கது ஆத்மசௌர்யம் என்பது. சாத்திரநியமங்கள் படி வாழ்ந்தாலும் ஆத்மாவைத் திருடுபவன் திருட்டுக்குற்றத்துக்கான தண்டனையிலிருந்து தப்பமுடியாது. பிறர் பொருளைத் தன் பொருளாகப் பாவித்துப் பயன்படுத்துவது திருட்டுக்குற்றமாகும்.

நமது ஜீவாத்மா பகவானுக்கு அதீனமானது. அவரது உடைமை. இதை நமக்குச் சொந்தமாகப் பாவித்து, நமக்குத் தோன்றிய வழியில் பயன்படுத்துவது திருட்டுத்தனமாகும். சொல்லப்போனால், குற்றங்களுக்குள் தலையாயதாகும் இது. இதை உணராதவர் நேர்மையாக வாழ்ந்தாலும், தண்டனையிலிருந்து தப்பமுடியாது. எதிர்பாராமல் தண்டனை வரும்போது தன்

வசமிழந்து நிற்பது தவிர வேறு வழியில்லை. ஆத்மாவைத்திருடாதே. உரியவனிடமே ஸமர்ப்பித்துவிடு. இதுதான் சரணாகதி என்பது.

## 104.ஆத்மா ஒன்றெனக் கருதாதே.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே. எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மா. என்றெல்லாம் சொல்வார் பேச்சைக் கேட்டுத் தன் ஹிதத்தைப் பண்ணிக்கொள்ளாமல் ஏமாறவேண்டாம்.

**आत्मैक्यं देवतैक्यं त्रिकसमधिगता तुल्यतैक्यं त्रयाणाम्**
**अन्यत्रैश्वर्यं इत्याद्यनिपुणफणिती राद्रियन्ते न सन्तः।**

***---ரஹஸ்யத்ரயஸாரம், பரதேவதா பாரமார்த்யாதிகாரம்.***

நாராயணனே பரம்பொருள் என்பது நமது ஸித்தாந்தம். இதற்கு மாறான கருத்துகள் பலப்பல உண்டு. அவற்றைப் பெரியோர் ஆதரிப்பதில்லை. என்பதை விளக்குகிறார் இந்த அதிகாரத்தின் முதல் ச்லோகத்திலேயே.

> எல்லா ஆத்மாக்களும் ஒன்றே என்பது ஒரு பட்சம். எல்லாத் தேவதைகளும் ஒருவரே என்று ஒரு பட்சம். பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் சமமானவர் என்று ஒரு பட்சம். இம்மூவரும் ஒருவரே என்று இன்னொரு பட்சம். இம்மூவரினும் பரமரானவர் வேறொருவர் என்று ஒரு பட்சம். இவ்வாறாக ஏராளமான கருத்துகள் உண்டு. அவையெல்லாம் அநிபுணர்களின் கூற்றுகள். இவற்றை நல்லோர் ஆதரிப்பதில்லை.

ஆத்மாக்களுக்குள் பேதம் கிடையாது. எல்லா ஆத்மாக்களும் ஒன்றே தான். என்ற அத்வைதக் கருத்தைப் பலர் நம்புகிறார்கள். இதற்குச் சாஸ்த்ரப்ரமாணமும் இருப்பதாகப் பிரமிக்கிறார்கள். ஆனால் இந்த எண்ணம் விபரீதமானது. பக்திப்ரபத்திகளுக்குத் தடையானது. இதுவும் இதுபோன்ற சில அசட்டுக்கருத்துகளும், உலகில் பரவி வந்தாலும் வேதாந்தங்கள் ஏககண்டமாகத் தெரிவிக்கும் கருத்து வேறானது. ஜீவாத்மாக்கள் சரீரத்துக்குச் சரீரம் வேறுபட்டவர்கள். நாராயணனே பரதெய்வம். இந்த அடிப்படைக் கருத்தில் நிர்விவாதமாகத் தெளிவது மிகவும் அவசியம்.

சென்ற நாலு உபதேசங்களையும் சேர்த்துப்பார்ப்போம்.

- ஆத்மோத்கர்ஷம் பேசாதே.
- ஆத்மா உடலே என்னாதே.
- ஆத்மாவையே திருடாதே.
- ஆத்மா ஒன்றெனக் கருதாதே.

## 105. ஆலசியத்தால் அழியாதே.

சோம்பேறித்தனத்தால் அழிந்துபோய்விடக்கூடாது.

**आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति இத்யாதிகளாலே**

*--- ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரம்.*

பாகவதர்களின் பெருமையைக் குறைத்து மதிக்கலாகாது. அதே போல் தன்னிச்சையாக மிக அதிகமாகவும் கொள்ளாமல், சாத்திரங்களில் உள்ளபடியே வ்யவஸ்தை செய்கிறது ப்ரபாவ-வ்யவஸ்தா- அதிகாரம். இதன் ஒரு பகுதியாக சாஸ்த்ரநிஷித்தங்களைத் தவிர்ப்பது பாகவதர்க்கும் முக்கியம் என்று சொல்கிறார்.

> அந்தணர்களை வீழ்த்த விரும்பினால் மிருத்யு பண்ணும் உபாயங்கள் சில உண்டு. அதில் ஒன்று அவர்களைச் சோம்பேறியாக்குவது. இன்னொன்று அவர்களுக்கு ஆஹாரசுத்தியைக் குறைத்து விடுவது. இவ்வாறு மனுஸ்ம்ருதியில் உள்ளது. இத்தகைய வசனங்களிலிருந்து

நாம் அறிவது என்னவென்றால், பாகவதர் தொட்டால் நிஷித்தமானது கூட சுத்தமாகிவிடும் என்றெல்லாம் அதிவாதங்கள் பண்ணக்கூடாது. பிராம்மணன் கெட்டுப்போவது சுலபம். சோம்பல் ஒன்றே போதும் அவனைக் கெடுப்பதற்கு. அவன் தனக்குரிய கருமங்களைச் செய்யாமல் சோம்பேறியாக இருந்து விட்டால், அழிந்துபோவான். அப்படிச் சோம்பாமல் செயல் புரிபவன் கூட உணவுண்பதில் உள்ள நியமங்களைத் தளர்த்திக் கொண்டானானால், அவனுடைய கருமங்கள் வீரியமிழக்கும். பலனளிப்பதில் குறை ஏற்படும். ஆக, ஆலசியம், அன்னதோஷம் என்ற இரண்டும் விப்ரனைக் கெடுப்பவை. (இங்கெடுத்த மனுஸ்ம்ருதி ச்லோகத்தின் இன்னொரு பாதியையும் பார்த்தால், இன்னுமிரு கேடுக்கான வழிகளும் உள்ளனவாம். விப்ரனாய்ப் பிறந்தும் வேதத்தை அப்யஸிக்காமல் விடுதல், ஆசாரத்தில் குறைபாடு என்பவை. இவ்விரண்டும் ஆலசியம், அன்னதோஷம், என்பவற்றால் சம்பவிக்கலாம் ஆகையால் ஒருபாதி ச்லோகத்தை முக்கியமாக மேற்கோள் காட்டினார்.) காயான்னஸ்தலசுத்தி என்ற பெயரில் ஏகதேசிகள் பண்ணும் அதிவாதங்களை நம்பவேண்டாம். சோம்பலை விட்டு ஆஹார நியமங்களுடன் முறைப்படி வாழ்க்கை நடத்துங்கள். பாகவதர்களின் மேன்மையைச் சாக்காக்கிக் கொண்டு நாம் கண்டபடி சோம்பி வாழலாம் என்று சப்பைக்கட்டுகள் வேண்டாம்.

## 106.ஆலய தீபம் அகற்றாதே.

கோவிலில் உள்ள விளக்கை அப்புறப்படுத்தக்கூடாது.

`` आरोपितं प्रदीपं ये नयन्त्यन्यत्र मन्दिरात्।

अन्धास्तेऽपि भविष्यन्ति जन्मानि नव पञ्च च"

--- *பாஞ்சராத்ரரக்ஷை.*

தினமும் கோவிலுக்குப் போகும்போது நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைச் சொல்லும் சந்தர்ப்பத்தில் நாம் கவனமாக அபசாரங்களைத் தவிர்க்க வேண்டும் என்கிறார். அபசாரங்களுள் ஒன்றாகச் சொல்வது இது:

> கோவிலில் ஏற்கெனவே ஏற்றி வைத்த விளக்கைக் கோவிலுக்கு வெளியே யார் கொண்டு செல்கிறார்களோ, அவர்கள் பதினாலு ஜன்மங்கள் குருடர்களாய் பிறப்பார்கள். என்று வராஹபுராணத்தில் உள்ளது.

இந்த அபசாரத்தையும் தவிர்க்க வேண்டும். கோவிலில் ஏற்றப்பட்ட விளக்கு கோவிலிலேயே தான் இருக்கவேண்டும். எரியும் தீபத்தைக் கோவிலிலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. அப்படிச்செய்தால் பாவம். அப்படிச் செய்பவர் குருடராய்ப் பிறவி எடுப்பர், பதினாலு பிறவிகளில். வெளிச்சத்தைக் கோவிலில் குறைத்தவர்களுக்கு வாழ்க்கையிலேயே வெளிச்சம் இல்லாமல் ஆகுமாம், வரவிருக்கும் பிறவிகளில். நாம் புதிதாகக் கோவிலில் விளக்கேற்றப் பிராப்தம். அதற்கு நேர் மாறாக ஏற்கெனவே எரிந்துகொண்டிருக்கும் தீபத்தை வெளியேற்றலாமோ? கூடாது. இந்தக் குற்றத்தைச் செய்தால் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

## 107.ஆச்ரமம் இன்றி இருக்காதே.

பிரம்மசரியம் முதலிய நாலு ஆச்சிரமங்களில் ஏதாவது ஒன்றை ஏற்கவேண்டும். எதுவும் இல்லாமல் நிராச்ரமியாக இருக்கக்கூடாது.

**अनाश्रमित्वावस्था च किं विधायकशास्त्रबलात् अङ्गीक्रियते,**

**लिङ्ग दर्शन मात्राद्वा, तदशक्त्या वा, अन्यतो वा कुतश्चिदिति।**

**न प्रथमः, विधायकादर्शनात्। प्रत्युत "अनाश्रमी न तिष्ठेत्तु दिनमेकमपि द्विजः।"**

**इत्यादि स्मृतिशतैर्निषेधात्**

--- ***சததூஷணி, அறுபத்தைந்தாவது வாதம்.***

அவைஷ்ணவர் சிலர் எந்த ஆச்ரமதர்மத்தையும் அனுஷ்டிக்காமல், ஸ்வைரமாக இருப்பதைக் கண்டிக்கிறார் அலேபகபங்கவாதத்தில்:

> நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் அநாஶ்ரமித்வநிலை அதை விதிக்கும் சாஸ்த்ரபலத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா, அல்லது அதற்கான சில ஹேதுக்கள், சாஸ்த்ரங்களில் இருப்பதாலா, அல்லது, இயலாமையாலா, அல்லது வேறேதோ ஒரு காரணத்தாலா? முதல் காரணம் இருக்க முடியாது. ஆஶ்ரமம்

இல்லாத நிலையை விதிக்கும் சாஸ்த்ரவாக்கியம் எதுவும் காணப்படாததால். அதற்கு மாறாக, “அந்தணன் ஒருநாள் கூட ஆச்ரமம் இல்லாமல் இருக்கக்கூடாது” என்று நூற்றுக்கணக்கான ஸ்ம்ருதிகள் உங்கள் நிலையை நிஷேதிப்பதால்.

நாலு ஆச்ரமங்கள் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவை. பிரம்மசரியம், கிருஹஸ்தாச்ரமம், வானப்பிரஸ்தம், ஸந்யாஸம் என்று. இந்த நாலிலுமே குடுமி, பூணூல், ஸந்தியாவந்தனம் விடக்கூடாது. இந்த நாலு ஆச்ரமத்திலும் இல்லாமல் (அநாச்ரமியாக) ஒருநாளும் இருக்கக்கூடாது என்கின்றன சாஸ்திரங்கள். இவ்வாறிருக்கையில், அசாஸ்த்ரீயமாகத் தங்களை அலேபகர் என்றும் பிரம்மவித் என்றும் சொல்லிக்கொண்டு நாலு ஆச்ரமங்களுக்கும் பஹிர்ப்பூதமான நிலையை ஏற்று அதை நியாயப்படுத்தாதீர். உங்கள் இஷ்டத்துக்கு வேஷம் தரித்து அதைச் சாஸ்த்ரஸம்மதமாக வாதிக்காதீர்.

## 108.ஆடும் செக்காய்ச் சுழற்றாதே.

பிறரைத் துன்புறுத்தித் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளாதே.

**अधिकोन्नतैरपि सुदारुणान्वितैः**

**असकृद्भ्रमत्पशुगणाङ्घ्रिपीडितैः ।**

**विधिसिद्धनैकगुणसस्यसम्पदाम्**

**विरसस्वभावकठिनैरलं खलैः ॥**

***--- ஸுபாஷிதநீவி.***

வடமொழியில் கலம் என்றால் எண்ணெய் ஆட்டும் செக்கு. கலர் என்றால் போக்கிரிகள். இப்படி ஒரே பதத்துக்கு இரண்டு அர்த்தம் இருப்பதால் செக்குகளுக்கும் துராத்மாக்களுக்கும் சிலேடையாக ஒரு சுலோகம் இதோ:

இரண்டும் மிக உயர்ந்த இடத்திலிருந்தாலும் தாருணாந்விதங்கள். (இரண்டு அர்த்தங்களில்) தாருணா என்றால் மரக்கட்டையால் என்று அர்த்தம். செக்கே மரத்தாலானது தான். போக்கிரிகள் தாருணர்களுடன், கொடூரமானவர்களுடன், கூடினவர்கள். செக்கைச் சுற்றிச்சுற் றி எருதுகள் வரும். துஷ்டரைச் சுற்றிச்சுற்றி விலங்கு போன்ற துஷ்டர்கள் அலைவார்கள். பிரமிப்பது என்பதற்கு இரண்டு அர்த்தம். சுழல்வது என்றும் மருள்வது என்றும். செக்கில் மாடுகள் சுழலும். துஷ்டரிடம் விலங்கு போன்றோர் மருள்வர். இரண்டுக்குமே விரஸஸ்வபாவம். செக்கில் ரஸமில்லாத பிண்ணாக்கு மட்டும் மீதமிருக்கும். துர்ஜனனுக்கு ரஸிகத்தன்மை கிடையாது. இரண்டுமே கடினமானவை. தெய்வவசத்தால் பலமடங்கு தான்யங்கள் இருக்கும் இரண்டிலும். இப்படிப்பல ஒப்புமைகளால்

செக்குகளும் போக்கிரிகளும் சமம். இவர்களால் போதும் போதும் என்றாகிவிடும்.

இந்தச் ச்லோகத்துக்கு இன்னும் சில அர்த்தங்களும் உண்டு. இப்பொழுது நமக்குத் தேவையான அறிவுரைகளை மட்டும் இதிலிருந்து பார்ப்போம். உயர்வு இருந்தாலும், கொடியோர் சேர்க்கை தீங்கு தரும் என்பது முதல் பாத அறிவுரை. வாயில்லா ஜீவன்களைப் பாடுபடுத்தக்கூடாது என்பது இரண்டாம் பாத அறிவுரை. அதிர்ஷ்டமடித்தால் போதுமா, அதை ரஸிக்கத் தெரியவேண்டாமா? இது மூன்றாம் பாத அறிவுரை. கடினஸ்வபாவம் கொண்டவரைப் பலரும் விரும்பார் என்பது நாலாம் பாத அறிவுரை. இந்த நாலு நீதிகளும் நமக்குச் செக்கிலிருந்தும் தெரிபவை. போக்கிரிகளிடமிருந்தும் தெரிபவை. செக்கு மேட்டில் இருந்தாலும் மரக்கட்டைமயமானது. காளைகளைச் சுழலவைத்து இழுக்கச்செய்து துன்புறுத்துகிறது. நிறைய தானியங்களை அதில் கொட்டினாலும் ரஸமான எண்ணெயை வெளியில் விட்டுவிட்டு, சக்கையான பிண்ணாக்கை மட்டும் தன்னிடம் வைத்துக்கொள்ளும் செக்கு. கடினமானது. காரியமானபின் எவரும் அதைச் சீந்துவதில்லை. போக்கிரிகள் பிறப்பாலோ பணத்தாலோ உயர்ந்தாலும், கொடூரச்சேர்க்கை உடையவர். அவர்களைச்சூழ்ந்துள்ள பசுப்ராயர்கள் அவர்களுக்குக் கால் பிடிப்பவர். எவ்வளவு ஸம்ருத்தி இருந்தாலும் அதை ரஸிக்கத் தெரியாது. கடின ஸ்வபாவத்தால் பிறர் வெறுப்புக்கு ஆளாவர். இப்படியாக நமக்கு நான்கு நீதிகளைப் போதிக்கின்றன, செக்கும் போக்கிரிக்கூட்டமும். ஆடும் செக்கு மாடுகளைத் துன்புறுத்திச் சுழற்றும். தனக்குப் பிண்ணாக்கு மட்டுமேயானாலும் சுழற்றும். ஈவிரக்கமில்லாமல் கடின சுபாவத்துடன் சுழற்றும். ஆடும் செக்காய்ச் சுழற்றாதீர். ஜீவர்களிடம் கருணை கொள்ளுங்கள்.

105 முதல் 108 வரை சோன்ன நான்கு நீதிகளையும் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆலசியத்தால் அழியாதே.
- ஆலய தீபம் அகற்றாதே.
- ஆச்ரமம் இன்றி இருக்காதே.
- ஆடும் செக்காய்ச் சுழற்றாதே.

## 109. ஆர் கலக்கிடினும் கலங்காதே.

சிறிதும் மனம் கலங்காமல் முழு நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

एतदुक्तं भवति। येषां यावज्जीवं बृहस्पतिप्रभृतिभिरपि प्रतिवादिभिः
संक्षोभ्यमानानां प्रपत्तिशास्त्रार्थे शङ्काशङ्कुर्नाङ्कुरति तेषां तदधिकारः।

---நிக்ஷேபரக்ஷை.

ப்ரபத்திக்கு எதிராகப் பூர்வபக்ஷிகள் சொல்லும் பலப்பல வாதங்களுக்குச் சமாதானம் சொல்லி வரும்போது ப்ராஸங்கிகமாக மஹாவிச்வாஸத்தின் அருமையைச் சொல்கிறார்:

**சொன்ன விஷயம் இது**. யாருக்கு இந்தச் சரணாகதி என்னும் கருமத்தில் அதிகாரம்(அனுஷ்டிக்கத் தகுதி) இருக்கிறது என்றால் முழுநம்பிக்கை உள்ளவர்களுக்கு, திடநம்பிக்கை பூண்டவர்களுக்கு, மஹாவிச்வாசம் கொண்டவர்களுக்கு. அந்த விச்வாஸம் எவ்வளவு இருக்கவேண்டுமென்றால், பிறர் கலைத்தாலும், குறையக்கூடாது. நம் நம்பிக்கையைக் குலைக்க முற்படுபவர் பிருஹஸ்பதியே ஆனாலும், அத்தகையவர் நெடுங்காலம் அதற்காக முயற்சித்தாலும், ஒரு சிறிதும் பிரபத்திசாஸ்திரத்தில் ஐயப்பாடு முளைக்காமல், எவர் உறுதியுடன் இருக்கிறாரோ, அவரே பிரபத்திக்கு அதிகாரி.

பிரபத்தியை எளிதான உபாயம் என்கிறோமே, அது சரியா? செயல் எளிதானது, கடினமில்லை என்பது சரி தான். ஆனால் அதற்குத் தேவையான உள்ளக் கிடக்கை, மன உறுதி, நம்பிக்கை, அவ்வளவு எளிதானதன்று. அந்த நம்பிக்கையைக் குறைப்பதற்காக எத்தனையோ பேர் எவ்வளவோ பிரதிவாதங்கள் எல்லாம் பண்ணினாலும், அதிலெல்லாம் சலித்துவிடாமல், ஒருவன் திடமாகப் பிரபத்தி சாஸ்திரத்தை நம்பி, அனுஷ்டிக்க முன்வந்தால் அவன் தான் தகுதி பெற்றவன். தெளிவின்மை, சந்தேகம், அரைகுறை நம்பிக்கை, இதெல்லாம் தகுதி இழக்கச் செய்பவை.

## 110.ஆயிரம் தடங்கல் முடங்காதே.

எவ்வளவு தடங்கல்கள் வந்தாலும் முடங்கிப்போகாதே.

**सत्यं शतेन विघ्नानां सहस्रेण तथा तपः ।**

**विघ्नायुतेन गोविन्दे नृणां भक्तिर्निवार्यते॥**

**இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.**

***———ரஹஸ்யத்ரயஸாரம், ஸித்தோபாய சோதநாதிகாரம்.***

நல்ல காரியங்களுக்கு நானாவிதத் தடங்கல்கள் வரும் என்கிறார்:

மனிதர்கள் ஸத்யஸந்தராயிருக்க முற்பட்டால் நூறு தடங்கல்கள் வரும். தவம் செய்ய முற்பட்டால் அதற்கு ஆயிரம் தடங்கல்கள் வரும். பகவத்பக்தியில் ஈடுபட்டால் பத்தாயிரம் தடங்கல்கள் வரும். இது விஷ்ணுதர்மத்தில் சொன்ன கருத்து. இது முதலியவற்றால் பிரஸித்தமானது என்னவென்றால், (நாம் தடைகளை மீறி நல்ல பணிகளைச் செய்யவேண்டும் என்பது.)

தடைகள் தோன்றினால் தளர்ந்துவிடக்கூடாது. விக்கினங்கள் வந்தால் விழுந்துவிடக்கூடாது. இடைஞ்சல்கள் ஏற்பட்டால் இடிந்துவிடக்கூடாது. தடைகளைத் தகர்த்தெறி. விக்கினங்களை வீசியெறி. இடைஞ்சல்களை இடித்தெறி. அந்தராயங்களை அகற்றியெறி. நல்ல காரியங்களைப் பண்ணு. ப்ரபத்திக்கு எதிரான வாதங்கள் என்கிற தடங்கல்களையும் முறியடி.

## 111.ஆன்றோர் வழி செல் தயங்காதே.

பெரியவர்களின் வழியைக் கடைப்பிடி.

**धर्मस्य तत्त्वं निहितं गुहायाम् என்னும்படி இருந்தால்**

**महाजनो येन गतस्स पन्थाः என்கிறபடியேற**

**பெரியவனான கண்டுவின் வழியைப் பின்செல்லுகை காணும் நமக்குக் கார்யம்.**

***---அபயப்ரதானஸாரம்.***

கண்டோர் வசநம் உத்தமம் என்ற ஸ்ரீமத்ராமாயண ச்லோகப் பகுதிக்கு வியாக்கியானமாக அமைந்த பகுதியில் இவ்வாறு அருளுகிறார்:

> அறத்தின் உண்மை குகைக்குள் மறைந்துள்ளது என்ற நிலை ஏற்பட்டால் தயங்காமல் பெரியவர் சென்ற வழியே வழியாகும் என்றபடி நாம் செயல்புரிய வேண்டும்.

தற்பொழுதைய சந்தர்ப்பத்தில் கண்டு என்பவர் பெரியவர். அவர் சென்ற வழி அடைக்கலம் புகுந்தவரைக் காத்தல் என்பது. அதையே நாமும் செய்யப் பிராப்தம். சில சூழ்நிலைகளில் நமக்கு எது தர்மம் என்று சந்தேகம் ஏற்படுகிறது. இரண்டு மூன்று வழிகளில் எதை நாம் பின்பற்றலாம் என்று சந்தேகம் வருகிறது. தருமத்தின் உண்மைநிலை மறைந்து கிடப்பதால் நமக்குத் தெரிவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் எந்த வழியில் செல்வது என்று தயங்குகிறோம். இங்கே மஹாபாரதம் நமக்குச் சொல்லும் அறிவுரை ஒன்று உண்டு. பெரியவர்கள் சென்ற வழியில் செல்லுங்கள் என்பது தான் அது. தயங்காமல் ஆன்றோர் வழியில் செல்லுங்கள்.

## 112.ஆஸுரகுணத்தில் அழுங்காதே.

தீய குணங்களில் அமுங்கிப்போகக்கூடாது.

**अनेकमुखपापात्मा छन्नसन्दर्शिताश्रमः।**

**कर्बुरप्रकृतिः कश्चित् कापेयकलहोचितः॥**

***---ஸுபாஷிதநீவி.***

போக்கிரிகளைப் பற்றிய கலபத்ததியில் உள்ள சுலோகம் இது: ராவணனுக்கும் தற்காலப் போக்கிரிக்கும் பொதுவாகப் பொருள் வரும்படி அமைந்த சுலோகம்.

ராவணன் பத்து முகங்களை உடைய பாபாத்மா. இந்தப் போக்கிரியோ பலமுகமாகப் பாவம் செய்பவன். இருவரையும் அநேகமுகபாபாத்மா என்னலாகும். இரண்டாவதாக, ராவணன் ஸந்யாஸிவேஷம் போட்டு ஏமாற்றினான். இந்தப்போக்கிரியோ நாலு ஆச்ரமங்களில் ஒன்றைக் கபடமாக வெளிப்பார்வைக்கு மட்டும் காண்பிக்கிறான். உண்மையில் எந்த ஆச்ரமதருமத்தையும் செய்வதில்லை. வெளிவேஷம் மட்டும் தான். மூன்றாவதாக, ராவணன் ராக்ஷஸனானபடியால், ஆஸுரப்ரக்ருதியாக இருந்தான். இந்தப் போக்கிரியும் ஆஸுரகுணங்களைக் கொண்டவன். இந்தக் காரணங்களால் ராவணனை ஒத்த இவனுக்கு முடிவிலும் ஒப்புமை இருக்குமோ? வானரர்களுடன் சண்டையிட்டான் ராவணன். இந்தப் போக்கிரியோ, சபலபுத்தியால் (இதற்கும் குரங்குத்தனம் என்று பெயர்) வீண் கலகங்களுக்குப் போகிறான்.

செயல்களுக்குக் காரணம் குணங்கள் தானே. ஆஸுரகுணம் அமைந்துவிட்டால், பலபடியான பாவச்செயல், கபடத்தன்மை, நிலைகொள்ளாத கலகம், எல்லாம் நேரிடும். இவற்றைத் தவிர்க்க முதலில் டம்பம், திமிர், முதலிய ஆஸுரகுணங்களிலிருந்து நாம் வெளிவர வேண்டும்.

கடந்த நாலு அறிவுரைகளைச் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆர் கலக்கிடினும் கலங்காதே.
- ஆயிரம் தடங்கல் முடங்காதே.
- ஆன்றோர் வழிசெல் தயங்காதே.
- ஆஸுர குணத்தில் அமுங்காதே.

## 113. ஆத்தும வித்யையை இரைக்காதே.

அத்யாத்ம ரஹஸ்யங்களைக் கண்டவர்க்கும் வாரியிரைக்கக் கூடாது.

**அஷ்டகர்ணமாக வெளியிட்டு... ஆஸுரப்ரக்ருதிகளுக்கு மறைத்து சீரிய தனமுடையார் சேமித்து வாழுமாப்போலே சரிதார்த்தராய் வர்த்திப்பார்கள் பூர்வாசார்யர்கள்.**

**--- *ரஹஸ்யத்ரயஸாரம். ஆசார்யக்ருத்யாதிகாரம்.***

ஆசார்யனின் கடமைகளை வரிசையாகச் சொல்லும்போது, ரஹஸ்யார்த்தங்களைத் தகாதவர்களுக்குக் கற்பிக்காமல் இருப்பதையும் ஒரு கடமையாகச் சொல்கிறார்.

(**ஆறாம் காதுக்கு எட்டாமல், அதாவது**) மூன்றாம் மனிதனுக்குத் தெரியாமல், வெளியிடவேண்டும். ஆஸூரஸ்வபாவம் (**தீய இயல்பு**) கொண்டவர்களுக்கு மறைக்கவேண்டும். ரஹஸ்யார்த்தத்தைச் சிறந்த பொக்கிஷமாகப் பாவிக்கவேண்டும். அதைக் கண்டபடி வாரியிறைக்கக் கூடாது. இதனாலேயே கிருதார்த்தர்களாய் வாழ்வார்கள் நம் பூர்வாசாரியர்கள்.

ஆழ்பொருளை அறிவிக்கும்போது அதைச் சிந்தாமல் இருக்கவேண்டும் என்பார் ஒரு ஆழ்வார். சிந்துவதாவது தேவையற்ற இடத்திலோ, தகுதியற்ற இடத்திலோ, அதன் ஒரு பகுதி சென்றடைய விடுவது. மந்த்ரங்களும் மந்த்ரார்த்தங்களும் ரகசியமானவை. பகிரங்கமாக அறைகூவி அழைத்து அனைவர்க்கும் உபதேசிக்கக் கூடியவை அல்ல. நம் பூர்வாசாரியர்கள் அவ்வாறு செய்யாமல் விழிப்புடன் வர்த்திப்பார்கள். இதனால் ஏகதேசிகள் பகவத்ராமானுஜரின் வரலாற்றில் திருக்கோட்டியூரில் நடந்ததாக வழங்கும் ஐதிஹ்யம் ஒன்றை ஸ்வாமி தேசிகன் முற்றும் உண்மையானதாகக் கருதவில்லை என்று தெரிகிறது. உண்மை நிகழ்ச்சி ஒன்றின் அடிப்படையில் மிகைப்படுத்திய ஐதிஹ்யம் அது. பிரம்மோபதேசம் செய்யும்போது, விழாப்பந்தலில் பலர் முன்னிலையில் உபதேசம் செய்ய நேர்வதால், பட்டால் மூடி மறைத்துக்கொண்டு மந்திரத்தை உபதேசிக்கும் வழக்கம் தொன்றுதொட்டு வருகிறது. இதன் காரணமும் இதுவே தான்.

## 114.ஆசைவெறியரைப் பார்க்காதே.

காமவெறி கொண்டவர்களைப் பார்க்காமல் தவிர்க்க வேண்டும்.

**मित्रस्य लुप्ततमसोऽप्यतिरागभाजः**
**संप्रेक्षणं मम न युक्तमितीव मत्वा।**
**मीलत्यसौ कुमुदिनी सह तारकाभिः**
**प्राप्तं व्रतं तदिह राजपरिग्रहाणाम्॥**

--- ***யாதவாப்யுதயம், பத்தொன்பதாம் ஸர்க்கம்.***

சூரியோதயத்தை வருணிக்கும் பகுதியில் கவிநயம் மிகுந்த அனேக சுலோகங்களில் இதுவொன்று: சூரியோதயக் காலத்தில் ஆம்பற்கொடி மலரிதழ்களை மூடிக் கூம்பிக்கொள்கிறது. இதற்கு என்ன காரணமாயிருக்கும் என்று ஒரு உத்ப்ரேக்ஷை.

இந்தக் குமுதிநீ (ஆம்பல்) என்ற பெண் ராஜபரிக்ரஹமானவள். (அரசனின் மனைவி என்றும் சந்திரனின் அபிமானம் பெற்றவள் என்றும் இரண்டு அர்த்தங்கள். முதல் அர்த்தம் உத்ப்ரேக்ஷைக்குப் பொருந்துவது. இரண்டாம் அர்த்தம் உண்மை நிலைக்கு). காலையில் அங்கு வரும் சூரியன் என்னும் நண்பனோ மிகவும் ராகம் கொண்டவன். (ராகம் என்றால் செந்நிறம் என்றும் காதல் என்றும் இரண்டு அர்த்தங்கள். முதல் அர்த்தம் உண்மை நிலைக்குப் பொருந்தும். இரண்டாவது அர்த்தம் உத்ப்ரேக்ஷைக்குப் பொருந்தும்.) இப்படி

ராகமுள்ள நண்பன் கைநீட்டிக்கொண்டு வந்தால் நற்பண்புடைய பெண்ணான குமுதிநீ என்ன பண்ணுவாள்? ஆசை வெறியரைப் பார்க்கக் கூடாதன்றோ? மற்ற ராஜபத்தினிகளான நக்ஷத்திரங்கள் என்ன பண்ணுகின்றன என்று பார்த்தால், கண்மூடிக்கொள்கின்றன. (இரவில் கண்சிமிட்டும் விண்மீன்கள் காலையில் தெரிவதில்லை.) அதே போல இந்தக் குமுதிநியும் கண்மூடிக்கொள்ள நினைத்து மலர்களைக் கூம்பச் செய்கிறாள். இவ்வாறாக அவளுடைய விரதம் நிறைவேறியது. (ஆசையுடன் வரும் பரபுருஷனைப் பார்க்கலாகாதென்கிற விரதம்).

வார்த்தைகளில் விளையாடுவதும் இந்தச் சுலோகத்தில் உண்டு. சூரியன் வந்தபோது தமஸ் போயிற்றே யொழிய ரஜஸ் போக வில்லையே என்ற வேடிக்கை முதல் பாதத்தில் தொனிக்கிறது. மித்ரன், ராஜா, ராகம், பரிக்ரஹம், என்ற வார்த்தைகளின் இரு பொருட்கள் கச்சிதமாக இந்த உத்ப்ரேக்ஷைக்குப் பொருந்துவதை ரசிகர்களான உரையாசிரியர்கள் காண்பிப்பர். தாரகா என்ற சொல்லிலும் சிலேடை (நக்ஷத்திரம் என்றும் கண்விழி என்றும்) பொருந்துவதை உரைக்காரர்கள் விட்டுவிட்டாலும், ஸம்பிரதாயமாகக் காவ்யபாடம் சொல்லித் தருபவர்கள் இது போல மேலும் பல நுண்ணிய அர்த்தவிசேஷங்களையும் சொல்வதுண்டு. ஆனால் நமக்கு இங்கு தேவையானது அறிவுரை மட்டும் தான். நண்பனாயினும் நாம் பழகும்போது முன்னெச்சரிக்கையாய் இருக்கவேண்டும். அதி–ராகத்தைப் புரிந்துகொண்டு அது வளராமல் அறுக்கவேண்டும் என்பது முதல் பாதத்து அறிவுரை. இளம்பெண்கள் ஆசைவெறி கொண்ட புருஷர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கலாகாது. அவனைப் பார்த்து, சல்லாபங்கள் பண்ணி, அவனைக்கிளர்ச்சி கொள்ளச்செய்த பிறகு, தான் அவனுக்கு வசப்படாமல் இருந்தால் போயிற்று என்று சில நவநாகரிகப் பெண்கள் நினைக்கலாம். ஆனால் உணர்ச்சிகளே எழாதபடி முளையிலேயே கிள்ளவேண்டும் என்பது தான் நன்னெறி. ஆசைவெறியரைப் பார்க்கவே கூடாது. இது இரண்டாம் பாதத்தில் சொன்ன அறிவுரை. மேலோர் நடத்தையை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பது மூன்றாம் பாதத்து அறிவுரை. உயர்குலத்தோருக்குக் கட்டுப்பாடுகள் அதிகம் என்பது நாலாம் பாதத்து அறிவுரை. தெருக்கூத்துக்காரிகள் இத்தகைய விரதம் மேற்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் ராஜஸ்த்ரீக்களுக்கு விரதம் கடுமையாக இருக்கும்.

## 115.ஆசைப்பிடியில் சிக்காதே.

ஆசை பொல்லாதது. அதன் பிடியில் நீ மாட்டிக்கொள்ளாதே.

विमोकशब्दस्यात्र “कामः क्रोधस्तथा लोभ” इत्याद्युक्तत्याज्यवर्गानुपश्लेष

परतयाकामानभिष्वङ्ग इति मूलघातोक्तिरित्यभिप्रायः।

कामोऽत्र तीव्रतमसङ्कल्पः। तेनाभिष्वङ्गः अनुवृत्त दृढग्रहणम्।

तदभावे “कामात्क्रोधोऽभिजायते” इत्युक्तपरम्परानिवृत्तिः।

***--- தத்வடீகா.***

விவேகம் முதலான ஏழில் இரண்டாவது விமோகம் என்பது. அதை விளக்கும் ஸ்ரீபாஷ்யஸூக்தி ‘‘விமோக: காமாநபிஷ்வங்க இதி’’ என்றுள்ளது. இதற்கு உரையிடும் பகுதி தத்வடீகையில் இவ்வாறுள்ளது.

> விமோகம் என்பதற்கு விடுபடுதல் என்று அர்த்தம். காமம், குரோதம், உலோபம், முதலிய எல்லாத் தியாஜ்ஜியங்களும் ஒட்டாதிருப்பதைக் குறிக்கும். ஸ்ரீபாஷ்யத்தில் காமத்தின் அநபிஷ்வங்கம் என்று மட்டும் உள்ளது. குரோதத்தையோ உலோபத்தையோ வெளிப்படையாகச்சொல்லவில்லை. ஏனென்றால் காமம் தான் அவற்றுக்கும் காரணம். காமத்தை அழித்தால் அது மூலகாதம். மற்றவையும் தானே அடிபட்டுப்போகும் என்று கருத்து. இங்கே காமம் என்பது மிகத் தீவிரமான விருப்பம். அதன் அபிஷ்வங்கம் என்றால் தொடர்ந்ததும் உறுதியானதுமான விடாப்பிடி. அது இல்லாதிருந்தால் அதிலிருந்து தோன்றும் கோபம் முதலியனவும் நீங்கும்.

இந்தப் பங்க்திகளில் தீவிர ஆசையைப் பற்றி நான்கு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். ஒன்று, அது கோபம் லோபம் முதலிய மற்ற தீய குணங்களுக்கும் வேரானது. இரண்டு, அதன் பிடி அநுவ்ருத்தமானது. சிறிது காலத்துக்குப் பின் தானே போகாது. விடாமல் தொடரும். மூன்று, அதன் பிடி உறுதியானது. தளர்த்தாத பிடி. அந்தப் பிடியில் சிக்கியவர்கள் மீள்வது கஷ்டம். நான்கு, அந்தப் பிடியில் சிக்காமலிருந்தால், (இது தான் விமோகம் என்பது), மற்ற தீய பண்புகளான கோபம், உலோபம், முதலியனவும் ஒன்றன் பின் ஒன்றானவை நீங்கிவிடும். ஆகையால் ஆசைப்பிடியில் சிக்காமல் பார்த்துக்கொண்டால் போதும்.

## 116.ஆழிப்பொறியரைப் பழிக்காதே.

(ஸமாச்ரயணம் பண்ணி) சங்கு சக்கர முத்திரை பொறித்துக் கொண்டவர்களை நிந்திக்கலாகாது.

ब्रह्मवैवर्ते । चक्राङ्कितभुजं मर्त्यं यो निन्दयति सर्वदा ।
स याति नरकं घोरं यावदाभूतसंप्लवम् ॥
इत्यादीनि परश्शतानि प्रमाणानि विद्यन्ते ।

--- ***ஸச்சரித்ரரக்ஷா.***

வைஷ்ணவர்கள் சங்க சக்கரங்களைத் தோளில் இலச்சினையாகத் தரிப்பது தொன்றுதொட்டு வரும் வழக்கம் என்றும் ஏராளமான ப்ரமாணவசனங்கள் அதற்கு உண்டு என்றும் தெரிவிப்பதற்காக இந்தப்பகுதி.

> பிரம்மவைவர்த்த புராணத்தில் இவ்வாறு உள்ளது. சக்கரப் பொறியைத் தோளில் ஒற்றிக்கொண்ட மனிதனை எவன் எப்பொழுதும் நிந்திக்கிறானோ, எவன் பிறர்

மூலம் நிந்தை செய்விக்கிறானோ, அவன் கோரமான நரகத்தை அடைகிறான். பிரளயகாலம் வரை அந்த நரகத்தில் இருப்பான். இவ்வாறு நூற்றுக் கணக்கில் பிரமாணவசனங்கள் இருக்கின்றன.

நீங்கள் பிறரை நிந்திக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், கோபதாபங்கள் உண்டானால், வைவதற்கு முன் ஒருதடவை எதிராளியின் தோளில் சக்கர அடையாளம் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துக் கொள்ளுங்கள். இருந்தால், கப்சிப்பென்று வந்தவழியே போய்விடுங்கள். வையாதீர்கள். ஏனென்றால் அவர்களை வைதால் உங்களுக்கு நேரும் விளைவு கொடியது. கொடூரமான நரகத்தில் நீண்ட காலம் துன்புறவேண்டியதாகும். ஏன் வம்பு? இப்பொழுதே மனதையும் நாக்கையும் கட்டுப்படுத்தி, சக்கரப்பொறி தரித்தவரைப் பழிக்காமல் இருந்து விடுங்கள்.

கடந்த நான்கு அறிவுரைகளின் சுருக்கம் வருமாறு:

- ஆத்தும வித்யையை இரைக்காதே.
- ஆசை வெறியரைப் பார்க்காதே.
- ஆசைப்பிடியில் சிக்காதே.
- ஆழிப்பொறியரைப் பழிக்காதே.

## 117. ஆரணமுரைத்ததைத் தள்ளாதே.

வேதத்தின் எந்தப்பகுதியையும் தள்ளாமல், எல்லாவற்றையும் பிரமாணமாக ஏற்கவேண்டும்.

**कृत्स्नवेदप्रामाण्ये निश्चिते सति सर्वेषामन्यतमस्य त्यागायोगाच्च।**

***--- தத்வடீகா.***

ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே என்ற ஸ்ரீபாஷ்யப்பகுதிக்கு உரையிடுகையில் இது:

முழுவேதத்துக்கும் ப்ராமாண்யம் நிச்சயிக்கப்பட்டதால் அவற்றுள் ஒன்றை விட்டுவிடுவது கூடாதாகையால் ஸர்வகாரணம் ப்ரம்மம் என்பதையும் ஒன்றே ப்ரம்மம் என்பதையும் நாராயணனே ஜகத்காரணம் என்பதையும் அவன் ஸ்ரீபதி என்பதையும் எல்லாவற்றையும் இசைவதால் ப்ரம்மமே ஸ்ரீநிவாஸன் என்கிறார்.

நமது ஸித்தாந்தப்படி, வேதம் முழுவதும் பிரமாணமாக ஏற்கத்தக்கது. எந்தப் பகுதியையும் தள்ளவேண்டாம். மற்ற (வைதிக)மதத்தவர் தங்கள் ஸௌகரியத்துக்கேற்ப, சில பகுதிகளை மட்டும் பிரமாணமாக ஏற்று, இன்னும் சிலவற்றைத் தள்ளுவர். நாம் அப்படியன்று. எல்லாவற்றையும் ஒட்டவைத்து ஸர்வம் ஸமஞ்ஜஸம் என்போம் நாம்.

## 118.ஆரையும் பகைத்துக் கொள்ளாதே.

எவரிடமும் பகை பாராட்டாதே.

सव्वेसु पि णिव्वेरा सरणाग असच्च गहिअ सास अ धम्मा।
ग असङ्गा तुह भत्ता

--- *அச்சுதசதகம்.*

திருமாலடியவர்கள் எத்தகையவர் என்பதைச் சொல்கிறார் பிராகிருத மொழியில்.

> அடியவர்க்கு மெய்யனே! உன் பக்தர்கள் எல்லாரிடமும் பகையின்றி இருக்கிறார்கள். (யாரிடமும் பகை பாராட்டுவதில்லை). சாச்வதமான தர்மத்தைக் கைக்கொள்கிறார்கள். தடங்கல் இன்றி இருக்கிறார்கள்.

அச்சுதனின் பக்தர்கள் யாரையுமே பகைத்துக்கொள்வதில்லை. அவர்களுக்கு எதிரிகள் யாரும்இல்லை. இதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பாகக் காட்டுகிறார். ஒன்று, வைரம் (பகை) தோன்றுவதற்கான ஹேது இவனுக்குக் கிடையாது. இரண்டு, வைரமின்மை பக்தியின் விளைவு. மூன்று, வைரம் பக்திக்குத் தடையானது. முதல் காரணத்தின் விளக்கம் வருமாறு; பணத்துக்கோ பதவிக்கோ அடிமையானவன் அது தனக்குப் பொய்த்துவிடுமோ என்றஞ்சி, அபஹரிப்பவர்களையும் போட்டியாளர்களையும் பகைப்பான். ஆனால் பெருமாளுக்கு அடிமையானவன் யாரையும் பகைக்கத் தேவை யில்லை. பெருமாள் அடியவர்க்கு மெய்யன் ஆனபடியால் நம் விருப்பம் பொய்க்காது. இதை சரணாகதஸத்ய என்ற விளியால் தெரிவிக்கிறார். அவன் அச்சுதனானபடியால் நம்மை நழுவவிட மாட்டான். அதனால் யாரையும் பகைக்கத் தேவையில்லை. இரண்டாவது காரணத்தின் விளக்கம் வருமாறு: பகவத்பக்தியால் நற்பண்புகள் வளரும். பக்தன் பொன்றா அறத்தையே பற்றிக்கொள்வான். அவன் ஸர்வபூதஸுஹ்ருத்தாகி விடுகிறான். இந்தக் காரணத்தை கஹிஅ ஸாஸ அ தம்மா என்ற பதத்தால் ஸூசித்தார். மூன்றாவது காரணத்தின் விளக்கம் வருமாறு: யாரையாவது பகைக்க நேர்ந்தால் அவனுடைய நேரமும் வீணாகி, முனைப்பும் சிதறி, பக்தி தடைப்படும். இதை கதஸங்கா: என்ற பதத்தால் ஸூசித்தார். ஸங்கம் என்றால் ஆசை என்றும் தடை என்றும் இரண்டு அர்த்தங்கள். அதனால் யாரையும் பகைவராகக் கொள்ளவேண்டாம். எல்லாரும் நண்பரே.

## 119.ஆடம்பரமாய்த் துள்ளாதே.

தன்னைப் பற்றி டமாரம் அடித்துக்கொள்வது கூடாது.

स्थलपरिशेषितजलधेः सविधे सञ्जातडम्बरं जलदम्।
प्रहसन्ति पाण्ड्यनद्यः शुक्तिमुखैर्मौक्तिकस्त्यानैः॥

--- *ஸுபாஷிதநீவி.*

முதலாவதான அநிபுணபத்ததியில் சொல்லும் நீதிகளில் இது ஒன்று.

கடலை முழுதுமாகக் குடித்துவிட்டுத் தரையை மட்டும் மிச்சம் வைத்த அகத்தியரின் முன்னிலையில் சிறிது கடல் நீரைக் குடித்துவிட்டு இடிக்கின்ற மேகத்தைக்கண்டு பாண்டியநாட்டு நதிகள் பரிஹாஸம் செய்கின்றன, முத்துச்சிப்பி வாய் முத்துகளாலே.

தம்பட்டம் அடித்துக் கொள்பவர்களே! உங்களுக்கு மூன்று யோசனைகள். நீங்கள் சாதனைகள் உண்மையாகவே புரிந்திருந்தாலும், உங்களைவிட அதிகச்சாதனை புரிந்தவர்கள் இருக்குமிடத்தில் தம்பட்டம் அடித்துக்கொள்ளவேண்டாம். மௌனமாயிருங்கள். இது முதல் பாதத்து அறிவுரை. அளவோடு பீற்றிக் கொள்ளுங்கள். பெரிய ஆடம்பரங்களெல்லாம் பண்ண வேண்டாம். ஊரைக்கூட்டித் தண்டோரா போடவேண்டாம். இது இரண்டாம் பாதத்தில் சொன்ன அறிவுரை. பெண்கள் மத்தியில், அதுவும் புத்திசாலிப் பெண்களிடையில், உங்கள் வண்டவாளம் வெளிப்பட்டால், ஏளனத்துக்கு ஆளாகநேரும். ஆகையால் விழிப்புடன் இருங்கள். இது மூன்றாம் பாதத்தில் சொன்ன அறிவுரை. இந்த மூன்று அறிவுரைகளையும் நேரடியாகச் சொல்லாமல் அந்யாபதேசமாகச் சொல்கிறார். இதில் சிறிது உத்ப்ரேக்ஷையையும் கலக்கிறார். உத்ப்ரேக்ஷைக்கு ஆதாரமான உண்மைகள் இரண்டு: ஒன்று, மழைக்காலத்தில் இடிமேகம் வரும்போது மட்டும் சிப்பிகளிலிருந்து முத்து வெளிவரும். இரண்டு, அகத்திய முனிவர் வாழும் பாண்டியநாட்டில் மட்டும் முத்து உற்பத்தியாகிறது. இவ்விரண்டு உண்மைகளின் அடிப்படையில் கவி புனையும் கற்பனை இதோ: வெள்ளை வெளேரென்று வெளிப்படும் முத்துகள் நதிப் பெண்டிரின் சிரிப்பு நகையாடல்கள். யாரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்? இடிக்கும் மேகத்தைப் பார்த்து. என்னவென்று? "ஏ மேகமே! ஏன் இடிகோஷம் போடுகிறாய்? கொஞ்சம் சமுத்திர ஜலத்தைக் குடித்ததால் பெருமை தாங்கவில்லையோ? அடக்கமுடியாமல், டமாரம் அடிக்கிறாயே! இதோ அருகில் இருக்கும் அகத்தியர் முழுதுமாகக் கடலைக் குடித்தவர் சிறிது கூடத் துள்ளாமல் மௌனமாக இருக்கிறாரே! அவர் அருகிலா நீ உன் ஜம்பத்தைக் காட்டுவது? இடம் தெரிந்து முழங்கவேண்டாமோ? எங்களுக்கெல்லாம் சிரிப்பாய் வருகிறதே உன் கோஷத்தைக் கேட்டால்."

## <u>120.ஆச்ரிதர் குறையை உள்ளாதே.</u>

நம்மை அண்டினவரின் குறையை நாம் பொருட்படுத்தக் கூடாது .

**आश्रितजने दोषदर्शिनः कापुरुषा इति ह्याहुः।**

**अतोऽत्र दिदृक्षमाणे स्वस्मिन् दोषानादररूप निरतिशयपौरुषं**

**पुरुषोत्तमशब्देन विवक्षितमित्यभिप्रायेण आश्रितवात्सल्यजलध इत्युक्तम्**

--- ***<u>தாத்பர்யசந்த்ரிகா.</u>***

த்ரஷ்டுமிச்சாமி தே ரூபம் ஐச்வரம் புருஷோத்தம என்ற பகவத் கீதாச்லோகத்து பாஷ்யத்துக்கு உரையிடுகையில் இது உள்ளது.

எவர் தம்மை ஆச்ரயித்தவரிடம் குறைகளைக் காண்கின்றார்களோ அவர்கள் கோழைகள் என்பர். ஆகையால் இவ்விடத்தில் (கண்ணனின் விச்வரூபத்தைக்)

காண விரும்பும் தன்னிடம்(அர்ஜுனனிடம்) உள்ள குறைகளைப் பொருட்படுத்தாமை என்கிற மிகப்பெரிய பௌருஷம் புருஷோத்தம என்ற சொல்லால் இங்கே கருதப்பட்டது என்கிற கருத்தால் ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே என்னப்பட்டது.

மூலத்தில் (கீதையில்) புருஷோத்தம என்று உள்ளது. அந்த இடத்துப் பாஷ்யத்தில் ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே என்றிருக்கிறது. பகவத் ராமானுஜர் ஏன் இப்படி அர்த்தம் சொன்னார்? புருஷோத்தமனாயிருப்பது வேறு; அண்டினவரிடம் பரிவு கொள்வது வேறு. ஏன் தவறாக அர்த்தம் சொல்கிறார்? என்ற ஸஹஜமான ஓர் ஆக்ஷேபத்துக்கு ஸ்வாமி தேசிகன் தாத்பர்ய சந்திரிகையில் அருளும் பதில் இது: தன்னை நம்பி ஆச்ரயித்தவனிடம் வாத்ஸல்யம் இல்லாமல் அவனிடம் குறைகளைக் காண்பது கோழைகளின் செயல். உத்தம புருஷர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள். புருஷோத்தமன் ஆச்ரித வாத்ஸல்ய ஸமுத்திரமாக இருப்பான். இந்தப் பிரகரணத்தில் அர்ஜுனன் ஆச்ரிதன். அவனுக்குக் கிருஷ்ணனின் விச்வரூபத்தைக் காண ஆசை. கிருஷ்ணனுக்கு அர்ஜுனனிடம் வாத்ஸல்யம் நிறைய இருந்தால் தான் இந்த ஆசை நிறைவேறும். இவ்வளவு வாத்ஸல்யத்தைச் சாதாரண மனிதர்களால் பொழியமுடியாது. அதனால் புருஷோத்தம என்று கூப்பிட்டு ''உன் ஈச்வர ரூபத்தைக் காண விரும்புகிறேன்'' என்று அர்ஜுனன் கண்ணனிடம் சொல்கிறான். நமக்கு இப்போது வேண்டிய அறிவுரையின் ஸாரம் என்னவென்றால், அண்டி வந்தவரிடம் குறைகளைப் பெரிதுபடுத்துவது அதமர்களின் செயல் என்பது. நாம் அவ்வாறு பண்ணக்கூடாது. நம்மை ரக்ஷகராகவோ உதவுபவராகவோ நம்பி ஒருவர் நம்மை ஆச்ரயித்தால், அவர்களிடம் பரிவும் இரக்கமும் கொள்ளவேண்டும். குறைகளைப் பொருட்படுத்தாமை தான் வாத்ஸல்யம் என்பது. தன்னை ஆச்ரயித்தவனிடம் வாத்ஸல்யம் கொள்ளாதவன் காபுருஷன், கோழை, நீசன்.

கடந்த நான்கு நீதிகளையும் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆரணம் உரைத்ததைத் தள்ளாதே.
- ஆரையும் பகைத்துக் கொள்ளாதே.
- ஆடம்பரமாய்த் துள்ளாதே.
- ஆச்ரிதர் குறையை உள்ளாதே.

## 121. ஆலயத்துக்குள் உண்ணாதே.

கோவிலுக்குள்ளே சாப்பிடக்கூடாது.

**अपचारास्तथा विष्णोः द्वात्रिंशत्परिकीर्तिताः।**

**यानैर्वा पादुकैर्वापि गमनं भगवद्गृहे॥ ...**

**शयनं भोजनं चैव॥... एवं भगवन्मन्दिरे सावधानः परिहृतापचारः**

--- *பாஞ்சராத்ரரக்ஷா.*

நாம் நித்தியப்படி காலையில் கோவிலில் எந்த அபசாரமும் நேராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும் சொல்லும்போது என்னென்ன அபசாரங்கள் என்பதை அடுக்கிக் கொண்டே போகிறார் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில். அதில் ஒரு பகுதி இது:

> பெருமாளிடம் அபசாரங்கள் முப்பத்திரண்டு சொல்லப்பட்டன. கோவிலில் வாஹ னங்களுடனோ செருப்புகளுடனோ போவது, ...படுத்துக்கொள்வது, சாப்பிடு வது,... இப்படியான அபசாரங்களையெல்லாம் கோவிலிலே தவிர்த்து விழிப்புடனே இருக்கவும்.

அபசாரங்கள் முப்பத்திரண்டு மட்டுமே இல்லை. மேலும் பலப்பல உண்டு. அவற்றுள் முப்பத்திரண்டைச் சொல்பவர்களும் வெவ்வேறு விதமாகச் சொல்வதுண்டு. அதில் ஒருவிதக் கணக்கீடு இங்கே தரப்பட்டது. இதில் பத்தாவது அபசாரமாகக் கோவிலில் சாப்பிடுவதைச் சொல்கிறார். இருபத்தைந்தாவது அபசாரமாக, பெருமாளுக்கு அமுது செய்விக்காததைச் சாப்பிடுவதைச் சொல்கிறார். இந்த முப்பத்திரண்டுமே கோவிலில் பண்ணத்தகாதவை என்கிறார். இதிலொரு சந்தேகத்துக்கு இடமுண்டு. கோவிலில் சாப்பிடவே கூடாது என்று சொல்லியபின், கோவிலில் பெருமாளுக்கு நிவேதனம் பண்ணாததைச் சாப்பிடக்கூடாது என்று சொல்வது சரியோ? பௌராணிகர் ஏன் இப்படிச் சொல்கிறார்? இதற்கு விடை நம் பெரியோரின் அனுஷ்டானத்தில் தெரிகிறது. கோவிலுக்குள் கர்ப்பக்கிருகத்துக்கு ஸமீபத்தில் எந்த உணவையுமே சாப்பிடக்கூடாது. வெளி மண்டபத்திலோ த்வஜஸ்தம்பத்துக்கு வெளியில் ப்ராகாரத்திலோ, கோஷ்டியிலோ,அந்தப் பெருமாள் ப்ரஸாதமாக ஏற்ற உணவை மட்டும் உட்கொள்ளலாம். மற்ற அன்னத்தை ஆலயவளாகத்தின் எந்தப் பகுதியிலுமே சாப்பிடக்கூடாது. வெளியிலிருந்து கொண்டு வந்த உணவைக் கோவிலுக்குள் வைத்துச் சாப்பிடுவது, கோவில்வளாகத்துக்குள்ளேயே பகவானுக்கு ஸமர்ப்பிக்காத உணவை உட்கொள்ளச் செய்வது, வீட்டுவிழாக்களின் சாப்பாட்டுப்பந்தியைக் கோவிலில் வைத்துக்கொள்வது, இதெல்லாம் முப்பத்திரண்டு அபசாரங்களில் பத்தாவதில் சேர்ந்தவை. கோவிலுக்கு வெளியில் சாப்பாட்டுக் கூடத்தில் செய்ய வேண்டியதைக் கோவிலில் செய்து பகவானிடம் அபசாரப்படுவதைத் தவிர்க்கவேண்டும். இதில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் (ஸாவதாந) என்றும் இவை நேராமலிருக்க முனையவேண்டும் என்றும் (பரிஹ்ருத) வலியுறுத்துகிறார். பகவத் ஸந்நிதி களைப் பொதுப்பணியிடங்களாக உபயோகப் படுத்தும்போது, அந்த ஆலயத்தின் சாத்திர விதிகளுக்கு உட்பட்டுத்தான் பண்ணவேண்டும். பெருமாள் பிரஸாதம் இல்லாத ஒன்றைக் கோவிலிலே சமைப்பதும் பரிமாறுவதும் சாப்பிடுவதும் பெரும்பிழை என்று புராணக் கருத்து.

## 122.ஆத்தும நிந்தை பண்ணாதே.

தன்னைத்தானே அதிகமாகப் பழித்துக்கொள்ளக்கூடாது.

> ननु “आत्मनिन्दात्मपूजा च” इति स्वनिन्दाऽपि निषिद्धा।
> सत्यम्। न तु सर्वत्र। यथा खल्वाञ्जनेयादेः स्वप्रशंसा क्वचित् गुणः।
> तथाऽत्मनिन्दाऽप्येतस्य स्वदैन्यख्यापनस्थले॥ इति
>
> --- ***ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.***

ஆளவந்தார் ஸ்தோத்திரத்தில் திககுசிம் என்று தொடங்கும் சுலோகத்தில் தம்மை மிக இழிவாகப் பேசுமிடத்தில் ஸ்வாமி தேசிகனின் உரைப்பகுதி இது:

> இவ்வாறு செய்யலாமோ? ''தற்புகழ்ச்சி போலத் தற்பழிப்பும் கூடாது'' என்ற வசனப்படி தன்னை இழிவுபடுத்திப் பேசுவதும் நிஷித்தம் அன்றோ? என்றால் உண்மை தான். ஆனால் எல்லா இடத்திலும் அவ்வாறு கிடையாது. ஆஞ்ஜநேயர் (போர்க்களத்தில்) தற்புகழ்ச்சி பண்ணிக்கொண்டது எவ்வாறு நற்பண்பாகுமோ, அது போலவே ஆளவந்தார் தன்னைப்பழித்துக்கொள்வதும் தன் கீழ்மையைத் தெரிவிக்க வேண்டிய இடத்தில் சரியே.

தன்னை உயர்வாகப் புகழ்ந்து பேசக்கூடாது என்பது எத்தனையோ நீதிநூல்களில் பிரசித்தமான அறிவுரை. ஆனால் நமது சாஸ்திரங்களில் இதற்கு எதிராகவும் ஓர் அறிவுரை உண்டு. தன்னைத்தானே பழித்துக்கொள்ளவும் கூடாது என்பது தான் அது. இப்படி அறிவுரைகள் முரண்படலாமோ என்றால் முரணேதுமில்லை. தன்னைப் பற்றிப் புகழாமலும் பழிக்காமலும் இருந்து விடலாம். ஆனால் ஆழ்வார் ஆசார்யர்கள் பண்ணும் நைச்யாநுஸந்தானம் எல்லாம் சாஸ்த்ர விருத்தம் ஆகுமே என்ற ஆக்ஷேபத்தை எழுப்பிக்கொண்டு ஸ்வாமி தேசிகன் பதில் அளிக்கிறார். இதற்காக ஒரு ச்லோகமே அருளுகிறார். இந்த அறிவுரைகள் இடத்துக்கு இடம் மாறுபடும். நாம் சில இடங்களில் தற்புகழ்ச்சி பண்ணினாலும் சரியாகும். உதாரணமாக, ஆஞ்ஜனேயர் யுத்தபூமியில் தன் பலபராக்கிரமத்தைப் பீற்றிக்கொண்டாரே, அது அந்த இடத்துக்குச் சரி தான். அதே போல, ஆளவந்தார் பெருமாளிடம் சென்று கதறி அழும்போது, தன் இழிவைப் பேசுவதும் சரியே. இதே ஆத்மநிந்தையை, பிரதிவாதிகளிடமோ, வித்வத்ஸபையிலோ, சிஷ்யர்கள் குழுவிலோ, அவர் பண்ணி யிருந்தால் அது தப்பாகும். தனக்கு மனத்தளர்ச்சியையோ, எதிராளிக்குத் தவறான பாதையில் செல்லத் தெம்போ, சிஷ்யர்களுக்கு அவிச்வாஸமோ ஏற்படும். ஆனால் பெருமாளிடம் சரணம் புகும்போது, தன்னிழிவை நினைப்பது, கார்ப்பண்யம் என்ற உறுப்புக்கு உறு துணையாகி நன்மை விளைவிக்கும். எதிரிவீரர்களிடம் பேசும்போது ஹனுமார் ''ந ராவணஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத்'' ''ஆயிரம் ராவணன்கள் சேர்ந்தாலும் யுத்தத்தில் என்னை எதிர்க்க முடியாது'' என்று பீற்றிக்கொண்டார். ஆனால் ஸீதையிடம் பேசும்போது ''மத்த: ப்ரத்யவர: கச்சித் நாஸ்தி ஸுக்ரீவ ஸந்நிதௌ'' ''என்னைக்காட்டிலும் தாழ்ந்தவர் யாருமே சுக்கிரீவ ஸந்நிதியில் கிடையாது'' என்று தன்னை மட்டமாகப் பேசிக்கொண்டார். இரண்டுமே ஒன்றுக்கொன்று விபரீதமாகத் தோன்றினாலும், ஹனுமாருடைய நல்ல குணத்தையே இரண்டு கோணங்களில் தெரிவிக்கின்றன. அதுபோலவே ஆளவந்தாரும் ''எதிர்வாதிச் சிங்கங்களைக் கிழித்தெறியும் யானை நான்'' என்று ஒரு சந்தர்ப்பத்திலும், ''நான் தூய்மை அற்றவன்; பணிவற்றவன்; இரக்கமில்லாதவன்; வெட்கம் கெட்டவன்; சீ'' என்று இந்த இடத்திலும் சொல்லிக் கொள்வதில் தவறில்லை. சுருங்கச்சொன்னால், ஆத்தும நிந்தை சிற்சில சந்தர்ப்பங்களில் கூடும்; பொதுவாகத் தற்பழிப்பு கூடாது. இந்தத் தொடரில் ஆத்மோத்கர்ஷம் பேசாதே என்று 101-ஆம் அறிவுரை. ஆத்தும நிந்தை பண்ணாதே என்று 122-ஆவது அறிவுரை. நைச்யாநுஸந்தானம் பண்ணு என்று இனி வரவிருக்கும் அறிவுரை. இந்த மூன்றிலும் முரண் இல்லை என்பதை ஸ்வாமி தேசிகன் இங்கே ஒரு ச்லோகம் இயற்றி விளக்கியுள்ளார்.

## 123.ஆலரசத்தியைத் தின்னாதே.

ஆலமரம், அரசமரம், அத்திமரம், இவற்றின் காய்பழங்களைச் சாப்பிடக்கூடாது.

**அத்திகள் பேரார்க்கிறலி வெண்கத்தாரி**
**ஆலரசு நறுவிலி புங் காயிலாரை**
**...தின்னார் சுருதியோரே**

***--- ஆஹாரநியமம்.***

வைதிகர்கள் சாப்பிடக்கூடாத காய்கறி வகைகளில் சிலவற்றைச் சொல்லும் செய்யுள் இது:

> அத்திவகைகள், பேரார்க்கு, இறலி, வெள்ளைக்கத்தரி, ஆல், அரசு, நறுவிலி, புங்கு, ஆயில், ஆரை, முதலிய பதார்த்தங்களை வைதிகர்கள் சாப்பிடமாட்டார்கள்.

காய்கனி கீரைகளில் சாஸ்த்ரநிஷித்தமானவை பல. ந்யக்ரோதோதும்பரோச்வத்த: என்று ஸஹஸ்ர நாமத்தில் ஆலமரம், அத்தி மரம், அரசமரம், என்ற மூன்றையும் உயர்வாகச் சொல்லியிருப்பதாக ஒரு அர்த்தம் சொல்லக்கூடுமானாலும், வேறு சில இடங்களிலும் இந்த மரங்களைப் பாராட்டியிருந்தாலும், அவற்றின் காய் பழங்களைச் சாப்பிட அனுமதி இல்லை. வேதநெறியிலிருந்து விலகியவர் இத்தகைய விதிநிஷேதங்களுக்குக் கட்டுப்படாமல் இருக்கலாம். ஆனால் சுருதியோர் இவை தின்னார். கத்தரிக்காயில் வெண்கத்தரி விலக்கப்படவேண்டும்; மற்ற கத்தரி சாப்பிடலாம்.

## <u>124.ஆர்க்கும் கெடுதலை எண்ணாதே.</u>

எல்லாருக்கும் நல்லதையே நினை; பொல்லாங்கு நினைக்காதே.

**सर्वभूतानामिति सविशेषण-निर्देश-अभिप्रायमाह विद्विषतां अपकुर्वतां अपीति।**

**विशेषणे तात्पर्यमिति ज्ञापनाय सर्वेषामिति व्यासः।**

**विद्विषतामिति मानसः, अपकुर्वतामिति वाचिकः कायिकश्च व्यापारः।**

**न केवलं तेषु अद्वेषमात्रं अपि तु मैत्री चेत्याह - मैत्र इति।**

**मैत्रीहेतुं दर्शयति - मदपराधेति।**

**अयमेव अद्वेषस्यापि हेतुः। मैत्रीं मतिं कुर्वन्निति। मैत्रीं हितैषिणीं इत्यर्थः।**

***--- தாத்பர்ய சந்த்ரிகா.***

பகவத்கீதையின் பன்னிரண்டாம் அத்தியாயத்தில் கண்ணன் தனக்கு எப்படிப்பட்டவர் பிரியமானவர் என்று சொல்கிறான். அங்குள்ள கீதாபாஷ்யபங்க்தியை விளக்குகிறார்:

எந்த ஜந்துவிடமும் பகை பாராட்டாமல் ஹிதத்தை விரும்புபவன் என்ற பொருளில் அத்வேஷ்டா ஸர்வ பூதாநாம் என்ற இடத்தில் ஸர்வ என்கிற அடைமொழியின் அபிப்பிராயத்தைச் சொல்கிறார், பகைப்பவர்க்கும் தீங்கு புரிபவருக்கும் கூட என்று. பகைப்பது மனத்தளவிலானது. தீங்கு செய்வதென்பது, வாக்காலும் உடலாலும் பண்ணுவது. அவர்களிடம் பகை பாராட்டாமை மட்டுமின்றி நட்பும் கூட என்கிறார், மைத்ர என்பதால். அந்த நட்புக்குக் காரணத்தைச் சொல்கிறார் மதபராத என்பதால். என் பாவம் அவர்களை என்னிடம் த்வேஷிக்கவைத்தது என்ற எண்ணம். இதுவே பகைபாராட்டாமைக்கும் காரணம். மைத்ரீம் மதிம் என்னுமிடத்தில் மைத்ரீ என்பதற்கு நலத்தை விரும்புகிற என்று அர்த்தம்.

ஏற்கெனவே 31-ஆம் அறிவுரை அயலார்க்கு அல்லல் பண்ணாதே என்பது. 118-ஆம் அறிவுரை ஆரையும் பகைத்துக் கொள்ளாதே என்பது. இப்போது அதற்கும் மேல் ஒரு படி போய், பகைவர்க்கும் இதத்தையே விரும்பு என்கிறார். இந்த உயர்ந்த பண்பு அமைந்துவிட்டால், கிருஷ்ணனுக்குப் பிரியமானவராகலாம். நண்பர்களுக்கு நல்லதை நினைப்பது சுலபம். பகைவர்க்கும் தீங்கு செய்யாமல் இருப்பது கொஞ்சம் கஷ்டம். அதைவிடக் கஷ்டம் அவர்களுக்குத் தீங்கை மனத்தாலும் நினையாதிருப்பது. யோகிகளுக்கு இந்தப் பண்பு அமைகிறது.

கடந்த நாலு அறிவுரைகளை ஒருசேரப் பார்ப்போம்:

- ஆலயத்துக்குள் உண்ணாதே.
- ஆத்தும நிந்தை பண்ணாதே.
- ஆலரசத்தியைத் தின்னாதே.
- ஆர்க்கும் கெடுதலை எண்ணாதே.

## 125.ஆன்றோர் வார்த்தை மறுக்காதே.

பெரியோரின் நல்வார்த்தைகளை மறுக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டும்.

**எங்கள் குலபதிகள் இவை மேலாம் என்றே**
**எண்ணிய நல்வார்த்தைகள் நாம் இசைகின்றோமே.**
**——— ப்ரதாந சதகம்.**

ப்ரதாந சதகத்தின் முகப்புப் பாசுரத்தில் இருப்பதாலும், இந்தக் கிரந்தத்தின் தலையாய கருத்தாக இருப்பதாலும் இந்த அறிவுரை முக்கியமானது.

நம்மாழ்வார் நாதமுனிகள் முதலான ஆழ்வார் ஆசாரியர்கள் எங்கள் வைணவகுலத்தின் குலபதிகள். அவர்கள் எவ்வெவை மேலானவை என்று

ஆராய்ந்து அருளியிருக்கிறார்கள். அந்த நல்வார்த்தைகளை நாம் அப்படியே ஒப்புக்கொள்கிறோம்.

ஆழ்வார் ஆசார்யர்களின் கருத்துகளை நாம் மறுக்காமல் ஏற்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், அவர்கள் எங்கள் வைணவகுலத்துத் தலைவர்களாயிருப்பவர்கள்; எங்களை வழிநடத்திச் செல்பவர்கள். நாங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படியக் கடமைப் பட்டவர்கள். இரண்டாவது காரணம், அவர்களுடைய வார்த்தைகள் மேலானவை; நம்மை உய்விப்பவை. மூன்றாவது காரணம், அவை எண்ணிய வார்த்தைகள். நன்கு ஆராய்ந்து, தீர விசாரித்து, நிஷ்கர்ஷம் பண்ணியவை. நான்காவது காரணம், அவை நல்ல வார்த்தைகள். பரிவுடன் சொன்னவை; சூது கலவாதவை; பொய்யாமொழிகள்; எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்கும் வார்த்தைகள். இந்த நாலு காரணங்களால் அந்த வார்த்தைகளை நாங்கள் மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறோம். அதன்படி நடக்கிறோம். ஆட்சேபிக்காமல் ஒப்புக்கொள்கிறோம்.

## 126.ஆண்டவன் உதவியை மறக்காதே.

பகவான் நமக்குச் செய்துள்ள உதவிகள் ஏராளம். அவற்றை நாம் மறக்கக்கூடாது.

**அழியாத அருளாழிப் பெருமான் செய்யும்**
**அந்தமிலா உதவியெல்லாம் அளப்பார் ஆரே**

***––– உபகார ஸங்க்ரஹம்.***

ஸ்வாமி தேசிகனின் உபகாரசங்கிரகம் என்ற நூல் மொத்தமுமே ஆண்டவன் நமக்கு (பிரபத்தி செய்தவர்களுக்கு) முன்னும் பின்னும் செய்துள்ள பேருதவிகளை நினைத்துப் பார்க்கவென்றே எழுதப்பட்டது. அதனால் இந்த அறிவுரை முக்கியமானது. இந்த நூலின் கடைசி வரிகளாக அமைந்தது இந்த மேற்கோள்.

அழியாத அருட்கடலானவன் பகவான். அதனால் நமக்கு ஏராளமான உதவிகளைச் செய்கிறான். அவற்றையெல்லாம் அளக்க முடியாது நம்மால்.

இந்த நூலில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளோம். பகவான் நமக்குச் செய்துள்ள உபகாரங்களில் நூற்றுக்கணக்கானவை இந்த நூலில் காட்டப்பட்டுள்ளன. மாதிரிக்காக அவற்றுள் எட்டே எட்டை மட்டும் இப்போது காண்போம். நாம் உய்வதற்காகக் கரண களேபரங்களைத் தந்தான். வேதத்தைப் ப்ரவர்த்திப்பித்தான். ஆழ்வார் ஆசார்யர்களை அவதரிப்பித்தான். நமக்கு ஆசார்ய ஸம்பத்தத்தை ஏற்படுத்தித் தந்தான். அதைப் பயன்படுத்திக் கொள்ளும் நல்லறிவை நமக்குத் தந்தான். நமக்கு வேண்டாத பாசங்களை நீக்கினான். மோக்ஷத்தையும் கொடுக்கவிருக்கிறான். அந்த வீட்டில் பேரின்பத்தைத் தருபவனும் அவனே. இவ்வாறாக ஏராளமான உதவிகளை நாம் மறக்கவும் முடியாது; அளக்கவும் முடியாது. நன்றிகொள்ள மட்டுமே முடியும். அதைச் செய்வோம். ''அவன் தானே முன்பு செய்த உபகார பரம்பரையை முகப்பச்சையாக்கி'' அவன் கட்டளைப்படி நடப்போம்.

## 127.ஆசான் நிந்தையைப் பொறுக்காதே.

நம் ஆசாரியர்களை எவரேனும் நிந்தித்தால் அதைப் பொறுத்துக்கொண்டு வாளாவிருக்கக்கூடாது.

**न विगृह्य कथां कुर्यात् என்று ஸாமாந்யேந சொல்லச் செய்தேயும் यथाशक्ति निगृह्णीयात् देवतागुरुनिन्दकान् என்று விசேஷித்து தர்மசாஸ்த்ரஸித்தமாகையாலே –**

***—— ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்.***

இன்னும் சில கிரந்தங்களிலும் இதே அறிவுரையைக் கூறுவதால் இது முக்கியமாகிறது.

> சண்டை போடும்படியான பேச்சை விலக்கவேண்டும் என்று பொதுவாக ஒரு சாஸ்திரக் கட்டளை இருந்தபோதிலும் ஆசாரியர்களையும் தெய்வத்தையும் நிந்திப்பவர்களை முடிந்த வரை தண்டிக்கவேண்டும் என்று தர்மசாஸ்த்ரங்களில் விசேஷித்துக் கூறியிருப்பதால் அவர்களைக் கண்டித்தாக வேண்டும்.

எந்த வம்புக்கும் போகாமல், நம்மை வம்புக்கிழுப்பவர்களையும் உதாஸீனப்படுத்தி, தெய்வமே என்றிருப்பது நல்லது தான். நம் ஸ்வரூபத்துக்கும் ஏற்றது தான். ஆனால் இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. எவரேனும் நம் ஆசாரியர்களையோ தெய்வத்தையோ பழித்தால் நாம் வெறுமனே விடக்கூடாது. அவர்களை எப்பாடு பட்டேனும் கண்டிக்க வேண்டும் என்று தர்மசாஸ்திரமே சொல்கிறது. அதனால் பொறுமை என்ற நல்ல குணமும் சில சந்தர்ப்பங்களில் வேண்டாததாகிறது.நம் ஸம்ப்ரதாயத்தைக் குறை கூறுபவர்களை, நம் ஸித்தாந்தத்தைப் பழிப்பவர்களை, நம் ஆசாரியர்களைத் தூற்றுபவர்களை, பெருமாளிடம் அபசாரப்படுபவர்களை, நாம் அலட்சியப் படுத்தாமல், தக்க பதிலடி கொடுக்கவேண்டும். இதுவும் ஒரு கைங்கரியமே. இதனால் தான் சாந்திதாந்திகளால் சிறந்த மஹான்களும் பரமத நிரஸநக் கிரந்தங்களை இயற்றுகிறார்கள். இதரர் எக்கேடு கெட்டால் என்ன, மலையைப் பார்த்து நாய் குலைக்கிறது, நாம் பொறுமையைக் கடைப்பிடிப்போம், என்று வாளா இருந்துவிட்டால், நம் ஸந்ததியினருக்கே கலக்கம் வரும்; நாமும் தர்மசாஸ்த்ரத்தை மீறினவராவோம். ஆகையால் கண்டனங்களும் அவசியமே.

## 128.ஆஹாரம் பெறப் பறக்காதே.

உணவுக்காக ஆலாய்ப் பறக்காதே.

**यो मे गर्भगतस्यापि वृत्तिं कल्पितवान् प्रभुः ।**
**शेषवृत्ति विधानेऽपि किं सुप्तस्सोऽथवा मृतः ॥இத்யாதிகளும்**

***——— ரஹஸ்யத்ரயஸாரம்,ஸித்தோபாயசோதநாதிகாரம்.***

பல நூல்களில் பலவிதமாகச் சொன்ன ஒரு கருத்தான படியால் இது முக்கியமாகிறது.

> நான் கர்ப்பத்தில் இருந்தபோது (என் உணவைத் தேடும் முயற்சி எதுவும் நான் செய்யாத போது) எனக்கு உயிர்வாழ்தலை ஏற்பாடு செய்த அந்தக் கடவுள் மிகு தி வாழ்க்கையை நடத்தித்தருவான். அவன் என்ன தூங்கிவிட்டானா, இறந்துவிட்டானா?

விஷ்ணுதர்மம் என்கிற புராணக்கிரந்தத்தில் இருந்து ஒரு ச்லோகத்தை மேற்கோளாகக் காட்டி இந்தக் கருத்தைக் கூறுகிறார். நான் ஏன் பெருங்கவலையோ பெரும்பிரயாசையோ படவேண்டும்? எனக்கு உணவு கிடைக்காமலா போய்விடும்? நான் தாயின் கருவில் குழந்தையாய் இருந்தபோது என் பிரயத்தனத்தாலா எனக்கு உணவு கிடைத்தது? அப்போது என் உணவுக்கு ஏற்பாடு செய்த தெய்வம் இப்போது இல்லாமலா போய்விட்டது? ஏதோ ஒருவிதமாக, பெருமுயற்சி செய்யாமலே, என் வாழ்க்கை நடந்துவிடும். உணவுக்காகச் சிரமப்படவேண்டாம். இந்த வாழ்க்கையை நல்வழிப்படுத்திப் பயன்பெற முயன்றால் போதும். இதற்கு முன் அற்ப வயிற்றுக்கு அலையாதே என்றும் அறமே எண்ணுக உணவெண்ணேல் என்றும் சொன்ன அறிவுரைகளை இது தகுந்ததொரு காரணத்துடன் வலுப்படுத்துகிறது. பகவான் மேல் பாரத்தைப் போடு. அவன் உணவளிப்பான். நீ உன் மற்ற கடமைகளைச்செய். என்பது இந்த அறிவுரையின் ஸாரம்.

கடந்த நான்கு அறிவுரைகளின் தொகுப்பு இதோ:

- ஆன்றோர் வார்த்தை மறுக்காதே.
- ஆண்டவன் உதவியை மறக்காதே.
- ஆசான் நிந்தை பொறுக்காதே.
- ஆஹாரம் பெறப் பறக்காதே.

## 129. ஆரணப் போர்வையில் மருட்டாதே.

வேதப் போர்வையில் ஒளிந்துகொண்டு வேதத்துக்குப் புறம்பான கருத்துகளைப் பரப்பலாகாது.

**धृतनिगमकवचगूढाः**

**कष्टं संप्रति कुदृष्टयः केचित् ।**

**छलयन्ति सौगतादीन्**

**स्यालोपालम्भतुल्यया वाचा॥**

***--- ஸங்கல்பஸூர்யோதயம், முதல் அங்கம்.***

விவேகராஜன் தன் மனைவியான ஸுமதியிடம் பேசும்போது நமக்கு இந்த அறிவுரை கிடைக்கிறது. அந்தக் குத்ருஷ்டிகள் போல் நாம் இருக்கக்கூடாது.

> அடக்கஷ்டமே! சிலர் வேதம் என்னும் கவசத்தால் தங்களை மூடிக்கொண்டு இந்நாட்களில் தப்புப் பார்வை கொண்டவர்களாய் பௌத்தர் முதலியவரை எதிர்ப்பதுபோல் நடிக்கிறார்கள். உண்மையில் அவர்கள் பேச்சு மைத்துனனை வைவது போல் (மேலானதாக, உள்ளம் தொடாமல்) உள்ளது.

போர்வீரர்களுக்குக் கவசம் அணிவதால் இரண்டு வகைப் பலன்கள் உண்டு. ஒன்று, தங்கள் உடலை மூடிக்கொள்வது; உள்ளுள்ள புண்வடுக்கள் முதலியன வெளியே தெரியாதபடி கவசம் மறைத்துவிடும். இரண்டு, உடலைப் பாதுகாப்பது; கவசம் அணிந்தவர்களைச் சாதாரணமான சிறு ஆயுதங்கள் தாக்கமுடியாது. சிலர் தாங்கள் பௌத்தர் போலன்றி வேதத்தை நம்பும் ஆஸ்திகர்களாக வேஷம் போடுகிறார்கள். வேதம் என்கிற கவசத்துக்குள் மறைந்துகொள்கிறார்கள். ஆனால் உண்மையில் வேதத்துக்கு முரண்பட்ட சூன்யவாதம் முதலிய பௌத்தக் கருத்துகளுக்கு மிக நெருங்கிய கருத்துகளை ஏற்கிறார்கள். அவை வேதக்கருத்துகளே, வேதத்தின் சில பாகங்களைத் தள்ளிவிட்டால், என்று புலமையுடன் சமர்த்திக்கிறார்கள். இது ஒரு ஏமாற்றுவேலை. வெளிக்கு வைதிகர் போல் வேஷம் போட்டு உள்ளுக்குள் பாஹ்யர் கருத்தை ஏற்று உலகை வஞ்சிக்கலாமா? இந்தப் பொல்லாத காலத்தில் இப்படியும் நடக்கிறது. சில அத்வைதிகள் ப்ரச்சந்ந பௌத்தர்களாக இருக்கிறார்கள். நாம் உண்மையான வைதிகர்களாக இருக்கவேண்டும். வேதத்தின் அர்த்தங்களை, பாதி ஒதுக்கியும், பாதி திரித்தும் சொல்லி, புறமதத்தவர்க்கு நெருக்கமாவதை விட உள்ளதை உள்ளபடி முழுமையாக ஏற்பது நல்லது. நம்முடைய ஒளிவுமறைவுகளுக்கும், சூதுவாதுகளுக்கும், வேதத்தைக் கவசமாக அணிவது சரியன்று. ஏராளமான ஜனங்களை இப்படி மருட்ட முடிந்தாலும் நாம் அப்படி பண்ணக்கூடாது. ''மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய்யென்றோர்வார்'' என்னும்படி நாம் நேர்மையான ஆஸ்திகராக இருக்கவேண்டும்.

## 130.ஆசாரியனை மிரட்டாதே.

தன் குருவை அச்சுறுத்திப் பேசக்கூடாது.

> **गुरुं त्वंकृत्य हुंकृत्य विप्रं निर्जित्य वादतः ।**
>
> **आरण्ये निर्जले देशे भवति ब्रह्मराक्षसः ॥**
>
> **...इत्यादिषु उक्तानि अतिघोराणि अनन्तानि मे पापानि सन्ति इति अभिप्रायः**
>
> ***--- ஸ்தோத்ரரத்ந பாஷ்யம்.***

ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் பாபிஷ்ட என்ற பதத்துக்கு விளக்கமாகச் சில பெரும் பாவங்களை வரிசையாகச் சொல்லி வரும்போது இந்த வரி இருக்கிறது.

குருவை ஒருமையில் பேசுவதும் பயமுறுத்திப் பேசுவதும் விப்ரர்களை வாதத்தில் ஜயிப்பதும் தவறாகும். இவ்வாறு செய்பவன் நீரில்லாக்காட்டிலே பிரம்மராக்ஷஸனாக ஆவான்.

நீ வா போ என்று ஒருமையாக நண்பனிடமும் சிறுவனிடமும் பேசலாம். ஆனால் குருவிடம் தேவரீர் எழுந்தருள வேணும் என்று மரியாதையாகப் பன்மையில் பேசவேண்டும். மேலும், ஹுங்காரங்கள் பண்ணுவது குருவிடம் கூடவே கூடாது. பணியாளனிடமோ, சீடனிடமோ ஹுங்காரம் பண்ணிப் பயமுறுத்தலாம். ஆனால் குருவிடம் நாம் பயப்படவேண்டும்; அவரை நாம் பயமுறுத்தலாகாது. இத்தகைய குற்றங்களைப் புரிந்தவன் பிரம்மராக்ஷஸனாகப் பிறப்பது மட்டுமின்றி காட்டில் தண்ணீர் இல்லாத இடத்தில் அலையும்படி நேரும். அவ்வளவு கொடிய பாவம் இது. பாபிஷ்டன் என்பதற்கு உரையில் ஸ்வாமி தேசிகன் கூறியுள்ள பாவங்களின் பட்டியலை இப்போது பார்ப்போம். அவர் திருவுள்ளத்தில் எவ்வெவற்றை மஹாபாபங்களாகக் கருதுகிறார் என்பது இதனால் தெரியவரும். ஏற்கெனவே அமர்யாத: என்று தொடங்கும் இந்த ச்லோகத்தில் சொன்னபடி, வரம்பு மீறுவது, அற்பனாயிருப்பது, மனத்திடமில்லாமை, அஸூயை மேலிடுவது, கொடியவனாயிருப்பது முதலியன மட்டுமின்றி, இன்னும் சில: அரசனிடம் கோள் மூட்டுவது, குருவிடம் பொய்யாக நிர்ப்பந்திப்பது, பிரம்மஹத்யை, விப்ரர்களிடம் குறை காண்பதில் ஊற்றம், மருமம் புண்படும்படி சோகம் கொடுத்தல், பிறர் புகழில் வயிறெரிவது, சோகப்பட வேண்டுவதில் மகிழ்தல், க்ருஷ்ணாஜினத்தைத் தானமாக வாங்குதல், ரேதஸ்ஸை விற்றல், பிராம்மணனை வாதத்தில் ஜயித்து மகிழ்தல், அறியாமையாலோ சோம்பலாலோ ஆராதனம் பண்ணாமல் சாப்பிடுதல், பெற்றோர்களையோ, அண்டியுள்ள பிள்ளையையோ இளம் வயது மனைவியையோ விட்டுவிடுதல், விஷ்ணுபக்தர்களுக்குத் தீங்கிழைத்தல், வித்யையைத் திருடுதல், ஆசார்யருக்குத் துரோகம், வேதத்தையும் கடவுளையும் தூஷித்தல், பிறருக்குத் துரோகத்தை நினைத்தல், கெட்டதையே எண்ணுதல், வீண்பிடிவாதம், வன்சொல், அபத்தப்பேச்சு, கொடுக்காததை எடுத்துக்கொள்ளல், சாஸ்த்ரவிதியில்லாத கொலை செய்தல், பிறர் மனைவியை அடைதல், இவை முதலானவை கொடும்பாவங்கள் என்பதற்கான சாஸ்திரப் பிரமாணங்களைக் காட்டுகிறார் ஸ்வாமி தேசிகன், இந்த இடத்தில்.

## 131.ஆகமக் கருத்தைப் புரட்டாதே.

ஆகமங்களில் சொன்ன கருத்துகளில் நமது சொந்த யுக்திகளைக்கொண்டு மாறாட்டங்களைப் பண்ணக்கூடாது.

**ஆகமஸித்தங்களிலே ஒன்றை விருத்ததர்க்கங்களாலே பாதிக்கில் துல்யந்யாயத்தாலே ஸர்வசாஸ்த்ரங்களும் ப்ரபத்திசாஸ்த்ரம் தானும் ப்ரமாணம் அன்றிக்கே ஒழியும்.**

***——— ரஹஸ்யத்ரயஸாரம், ஸாத்யோபாய ஶோதநாதிகாரம்.***

பக்தி என்றும் ப்ரபத்தி என்றும் இரண்டு உபாயங்களை மோக்ஷத்துக்காகச் சொல்கின்றன சாஸ்திரங்கள். இதில் முதலாவதாகச் சொன்ன பக்தியோகத்தை இழிவுபடப்பேசி ப்ரபத்தியின் உயர்வை நிலைநாட்டுகின்றனர் சிலர். இது தேவையற்றது. பக்தியோகத்தின் உயர்வை ஆட்சேபிக்காமலேயே ப்ரபத்தியின் உயர்வை நிலைநாட்டலாம். பக்தியோகத்தை உபாயமாகச்

சாஸ்த்ரமே சொல்லவில்லை என்ற வாதங்கள் வேண்டாம். இப்படிப்பட்ட அதிவாதங்களால் பாதகம் ஏற்படும் என்று விளக்குகிறார். அங்கே நமக்கு ஒரு அறிவுரை:

> ஆகமங்களிலே நிர்ணயம் பண்ணப்பட்ட கருத்துகள் பல இருக்க அவற்றுள் ஒன்றை விருத்ததர்க்கங்களைச் செய்து மறுக்கலாகாது. அவ்வாறு செய்ய முற்பட்டால், சாஸ்திரக் கருத்துகள் எல்லாவற்றுக்குமே எதிர்வாதங்கள் பண்ணமுடியும். பக்தியோகத்தை மட்டும் விலக்கி சரணாகதிசாஸ்த்ரத்தை மட்டும் ஏற்கிற உங்களுக்கும் இது ப்ரதிகூலமே. ஏனென்றால், இதே நியாயத்தாலே ப்ரபத்தி சாஸ்த்ரமும் எதிர்வாதங்களில் அடிபட்டுப்போகும்.

நம்மால் பக்தியோகம் பண்ணமுடியாது; நமக்கு அந்த சக்தி கிடையாது. நம்மால் ப்ரபத்தி மட்டுமே பண்ண முடியும். என்பது வாஸ்தவம் தான். அதனால் பக்தியோகமே பண்ணக்கூடாது. அது சாஸ்திரத்துக்கு விருத்தம். அதைப் பண்ணிய மஹர்ஷிகளும் பூர்வர்களும் தவறு செய்து விட்டார்கள் என்பது போலப் பேசுவது தகாது. இப்படிப் பேசும் ஏகதேசிகளின் எதிர்வாதங்கள் என்னவென்றால்: 1.சாஸ்திரம் சொல்வதெல்லாம் நல்லதாகி விடுமா? பிறருக்குத் தீங்கிழைக்கும் வழியான அபிசார மந்திரங்களைக் கூடத்தான் சாத்திரங்களில் காண்கிறோம். அது போல் ஒன்று பக்தியோகம். அது நல்லதன்று. 2.பக்தியோகம் கெட்டது என்பதையும் சாஸ்திரங்களே சொல்லுகின்றன. விஷ்ணுதர்மத்தில் தர்மதேவதை தன் புத்திரனுக்கு உபதேசிப்பதாக “அத பாதகபீதஸ்த்வம்” என்று ஒரு ச்லோகம். இங்கே பாதகம் என்றது உபாஸனம் என்கிற பக்தியோகத்தைதான் என்று எண்ண இடமுண்டு. 3.மேலும் மோக்ஷத்துக்கு பக்தியோகம் என்று ஒரு கஷ்டமான வழியும் சரணாகதி என்ற ஒரு எளிய வழியும் இருப்பதாகச் சாஸ்த்ரம் சொல்வதால், எவருமே கடினவழியை மேற்கொள்ள வேண்டாம் என்றல்லவோ கருத்தாகும்? 4.நமது குறிக்கோளுக்கு அனுரூபமாக அமைவது சரணாகதி மட்டுமே; என் சொந்த முயற்சியால் பக்தி யோகம் பண்ணி மோக்ஷமடைவேன் என்று நினைப்பது கூட ப்ராப்யத்துக்கு விரோதமாக இருக்கிறது. ஆகையாலே இந்த நாலு காரணங்களாலே பக்தியோகமே கூடாது என்பது அவர்களது வாதத்தின் சுருக்கம். இதைக் கண்டிக்கிறார் ஸ்வாமி தேசிகன். 1.அபிசாரம் போல் பக்தியோகத்தைச் சொல்வது தவறு. சாஸ்த்ரம் பிறருக்குத் தீங்கிழைப்பதற்கான அபிசார மந்த்ரங்களையும் சொல்லியிருப்பது உண்மைதான் ஆனாலும், அந்த மந்திரம் ஹிம்ஸிப்பதற்கான மந்திரம் என்பதையும் சொல்லி, பக்தியோகம் மோக்ஷத்துக்கான உபாயம் என்றும் சொல்லியிருக்கிறது. அததற்கான பலன்களைக்கொண்டு எது நல்லது, எது கெட்டது, என்பதை நாமே தீர்மானிக்கலாம். 2.விஷ்ணுதர்மத்தில் சொன்ன ச்லோகத்துக்கு அர்த்தம் நாராயணனே கதியாகக் கொள் என்றிருப்பது வாஸ்தவம் தான். ஆனால் பக்தியோகம் பண்ணாதே என்றோ அது பாதகம் என்றோ இதற்கு அர்த்தம் ஆகாது. 3.ஒரே அதிகாரிக்கு ஒரே பலனுக்கு எளியவழியும் கடினவழியும் சொன்னால், அதில் கடினவழி கூடாது என்று அர்த்தமாகும். ஆனால் பக்தியோகத்துக்கான அதிகாரிகளும் சரணாகதி பண்ணுவதற்கான அதிகாரிகளும் வெவ்வேறு. ஆகையால் பக்தியோக அதிகாரிகள் அது பண்ணத்தடையில்லை. 4.நமது குறிக்கோள் மோக்ஷம்; பகவத்கைங்கர்யம். அதற்குப் பக்தியோகம் விருத்தம் என்கிற வாதம் எடுபடாது. ஏனென்றால் எது விருத்தம், எது அனுரூபம், என்பதையும் நாம் சாஸ்திரங்களிலிருந்தே அறியமுடியும். பக்தியோகத்தைச் சாஸ்திரம் விதிப்பதால் அதுவும் தன்முயற்சி கூடியதானாலும் ப்ராப்யவிருத்தமன்று என்று தெளியவேண்டும். இதெல்லாம் நிற்கட்டும். ஆகமக்கருத்துகளை இந்தமாதிரியான தர்க்கவாதங்களால் புரட்டிவிடலாம் என்று முனைவதே தவறு. அதனால் நம் ஸித்தாந்தத்துக்குப் பல தீமைகள் ஏற்படும். முதலில் நமது

ஸித்தாந்தத்தின் பெருமையே “இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம்” என்று ஸ்ரீபாஷ்யத்தின் முடிவில் அருளியபடி ஆகமக்கருத்துகளைப் புரட்டாமல் இருப்பது தான். இரண்டாவதாக எம்பெருமானாரே முக்தகண்டமாக இப்படியெல்லாம் சாஸ்த்ரவிருத்த தர்க்கங்கள் பண்ணக்கூடாது என்று விலக்ஷணத்வ அதிகரணத்தில் தெளிவாக அருளியிருக்கிறார். மூன்றாவதாக, அதையும் மீறி தர்க்கபலத்தை அவலம்பித்தால், அது நமக்கெல்லாம் பிரதிகூலமாகவே முடியும். ஏனெனில் ப்ரபத்திக்கு எதிராகவும் நிறைய கோணல்வாதங்கள் பண்ணமுடியும். கடைசியில் எல்லா சாஸ்த்ரங்களையுமே ப்ரமாணமன்று என்று ஒதுக்கவேண்டி வரும். அனுகூலதர்க்கங்களையிட்டுப் பார்த்தால் சாஸ்த்ரங்களே ப்ரமாணம் என்று ஏற்கலாகும். கோளாறு தர்க்கத்தில் தான்; சாஸ்த்ரத்தில் இல்லை. அதனால் ஆகமக் கருத்துகளைப் புரட்டாமல், உள்ளது உள்ளபடி ஏற்பதே நல்லது.

## 132.ஆர்ப்பாட்டத்தால் அலட்டாதே.

வாதங்கள் பண்ணும்போது ஆர்ப்பாட்டங்களும் வெற்றுக்கூச்சல்களும் கூடாது.

**एते च मधु-मथन-भुज-बल-परिभ्रमित-मन्दर-महीधर**

**मथ्यमान-महार्णव-निर्घोष-निर्विशेष-निरर्थक-विविध-**

**वाचो वाचस्पतिमपि वनस्पतीकर्तुं उद्युञ्जते वशिका वावदूकाः**

**तदमी...निरसनीयाः सत्पथ-विस्रम्भ-रम्भा-वन-मथन-विहित-संरम्भाः**

**प्रचण्डा वैतण्डिक-वेतण्डाः**

--- ***ஸங்கல்ப ஸூர்யோதயம், இரண்டாவது அங்கம்.***

விவேகன் என்கிற அரசன் வ்யவஸாயன் என்கிற ஸேனாபதியிடம் சொல்லும் இவ் வார்த்தையில் நாம் வாதங்களைப் பண்ணும்போது எப்படிப் பண்ணக்கூடாது என்கிற அறிவுரை உள்ளது.

> இவர்கள் வெற்றுக்கூச்சல்கள் போடுகிறார்கள். கடலைக்கடைவது போன்ற கோஷம் எழுப்புகிறார்கள். ஆனால் அர்த்லாக் கத்தலாக இருக்கிறது. விதம்விதமாகக் கத்துகிறார்கள். விஷயம் இல்லாமல் காட்டுக்கத்தலினாலேயே அறிவாளிகளையும் மரக்கட்டைகளாக ஆக்க முயல்கிறார்கள். அற்பர்களான வாதசீலர்கள். இவர்களைத் தூக்கியெறிய வேண்டும். நல்வழிநம்பிக்கை என்ற வாழைக்காட்டை நசுக்குவதில் முனைப்பு உடையவர்கள். மிகவும் உக்கிரமானவர்கள். விதண்டாவாதம் பண்ணும் யானைகள்.

இன்றும் கூட வாதப் பிரதிவாதங்களும் வாய்ச்சண்டைகளும் நடக்கும் இடத்திலெல்லாம் இந்த அறிவுரை பொருந்தும். உண்மை நிலைக்கவேண்டும் என்பதற்காக வாதமா? அல்லது ஜயிக்கவேண்டும் என்பதற்காகவா? இரண்டில் எதுவானாலும் விஷயங்களை விட்டுவிட்டு உரக்கக் கத்துவதால் பயன் என்ன? உரக்கக் கத்துபவன் தான் வலுவான கட்சிக்காரன் என்று

ஏதோ சில அறிவிலிகள் மருளலாம். ஆனால் முதிர்ச்சியும் அனுபவமும் உடையவர்களுக்குத் தெரியும், கத்துவதால் பயனில்லை என்றும், சரியாக விஷயங்கள் வராத பலவீன நிலையில் தான் கத்தலும் கூச்சலும் அதிகமாகும் என்றும். இந்தத் தப்பான கூச்சலை நாலு அடைமொழிகளால் வருணிக்கிறார். ஒன்று, பொருளற்ற கூச்சல். இரண்டு, விதவிதமான கூச்சல். மூன்று, பலத்த கூச்சல்; கடலைக் கடைவது போல. நான்கு, கெட்ட நோக்கத்துடன், அறிவாளிகளையும் முட்டாளாக்க வேண்டும் என்ற கெட்டேண்ணத்துடன், கூச்சல். இப்படிக்கூச்சலிடுபவரை நாலு அடைமொழிகளால் வருணிக்கிறார். ஒன்று அற்பர்கள். வாதத்தில் ஜயிப்பது போல் பிரமிக்கச் செய்வதைத் தவிர உயர்குறிக்கோள் ஏதும் இல்லாதவர்கள். இரண்டு, யானைகள் போல ப்ரசண்டமானவர்கள். மூன்று, யானைகள் வாழைத்தோட்டத்தை நசுக்குவது போல, நல்லோர் வழியில் நம்பிக்கையை மிதித்து நசுக்குபவர்கள். நான்கு, பெரிய பராக்கிரமத்துடன் தூரத் தள்ளப்பட வேண்டியவர்கள். விஷயங்கள் அல்லவா வாதங்களில் முக்கியமானவை? அவற்றைவிட்டுவிட்டு வெற்றுக் கூச்சல்கள் எதற்கு? கத்துவது, இடைவிடாமல் பேசுவது, வளவளவென்று பேசுவது, எதிராளியைப் பேசவிடாமல் பண்ணுவது, விஷ்யமில்லாமலே சொற்களால் நிரப்புவது, கேட்போர் பிரமிக்கும்படி ஆர்ப்பாட்டங்கள் பண்ணுவது, இதெல்லாம் கூடாதவை.

கடந்த நாலு அறிவுரைகளையும் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆரணப் போர்வையில் மருட்டாதே.
- ஆசாரியரை மிரட்டாதே.
- ஆகமக் கருத்தைப் புரட்டாதே.
- ஆர்ப்பாட்டத்தால் அலட்டாதே.

## 133.ஆயுளை வீணாய்க் கழிக்காதே.

ஆயுள் விரைவாக ஓடிவிடுவதால் அதை வீணாக்காமல் பயன்படுத்திக்கொள்.

**मिषतां मीलतां वाऽपि द्रुतं धावति जीविते ।**

**अनघं तनुत क्षेम्यं आन्तरं धनं अक्षयम् ॥**

--- ***யாதவாப்யுதயம்.***

கிருஷ்ணன் அரசர்களுக்குக் கூறும் அறிவுரைகளில் இதுவும் ஒன்று:

> ஆயுள் விரைவாக ஓடுகிறது. கண் விழித்தாலும் ஓடுகிறது; கண் மூடினாலும் ஓடுகிறது. இந்த நிலையில் குற்றமற்றதும் க்ஷேமம் பயப்பதும் நிலைத்து நிற்பதும் ஆத்மவிஷயமானதுமான செல்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஆயுள் பொழுதை வீணாக்கலாகாது. பிறகு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நல்ல காரியங்களைத் தள்ளிப்போடக்கூடாது. ஏனென்றால் ஆயுள் விரைவாக ஓடிவிடும். தூங்கினால் என்ன, விழித்திருந்தால் என்ன, ஆயுள் கழிவதை நாம் தடுக்கமுடியுமோ? முடியாது. அதனால் நாம் அதோடு போட்டி போட்டுக்கொண்டு விரைவாகச் சேமிக்கவேண்டும். எதை? ஆயுள் போனபிறகும் நிலைத்திருக்கும் செல்வத்தை. இதை அக்ஷயம் தனம் என்பதால் சொன்னார். அது எப்படிப்பட்ட செல்வமாக இருக்கவேண்டும்? அநகம், க்ஷேம்யம், ஆந்தரம் என்று மூன்று அடைமொழிகளுக்குரிய செல்வம். மாசற்றது. நற்பயன் தருவது. ஆன்மாவுக்கானது. இத்தகைய செல்வத்தை ஈட்டினால் அது பிறகும் பயன்படும். இவ்வாறு செய்யாமல் அழியும் செல்வத்தை மட்டும் சம்பாதித்தால், ஆயுளை வீணாக்கியதாகும். நேர்மையற்ற முறையில் சம்பாதித்தாலும், தீய விளைவுகளைத்தரும் பணத்தையோ, உடலுக்கு மட்டும் பயன்படும் செல்வத்தையோ சேமி த்தாலும், ஆயுள் வீண் தான். விரைவாக ஓடும் ஆயுளை வீணாக்கிவிட்டு வீயும் தருணத்தில் விழிப்புணர்வு வந்தால் ஒன்றும் செய்யமுடியாது. நேரம் பொன்னானது. அதை வியர்த்தமாக்காதே.

## 134.ஆபத்துகளில் சலிக்காதே.

பேராபத்துகளிலும் மனம் தளராமல் உறுதியாக இரு.

**विषयेष्वपि दोष-गन्ध-हीनः**

**प्रळयेऽपि स्थितिं अक्षयां दधानः।**

**विषमेष्वपि भावयन् समत्वम्**

**पुरुषः कोऽपि हृदि स्थितः प्रजानाम्॥**

***--- ஸுபாஷிதநீவி.***

பெருமாளுக்கும் மனப் பக்குவம் கொண்டவனுக்கும் சிலேடையாக அமைந்த சுலோகம் இது. ஸமசித்த பத்ததியின் கடைசி ச்லோகமாக இருப்பது.

> நுகர்பொருள்கள் இருப்பினும் சிறிதும் தீங்குக்கு இடம் தராதவன், பேராபத்துகளிலும் ஆட்டம் காணாதவன், உயர்வு தாழ்வுகளிலும் சமநிலை பாராட்டுபவன், இத்தகைய ஆண்மகன் அபூர்வமானவன்; மக்கள் மனதில் நிலைத்திருப்பவன். இதே ச்லோகத்தின் இன்னொரு அர்த்தம் வருமாறு: அகிலஹேயப்ரத்யநீகன் என்னும்படி எந்தக் குறையுமே இல்லாதவன், ஊழிக்காலத்திலும் கூட அழியாத இருப்பைக் கொண்டவன், முக்குணமாறுபாடுடைய பிரகிருதி வஸ்துக்களிலும் விகாரமடையாத சமநிலை கொண்டவன், புருஷன் என்ற சொல்லுக்கு முதல் அர்த்தமான ஒரு அபூர்வபுருஷன் மக்களின் இதயத்தில் அந்தராத்மாவாக இருக்கிறான்.

நல்லோர்களின் மூன்று பெரும்பண்புகள் வருமாறு: புலன்களை இழுக்கும் விஷயங்கள் இருக்கும்போதும் குறைகளே ஒட்டாமல் இருத்தல் என்கிற கட்டுப்பாடு, பிரளயம் போன்றதொரு

பேராபத்து நேரிட்டாலும் இடிந்து போகாமல் இருத்தல் என்ற உறுதி, விரோதிகளோ வேற்றுமை உடையவரோ எதிர்படினும் மனம் கோணாதிருத்தல் என்கிற நேர்மை, இந்த மூன்றும். இவற்றால் தான் அவர்கள் மக்கள் மனதில் இடம் பிடிக்கிறார்கள். மனக் கட்டுப்பாடு, மன உறுதி, மனம் கோணாமை என்ற இந்த மூன்றுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. மூன்றையும் சேர்த்து இப்படிச் சொல்லலாம்: சிற்றின்பப் பொருள் என்ற உருவிலோ, விபத்து என்ற உருவிலோ, விரோதி என்ற உருவிலோ, ஆபத்துகள் எந்த உருவில் வந்தாலும், மனத்தில் விகாரமோ தளர்ச்சியோ கோணலோ அடையாமல் இருப்பது. இது நல்லோர் பண்பு. நாம் இத்தகைய மனப்பக்குவத்தை அடையவேண்டும். உச்சி மீது வான் இடிந்து விழுந்தபோதிலும் அச்சமில்லை என்னும்படியான மனோதைரியம் தேவை.

## 135.ஆலயம் போய்வரின் குளிக்காதே.

கோவிலில் யார்மேல் பட்டாலும் தீட்டு கிடையாது. கோவிலுக்குப் போய் வந்தவுடன் குளிக்கலாகாது.

**विष्णुस्थान समीपस्थान् विष्णुसेवार्थं आगतान्।**
**श्वपचान् पतितान् वाऽपि स्पृष्ट्वा न स्नानं आचरेत्॥**
**...इति श्रीवराहपुराणे...**

***--- பாஞ்சராத்ரரக்ஷா.***

முப்பத்திரண்டு அபசாரங்களைச் சொல்லுமிடத்தில் இதையும் சொல்கிறார்:

> பெருமாள் கோவிலுக்கு அருகில் இருப்பவர்களை பெருமாளைச் சேவிப்பதற்காக வந்த ஸேவார்த்திகளை அவர்கள் சக்கிலிகளாகவோ பதிதர்களாகவோ இருந்தாலும் கூட தொட்டாலும் குளிக்கக்கூடாது.

பெருமாளின் திருமுகப்புக்குத் தனித் தூய்மை இருப்பதால் அங்கு யாருக்கும் தீட்டு கிடையாது. ஸேவார்த்திகளில் யாரும் அங்கே தீண்டத் தகாதவர் கிடையாது. தொட்டால் முழுகுதல் என்கிற தீண்டாமை எல்லாம் மற்ற இடங்களில் மட்டும் தான். உற்சவகாலங்களில் கோவிலுக்கு அருகிலுள்ள இடங்களில் ஸேவார்த்திகள் எவராயினும் மேலே பட்டாலும் தீர்த்தமாடுவது கூடாது. இது வராஹ புராணத்தில் பெருமாளே சொன்னது. பகவத் ஸந்நிதிக்குத் தனி மதிப்பு.

## 136.ஆரணநூல் வழி அழிக்காதே.

வேதநூலில் சொன்ன வாழ்க்கை நெறியை மேன்மேலும் காரணங்களை வினவி அழிக்காதே.

**ஆரணநூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கோர்**
**வாரணமாய் அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்**

***––– அதிகார சங்கிரகம்.***

எம்பெருமானாரைத் துதிக்கும் செய்யுளில் நமக்கு ஒரு அறிவுரை.

> வேதமார்க்கத்தில் ஒரு செவ்வை(நேர்மைச் சிறப்பு) இருக்கிறது. அந்த நேர்மையை ஹைதுகர்கள் அழிக்கிறார்கள். இவர்கள் அதியாகத் தேவையற்ற முறையில் எதற்கெடுத்தாலும் காரணங்கள் கேட்பவர்கள். இவர்களது வாதங்களை மாய்த்தவர் இராமானுசர். வாழைக்கொல்லையில் புகுந்த யானை எப்படி துவம்சம் பண்ணுமோ அப்படி நசுக்கியவர்.

கேள்விகள் கேட்கவேண்டியது தான். காரணங்களைக் கேட்டறிவது நல்லது தான். ஆனால் அதற்கு ஒரு வரம்பு உண்டு. ஆரண நூல் வழிச்செவ்வையையே அழிக்கும்படி ஹைதுகவாதம் பண்ணக்கூடாது. வேதமார்க்கம் செவ்வையாய் இருப்பதால் இதை ஸ்ரீமத்வேதமார்க்கம் என்கிறோம். இதை நிலை நாட்டுபவர்கள் நம் ஆசார்யர்கள். வேதமார்க்கத்தை அழிப்பவர் சிலர், பௌத்தர் ஜைநர் முதலானோர். அந்த மார்க்கத்தை ஒப்புக்கொண்டு அதன் செவ்வையை மட்டும் அழிப்பவர் சிலர், அத்வைதி முதலானோர். நாம் அந்த வழியையும் அழிக்கக் கூடாது. அந்த வழியின் சிறப்பையும் அழிக்கக் கூடாது. அந்த வழியே வேண்டாம் என்ற பிரசாரத்தால் வழியில் புல் முளைக்கச்செய்து அழிப்பவர்கள் ஒருபுறம்; வழியில் ஆங்காங்கே கற்களையும் முட்களையும் போட்டு வழியின் செவ்வையை மட்டும் அழிப்பவர்கள் இன்னொரு புறம். இந்த இரண்டையுமே பண்ணலாகாது. அந்த நல்வழியை மேன்மேலும் செப்பனிட்டு வைத்துக்கொள்ளவேண்டும். கடந்த நாலு அறிவுரைகளின் தலைப்புகள்:

- ஆயுளை வீணாய்க் கழிக்காதே.
- ஆபத்துகளில் சலிக்காதே.
- ஆலயம் போய்வரின் குளிக்காதே.
- ஆரணநூல் வழி அழிக்காதே.

## <u>137.ஆடை கருப்பொடு வணங்காதே.</u>

கருப்பு நிறத் துணியை உடுத்திக்கொண்டு பெருமாளை ஸேவிக்காதே.

**यस्तु नीलेन वस्त्रेण प्रावृतो मां प्रपश्यति।**

**दशमस्त्वापराधोऽयं मम देवि न रोचते॥ ...इति**

***---பாஞ்சராத்ரரக்ஷா .***

பெருமாள் பூமிதேவியிடம் சொல்லும் வார்த்தை இது:

கருப்பு நிறத்தில் உடை உடுத்திக்கொண்டு என்னைத் தரிசிப்பது கூடாது. இது (32 அபசாரங்களுள்) பத்தாவது அபசாரமாகும். தேவியே! இது எனக்குப் பிடிக்காது. என்று.

முப்பத்திரண்டு அபசாரங்கள் எவை என்பதில் பல கணக்கீடுகள் உள்ளதாக ஏற்கெனவே கண்டோம். அதில் ஒன்றின்படி பத்தாவது அபசாரம் கறுப்பு வஸ்த்ரமணிந்து பெருமாளைத் தரிசிப்பதாகும். வேறொரு தேவதையை வணங்கக் கருப்பாடை ஏற்றதாக இருக்கலாம். ஆனால் திருமாலை வணங்கும்போது கருப்புத்துணி உடுத்திச் செல்லலாகாது. இது அவருக்குப் பிடிக்காதது என்று அவரே சொல்லியிருப்பதை ஸ்வாமி தேசிகன் இங்கு காட்டுகிறார்.

## 138.ஆம்நாயத்தொடு பிணங்காதே.

வேதத்தோடு விரோதமுள்ள கொள்கைகள் வேண்டாம்.

**आम्नाय-अविरुद्धानां एव देश-जाति-कुल-धर्माणां प्रमाणत्वात्। तदुक्तम् -**

**देशजातिकुलधर्माश्च आम्नायाविरुद्धाः प्रमाणम् इति।**

**--- *ஸச்சரித்ர ரக்ஷா.***

இது பூர்வபக்ஷியின் கூற்றாக அமைந்தாலும் ஸித்தாந்தியும் ஏற்கும் கருத்தாகும்.

இது தேசதர்மம் என்றும் இது ஜாதிதர்மம் என்றும் இது குலதர்மம் என்றும் பல சமூகத்தினர்க்குப் பலவகைத் தருமங்கள் காண்கிறோம். இவற்றையும் பிரமாணங்களாக ஏற்கலாம் என்று மஹரிஷிகள் சொன்னதும் உண்டு. ஆனால் இதில் ஒரு நிபந்தனை. வேதங்களுக்கு முரண்படாதவற்றை மட்டுமே இவ்வாறு பிரமாணமாக ஏற்கலாம். இதையும் பிரமாணவசனமே சொல்லிவிடுகிறது. வேதத்தில் சொல்லாமல் விட்ட விஷயங்களிலோ, இவ்வாறோ அவ்வாறோ பண்ணலாம் என்று விகல்பித்துச் சொன்ன விஷயங்களிலோ தேசாசாரம் முதலியன பிரமாணம் ஆகும்.

ஸ்பஷ்டமாக வேதக் கருத்தை எதிர்த்தால் அவை பிரமாணம் ஆகா. வேதத்தோடு பிணங்காதவை மட்டுமே ஜாதிதர்மங்கள் முதலியவாய்ப் பிரமாணமாகும். இங்கு சங்கு சக்கர அடையாளங்களைத் தரிப்பது குறித்த விவாதத்தில் இந்தப் பூர்வ பக்ஷியின் வாதத்தை நாமும் ஒப்புக்கொள்கிறோம்.

## 139.ஆரோபித்தால் சுணங்காதே.

இல்லாததையும் பொல்லாததையும் உன் மேல் யாராவது சுமத்தினால் அதற்காகச் சுணக்கம் அடைய வேண்டாம்.

स्फटिकस्स्वभावशुद्धः
स एव सन् सहति सर्वमारोपम्।
भवति न तत्रानास्था
तदुपाधिषु वा भवत्यास्था॥

*--- ஸுபாஷிதநீவி.*

முதலாவதான அநிபுணபத்ததியில் சொன்ன அறிவுரைகளில் இது ஒன்று.

> படிகக்கல் இயற்கையில் தூய்மையானது. ஆனால் அதன் அருகில் சிவந்ததொரு மலர் இருக்கும்போது தானும் சிவப்பு நிறம் அடைகிறது. இந்த வந்தேறியான நிறத்தை ஏற்கும்போதும் அது தன் இயற்கையான தூய்மையை இழக்காமலே இருக்கிறது. இவ்விஷயத்தில் நமக்குப் படிகக் கல்லிடம் உபேக்ஷையும் கிடையாது. அந்த நிறமாற்றத்துக்குக் காரணமான மலரிடம் நமக்கு மதிப்பும் கிடையாது.

இது அந்யாபதேசமாகச் சொன்ன அறிவுரை. நாமாக நீதியைப் புரிந்துகொள்ள வேண்டும். படிகம் போல் தூய்மையான ஒருவன் மீது வந்தேறியான சிவப்பு நிறம் போன்றதொரு பழி வரக்கூடும். அப்போது அவன் உதாஸீனப்படுத்தி, தான் உண்டு, தன் கதை உண்டு, என்று தன் இயல்பு நிலையிலேயே இருப்பது நல்லது. ஊராருக்கு நாளடைவில் புரிந்து விடும், இவன் நல்லவன் என்பதும் இவன் அருகில் உள்ளவரது தோஷம் தான் இவன் மேல் பிரதிபலிக்கிறது என்பதும். அவர்களுக்கு இவன் மீதுள்ள மதிப்பும் குறையாது. இவன் மேல் பழி போட்டவர் மீ து ஆதரவும் உண்டாகாது. என்பது இந்த ச்லோகத்தில் சொன்ன நீதி. பொருட்படுத்தாமல் அலட்சியம் பண்ணினால் பழி போடுபவர்கள் சலிப்படைந்து போவார்கள். சூழல் சரியில்லையே ஒழிய இவன் மேல் குறை இல்லை என்று மக்களும் புரிந்துகொள்வார்கள். அந்தப் பொல்லாப்பு தனக்கில்லை என்று நிரூபிக்கப் பாடுபட்டால், பழி போட்டவர்களுக்குத்தான் வெற்றி. அப்படிப் பண்ணவேண்டாம். பொய்ப்பழி போடுபவர்களை அலட்சியம் செய்யுங்கள்.

## 140.ஆச்ரய தோஷம் இணங்காதே.

நல்ல வஸ்து கூட கெட்ட கலனில் வைத்தால் கெட்டுப்போகும். கவனம் தேவை.

अमित्रे विश्वासः श्वपचकरके सौमिकरसः
कपाले गङ्गाम्भः खलपरिषदङ्के सुजनता।
परिक्षीणाचारे श्रुतं अनुपनीते च निगमः
स्वतस्सिद्धां शुद्धिं त्यजति विपरीतं च फलति॥

*--- ஸுபாஷிதநீவி.*

அஸேவ்யபத்ததியில் உள்ள இந்த ச்லோகத்தில் தான் சொல்லவந்த கருத்துகள் சிலவற்றை நமக்கு ஏற்கெனவே தெரிந்த கருத்துகளுடன் ஒன்றாகச்சேர்த்து ஸஹோக்தி என்னும் அணியுடன் அறிவுரைகளை வழங்குகிறார்:

> பகைவனிடம் நம்பிக்கை வைக்காதே. சண்டாளனின் பாத்திரத்தில் ஸோமரஸத்தை வைக்காதே. மண்டை ஓட்டில் கங்கை நீரை வைக்காதே. போக்கிரிக்கூட்டத்திடையில் நற்பண்பாளனான தன்மையைக் கொள்ளாதே. ஒழுக்கம் கெட்டவனிடம் கல்வியை வைக்காதே. உபநயனம் ஆகாதவனிடம் வேதத்தை வைக்காதே. வைத்தால் இயல்பான தூய்மை கெட்டுவிடும். இது மட்டுமின்றி விபரீதப் பலனும் உண்டாகும்.

ஆச்ரயதோஷம் என்று ஒன்று உண்டு. அதற்கு நாம் இணங்கக்கூடாது. விச்வாஸம் என்பது உயர்ந்த பண்பு தான்; ஆனால் அதைப் பகைவரிடம் வைக்கலாமோ? வைத்தால் அது கெட்டுப்போவது மட்டுமில்லை. வைத்தவனுக்கே அழிவை உண்டாக்கும். ஸோமரஸம் என்பது உயர்ந்த பானம் தான்; ஆனால் அதை நாய் தின்பவனின் கலனில் வைக்கலாமோ? கூடாது. வைத்தால் தான் கெடுவது மட்டுமின்றி வைத்தவனுக்கும் கேடு விளைவிக்கும். கங்கை நீர் பாவனமானது தான்; ஆனால் அதை மண்டை ஓட்டில் வைக்கலாமோ? கூடாது. வைத்தால் அந்த நீர் அசுத்தமாவது மட்டுமின்றி கங்கையிடம் அபசாரப்பட்ட பாவமும் வந்து சேரும். அது போலவே, துஷ்டர்களிடம் நமது நற்பண்பைக் கையாளலாமோ? கூடாது. நம் பண்புகள் கெட்டுப்போவது மட்டுமின்றி, அந்தத் துஷ்டர்களால் பெரிய தொல்லைகளும் ஏற்படும். அதே போலவே, கல்வி என்னும் மதிப்புமிக்க ஒன்றை ஒழுக்கம் கெட்டவனிடம் தரலாமோ? கூடாது. கல்வி வீணாவது மட்டுமின்றி சமுதாயத்துக்கே தீங்கு உண்டாகும். வேதம் என்னும் பவித்திர வஸ்துவை அதற்கான உபநயன ஸம்ஸ்காரம் பெறாதவனிடம் வைக்கலாமோ? கூடாது. வைத்தால் அந்த வேதம் வியர்த்தமாவது மட்டுமின்றி, விபரீத விளைவுகளும் உண்டாகும். உத்தமமான பொருட்கள் கூட வைக்கத்தகாத இடத்தில் வைப்பதால் தாங்களும் கெட்டு, மேலும் பல தீமைகளையும் விளைவிக்கின்றன. ஆகையால் நல்லவற்றை எங்கே வைக்கலாம் என்பதில் நாம் மேலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

கடந்த நாலு அறிவுரைகளில் பண்ணக்கூடாதவையாகச் சொன்னவை எவை என்றால்:

- ஆடை கருப்பொடு வணங்காதே.
- ஆம்நாயத்தொடு பிணங்காதே.
- ஆரோபித்தால் சுணங்காதே.
- ஆச்ரயதோஷம் இணங்காதே.

## 141.ஆபத்தறியாதுவக்காதே.

வரவிருக்கும் ஆபத்தை அறியாமல் மகிழ்ச்சியுடன் சென்று ஆபத்தில் மாட்டிக்கொள்ளாதே.

बिभेति भवभृत् प्रभो त्वदुपदेशतीव्रौषधात्

कदध्वरसदुर्विषे बलिशभक्षवत् प्रीयते ।

--- *அபீதிஸ்தவம்.*

ஸம்ஸாரிக்கு நேரிடும் பலவகைப் பயங்களில் அவனே அறியாமையால் ஏற்படுத்திக் கொள்வதும் ஒருவகை.

> இந்த ஸம்ஸாரிக்கு எதைச் சாப்பிட்டால் நல்லது எதைச் சாப்பிட்டால் கெட்டது என்பது தெரியாது. பிரபுவே! உன்னுடைய உபதேசம் என்னும் தீவிரமான மருந்தைச் சாப்பிடப் பயப்படுகிறான். ஆனால் கோணல்வழிகளில் சுவைமிக்க உணவை தூண்டில் முள்ளில் மாட்டிய உணவை விரும்பியுண்ணும் மீன் போல விஷத்தை உண்டு மகிழ்கிறான்.

மீனுக்குத் தூண்டில் நுனியில் உள்ள உணவின் சுவை மட்டும் தெரியும். அந்தச் சுவையால் ஈர்க்கப்பட்டு அதைச் சாப்பிடச்செல்கிறது. தானே மாட்டிக்கொள்கிறது. இந்த விபரீத விளைவு அதற்கு முதலில் தெரியாது. அதுபோலவே நமக்கும் உலகில் எத்தனையோ ஈர்ப்புகள் உள்ளன. பின்விளைவுகளைச் சிந்திக்காமல் நாமும் விரும்பிச்சென்று அவற்றுள் மாட்டிக்கொள்கிறோம். அந்த க்ஷணத்துக்கு மகிழ்ச்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் பிறகு வரும் தீங்கைக் குறித்து அறியாமல் இருந்தால் ஆபத்து தானே? இதற்கு நேர்மாறாக இன்னொன்று. கடுங்கசப்பு மருந்து. இந்தக் கணத்தில் வேண்டாததாய் இருந்தாலும் பிணியை நீக்கி உடல்நலம் தரவல்லது. அதைக்கண்டு அஞ்சுவது தகுமோ? நாம் ஆபத்தை அறியாது உவப்பதும் தவறு; நன்மையை உணராது உபதேசத்தை ஏற்றுக்கொள்ள அஞ்சுவதும் தவறு. தற்போதைய க்ஷணகால ஸுகதுக்கங்களை விட, பின் விளைவுகளான நீண்டகால சுகதுக்கங்களை அறிந்து அதற்கேற்ப நடக்கவேண்டும்.

## 142.ஆரணம் அஞ்சிட உரைக்காதே.

வேதமே பயப்படும்படி தப்பான அர்த்தங்களைச் சொல்லக்கூடாது.

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृह्मयेत् ।

बिभेत्यल्पश्रुतात् वेदो मामयं प्रतरिष्यति॥

**என்கிறபடியே வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான புராணங்களில்**

--- *ரஹஸ்ய சிகாமணி.*

புராணங்களின் பெருமையைப் பேசுமிடத்தில் மஹாபாரதத்திலிருந்து மேற்கோள் காட்டி விளக்குகிறார்:

"இதிஹாஸங்களையும் புராணங்களையும் கொண்டு வேதத்தின் பொருளை விளக்கவேண்டும். அரைகுறையாகப் படித்தவனிடம் வேதமே பயப்படுகிறது. இவன் என்னை மோசம் செய்துவிடுவான் என்று'' என்று சொன்னபடியே வேதத்தை விளக்கவந்தவை பல புராணங்கள்.

நாம் வேதத்துக்கு அர்த்தம் சொல்லும்போது இதிஹாஸபுராணங்கள் சொன்ன ரீதியில் சொல்லவேண்டும். தான்தோன்றித்தனமாகச் சொல்லக்கூடாது. அரைகுறையாகப் படித்தவர்கள் தப்பர்த்தம் சொல்லித் தன்னைக் குதறிவிடுவார்களோ என்று வேதமே பயப்படுமாம். இப்படி வேதத்தையே பயமுறுத்திக்கொண்டு நாம் உரைப்பது அடியோது தகாது. மாறாக ஸ்ரீமத்ராமாயணம் முதலிய இதிஹாஸபுராணங்களின் துணைகொண்டு வேதப்பொருளை அறிய முற்படவேண்டும். வேதபகவானிடம் அபசாரப்படக்கூடாது.

## 143.ஆலயத்தசுத்தப் படுத்தாதே.

கோவில்களுக்குச் சமீபத்தில் மலஜலம் கழிக்கக்கூடாது.

समीपे मन्दिरस्यापि शकृन्मूत्रं करोति यः।
स तिष्ठेत् रौरवे घोरे वर्षाणां अयुतं शुभे ।।
इति श्रीवराहपुराणे

*--- பாஞ்சராத்ரரக்ஷா.*

முப்பத்திரண்டு அபசாரங்களுள் இதுவும் ஒன்றாம்:

கோவிலுக்கு அருகில் எவன் மல மூத்திரம் கழிக்கிறானோ அவன் கோரமான ரௌரவநரகத்துக்குப் போய் பத்தாயிரம் வருஷங்கள் அங்கு இருப்பான்.

இதில் ஶுபே என்ற பதத்துக்கு அர்த்தத்தில் மருட்சி ஏற்படலாம். ரௌரவ நரகத்தைச் சுபமானதாக ஏன் சொல்கிறார் என்று. உண்மையில் அதற்கு வேறு அர்த்தம். மங்களமானவளே என்று பூமிப் பிராட்டியை விளிக்கும் சொல் இது. அவளிடம் வராஹநயினார் அருளும் வாக்கியம் இது. மிகக் கொடிய பாவமாகும் இப்படி தேவாலயங்களுக்கு அருகில் அசுத்தப் படுத்துவது. மதிற்சுவர்களுக்கருகில் சிறுநீர் கழிப்பதும் கூடாது. கழிப்பறைகளையும் தூரத்தில் தான் கட்டவேண்டும்.

## 144.ஆளே வெள்கிட நடக்காதே.

பொதுமக்கள் வெட்கப்படும் முறையில் நமது நடத்தை இருக்கக்கூடாது.

जातिमात्रशरणा बहिष्कृताः
केचित् आदृतजघन्यवृत्तयः।
रोषणा विपरिधाविनो मुहुः
ह्रेपयन्ति जनं उज्झितह्रियः॥

--- ***ஸுபாஷிதநீவீ.***

துர்வ்ருத்த பத்ததியில் உள்ள இந்த ச்லோகத்தில் கெட்டநடத்தையரை நிந்திக்கிறார்.

> தங்கள் ஜாதியை மட்டுமே புகலாகக் கொண்டவர்கள். பிறரால் வெளித்தள்ளப்பட்டவர்கள். நீசத்தொழிலை ஆதரித்துக்கொண்டவர் சிலர். ரோஷம் மிக்கவர்கள். ஓடி ஓடித் திரிபவர்கள். தாங்களும் வெட்கம் கெட்டு, மற்றவரையும் வெட்கப்படுத்துகிறார்கள்.

ஜாதி என்பதும் ஜகந்யவ்ருத்தி என்பதும் சாஸ்த்ரபரிபாஷைச் சொற்கள். அதன் படி பார்த்தால் இதே ச்லோகத்துக்கு வேறொரு பொருளும் கிடைக்கும்.

> சில வாதிகள் வாதம் செய்யும்போது துஸ்தர்க்கங்களைக் கையாள்கிறார்கள். ஸபையிலிருந்து பஹிஷ்காரம் பண்ணப்படுகிறார்கள். முக்கிய வ்ருத்தியில் அர்த்தம் சொல்லாமல் கௌணவ்ருத்தியில் சொல்கிறார்கள். கோபத்தாலும் ஓட்டத்தாலும் வாதத்தில் வெல்ல முற்படுகிறார்கள். ஆனால் அவர்கள் வெட்கமுறும் நிலை உண்டாகிறது. அவர்களைச் சேர்ந்தவரும் வெட்கம் அடைகிறார்கள்.

என்று இரண்டாவது அர்த்தம். நாய்கள் விஷயமாக மூன்றாவது அர்த்தமும் சொல்வர் பெரியோர். நமக்குத் தேவை இதிலுள்ள ஒரே ஒரு நீதி மட்டுமே. ஊரார் வெட்கப்படும்படியான கெட்ட நடத்தையும் இழிதொழிலும் வேண்டாம் என்பது.

கடந்த நாலு அறிவுரைகளின் சுருக்கம் வருமாறு:

- ஆபத்தறியாதுவக்காதே**.**
- ஆரணம் அஞ்சிட உரைக்காதே.
- ஆலயத்**தசுத்தப் படுத்தா**தே.
- ஆளே வெள்கிட நடக்காதே.

## 145.ஆற்றலுளார் பிழை ஒப்பாதே.

தப்பு யார் பண்ணினாலும் தப்புதான். ஆற்றல்மிக்கவர் குற்றம் புரிந்தால் அதையும் தட்டிக்கேள்.

धुर्याणामपि सत्कार्ये गुणशालिविमर्दिनाम्।
आनागमविदां युक्तं अपनीतेर्निवारणम्॥

--- *ஸுபாஷிதநீவீ.*

எருது மாடுகளுக்கும் பிழைபுரியும் சக்திமான்களுக்கும் சிலேடையாக அமைந்த ச்லோகமிது.

> என்னதான் நற்பணியில் பாரம் தூக்கவல்லவையாயினும் நெற்கதிர்களை மிதித்து நசுக்கும் எருதுகள் வரவை (லாபத்தை) அறியாதவை தூர ஓட்டிச் சென்று தடுக்கப்படவேண்டும். இன்னொரு அர்த்தம்: என்ன தான் நற்பணிகளில் வல்லவரானாலும் நல்லவரை நசுக்குபவரானால் இது குறித்த ஆகமங்களையும் அறியாதவரானால் அவர்களை அநியாயத்திலிருந்து தடுக்கவேண்டும்.

சொத்துகளை பலாத்காரமாக அபஹரிப்பவர் விஷயமாக மூன்றாவது அர்த்தமும் சொல்வதுண்டு. நமக்கு இப்போது தேவையான நீதி ஒன்றே ஒன்று மட்டுமே. எவ்வளவு தான் ஆற்றல் படைத்தவனானாலும், அவன் பெருங்குற்றங்கள் புரியும்போது, நாம் தடுத்தே ஆகவேண்டும். எளியவரின் தப்புகளை மட்டும் பெரிதுபடுத்துவதும், வலியவர்களின் குறைகளைக் கண்டும் காணாதது போல் இருப்பதும் நல்லோர் செயலன்று.

## 146.ஆலயத்தெச்சில் துப்பாதே.

கோவில்களில் எச்சில் துப்பக்கூடாது.

निष्ठीवनकरो यस्तु मन्दिरे मम सुन्दरि।
कृमिभक्ष्ये पतेत् घोरे नरके पापकृन्नरः॥
...इति श्रीवराहपुराणे

--- *பாஞ்சராத்ரரக்ஷா.*

முப்பத்திரண்டு அபசாரங்களில் இது இன்னொன்று.

> "அழகியே! என் கோவிலில் எவன் எச்சில் துப்புகிறானோ அவன் பாவம் செய்த மனிதனாய் கிருமிகள் தின்னும் கோரமான நரகத்தில் விழுவான்." என்று வராஹபுராணத்தில்.

காறி உமிழ்தல் ஒரு அசுத்தச்செயல். அதைக் கோவில்களில் பண்ணக்கூடாது. பண்ணினால் கோரநரகத்தில் விழ வேண்டியதாகும்.

## 147.ஆத்திகர்க்கன்றிச் செப்பாதே.

த்வயம் முதலிய மந்த்ரங்களை நாத்திகருக்குச் சொல்லித்தரக் கூடாது.

**न नास्तिकायानृजवे नाभक्ताय कदाचन**

**...என்று ...சொல்கிறபடியே**

***--- ரஹஸ்யத்ரயஸாரம், ஆசார்யக்ருத்யாதிகாரம்.***

ஆசார்யனுடைய கடமைகளில் ஒன்று இது. மந்திரங்களைத் தகாதவர்க்கு உபதேசிக்காமல் காப்பது என்பது.

> நாத்திகர்க்கும் நேர்மை தவறியவர்க்கும் பக்தி இல்லாதவர்க்கும் ஒருபோதும் இந்த மந்திரத்தை உபதேசிக்கலாகாது. என்று சொல்கிறபடி நல்ல சிஷ்யர்களுக்கு மட்டும் த்வயம் முதலிய மந்திரங்களை உபதேசிக்கவேண்டும்.

ஸாத்யகிதந்த்ரம் என்னும் நூலிலுள்ளது இந்த ப்ரமாண ச்லோகம். தன்னிடம் உபதேசம் பெறும் சிஷ்யன் ஆஸ்திகன் தானா என்பதை முதலில் உறுதி செய்துகொண்ட பிறகே உபதேசிக்க முற்படலாம்.

## 148.ஆட்டைப் பயிரில் அனுப்பாதே.

ஆடு பயிரை மேயாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

**अतस्त्राणाय साधूनाम् दुष्कृतां दमनं क्षमम्।**

**कलङ्करीयरोधो हि कलमोत्सेधकारणम्॥**

***--- யாதவாப்யுதயம் .***

கிருஷ்ணர் அரசர்களுக்கு அளிக்கும் அறிவுரைகளில் இதுவும் ஒன்று:

> நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காக கெட்டவர்களை அடக்குவதும் உசிதமே. ஆடுமாடுகளைத் தடுத்தால் தானே பயிர் செழிக்கும்?

பயிர் போன்றவர் நல்லோர். உலகுக்கு நன்மை செய்வதால் இந்த உவமை பொருந்தும். அந்தப் பயிரை மேய்ந்து திரியும் ஆடுமாடுகள் போன்றவர் நல்லோரை ஹிம்ஸிக்கும் துஷ்டர்கள். அந்தத் துஷ்டர்களை அடக்குவது தகும். ஆடுமாடுகளைப் பயிரை மேயவிடாமல் தடுப்பதை யாரும் ஆட்சேபிப்பதில்லை. அது போலவே துர்ஜனங்களின் கொட்டத்தை அடக்குவதையும் அரசர்களின் கடமையாக ஏற்கலாகும். இந்த விஷயத்தில் அரசர்களும் வலியவர்களும் உபேக்ஷித்தால் நாட்டில் நல்லவர்கள் அழிந்துபோவர். தீய விளைவுகள் ஏற்படும்.

இதுவரை சொன்ன நான்கு அறிவுரைகளின் ஸாரம்:

- ஆற்றலுளார் பிழை ஒப்பாதே.
- ஆலயத்து எச்சில் துப்பாதே.
- ஆத்திகர்க்கன்றிச் செப்பாதே.
- ஆட்டைப் பயிரில் அனுப்பாதே.

## 149.ஆதாரம் அழித்தழியாதே.

உனக்கே ஆதாரமாயிருப்பதை அழித்தால் நீயும் அழிவாய். இது தெரியாமல் உன்னைத் தாங்குபவரையே அழிக்காதே.

**तान् घ्नन्ति हन्त शान्तम्**

**येभ्यस्सिद्धयेयु रसितवर्त्मानः ।**

**आगणितनिजप्रणाशैः**

**किमाश्रयाशैरनाश्यमिह ॥**

***--- ஸுபாஷிதநீவீ.***

தன்னைத் தாங்குபவரையே அழிக்கும் பொல்லாதவர்க்கும் நெருப்புக்கும் சிலேடையாக இச்சுலோகம்.

> எவரால் தாங்கள் ஸித்தி பெறுவரோ அவர்களையே அடிக்கிறார்கள் இவர்கள் ஐயோ! இவர்கள் கெட்டவழிக்காரகள். தங்கள் அழிவையும் பொருட்படுத்தாமல் தாங்குபவரை அழிக்கும் இவர்கள் யாரைத்தான் அழிக்கமாட்டார்கள்? அடுத்ததாக இன்னொரு அர்த்தம். புகைபடிவதால் கருப்புவழியன் என்று சொல்லப்படுபவன் அக்கினி. எந்த விறகுகளால் நெருப்பு நிலைத்ததோ அந்த விறகுகளையே அழிக்கிறான். ஐயோ! இப்படிப்பட்டவர் தன் அழிவையும் பொருட்படுத்தாமல் பிறரை அழிப்பவர் யாரைத்தான் அழிக்கமாட்டார்?

நெருப்பு எல்லாவற்றையும் அழிப்பதில் வியப்பென்ன? அது தான் தன்னை நிலைக்கச்செய்யும் விறகையே அழித்துவிடுகிறதே! இது போல் சில தீயவர்கள் தங்களுக்கு உதவியவர்களையே கூட ஹிம்ஸிப்பர். தாங்கள் ஏறிவந்த ஏணியையே உதைத்துத் தள்ளுவர். தாங்கள் அமர்ந்திருக்கும் மரக்கிளையையே வெட்டி தாங்களும் கீழே விழுவர். தங்களுக்கே விநாசம்

வந்தாலும் பிறரைத் துன்புறுத்துவர். அவர்களது ஹிம்ஸைக்கு யாருமே விலக்கன்று. அத்தனை கொடியவர்கள்! இவ்வளவு பொல்லாத்தனம் கூடாது.

## 150.ஆட்யரின் பாழியில் நுழையாதே.

பணத்திமிர் பிடித்ததனால் நம்மை மதிக்காதவரின் வீட்டுக்குள் நுழையக் கூடாது.

> **दौवारिक द्विरसन प्रबलान्तरायैः**
>
> **दूये पदावनि दुराढ्य बिलप्रवेशैः**
>
> --- ***பாதுகாஸஹஸ்ரம்.***

நிர்வேதபத்ததியில் நொந்துகொள்ளும் இடத்தில் நமக்கு மறைமுகமாக இந்த அறிவுரை உள்ளது:

> பாதுகாதேவியே! கெட்ட பணக்காரர்களின் வீட்டில் நுழைவது எளிதன்று. வாயிலில் காவலாட்கள் பாம்பு போல் சீறுவார்கள். உள்ளே நுழைவதற்கு எத்தனையோ பெருந்தடைகள் இருக்கும். ஏண்டா இங்கு வந்தோம் என்று நொந்துகொள்ளவேண்டியிருக்கும். நான் இப்படி நொந்துகொள்கிறேன்.

மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் என்று நீதிநூலார் சொன்னதையும், தீயவர்கள் பணக்காரரானால் பிறரை மதிக்கமாட்டார்கள் என்பதையும் சேர்த்துச் சொல்கிறார். துஷ்டரான தனிகரின் வீட்டுக்குப் போனால் வருந்தவேண்டியிருக்கும் என்று. அவர்களது வீடு விசாலமாயிருக்குமே, அதைப் பாழி என்று சொல்லலாமோ? எலிவளை போல் குறுகிய வீட்டை அல்லவா பாழி என்னலாம்? என்று கேட்டால், பாழியில் போவது போல் நாம் அங்கே கூனிக்குறுகிப் போவதாலும், பாழியில் பாம்பு பதுங்கியிருப்பது போல் அங்கே சீறுபவர்கள் இருப்பதாலும், பெரிய மாளிகைகளையும் பாழி என்கிறார். எல்லாப் பணக்காரர்களையும் ஏசாமல், அவர்களுள் துஷ்டரை மட்டும் நிந்திப்பதற்காக துராட்யர் என்ற சொல்லைக் கையாள்கிறார். அவர்கள் வீட்டுப் பிரவேசம் எளிதானது கிடையாது. பல கதவுகளும் தடுப்புகளும் இருக்கும். ஏன் வந்தாய், யார் நீ என்று பலர் பல கேள்விகளைக் கேட்பர். எல்லாவற்றையும் சமாளித்து உள்ளே போனாலும் தகுந்த மரியாதை கிடைக்காது. இளக்காரமும் அவமதிப்பும் அதிகம் சகித்துக்கொள்ள நேரும். இதையெல்லாம் ப்ரபல அந்தராயங்கள் என்ற சொல்லால் சொன்னார். அப்பொழுதைய கஷ்டம் மட்டும் இன்றி, போகாமலே இருந்திருக்கலாமே என்று பிற்காலத்திலும் நினைத்து வருந்துவதை தூயே என்ற பதத்தால் சொன்னார். வாயிற்காவலருக்குப் பணிவாக உபசரித்து வரவேற்கும் பழக்கம் நல்ல தனிகர் வீட்டில். அதே வாயிற்காவலருக்கு துராட்யர் வீட்டில் நம்மைப் பார்த்தவுடன் வெகுண்டு சீறித் துரத்துவது பழக்கம். இதைத் தௌவாரிக த்விரஸந என்று சொன்னார். சுருங்கச்சொன்னால், சுயமரியாதையை இழந்து தீய செல்வந்தரின் வீட்டில் யாசகனாக நுழைவது நல்லதன்று.

## 151.ஆனைபோல் அடங்காது ஒழியாதே.

மதயானை போலத் திமிறிக்கொண்டு திரியவேண்டாம்.

दृष्टेऽपि दुर्बलधियं दमनेऽपि दृप्तम्
स्नात्वाऽपि धूळिरसिकं भजनेऽपि भीमम्।
बद्ध्वा गृहाण वृषशैलपतेर्दये माम्
त्वद्वारणं स्वयमनुग्रह शृङ्खलाभिः॥

--- *தயாசதகம்.*

தயாசதகத்தில் பத்தாவது பதிகத்தில் தன்னைப் பற்றியும் தனக்குத் தயாதேவி என்ன பண்ணவேண்டும் என்பது பற்றியும் கூறுமிடத்தில் நம்மையெல்லாம் மனதில் கொண்டு அருளிய ச்லோகம் இது.

> திருவேங்கடமுடையானின் தயாதேவியே! நான் ஒரு யானை போல இருக்கிறேன். யானைக்கு நாலு குறைகள் இருக்கின்றன. புலனாகும் பொருள்களில் கூட புல்லறிவு கொண்டிருக்கும். (புலன்களுக்கு எட்டாத விஷயங்களில் அறிவில்லை என்பதைக் கேட்பானேன்?) (ஆயுதங்களால்) அடக்கிவைத்தாலும், மதம் பிடித்துத் திரியும். (தன்னிச்சையாக விட்டால் கேட்கவும் வேண்டுமோ?) குளித்தபிறகும் மண்ணை அள்ளித் தலையில் போட்டுக்கொள்ளும். அண்டினவர்களிடத்தும் பயங்கரமாயிருக்கும். எனக்கும் இந்த நாலு குறைகளும் இருக்கின்றன. நான் உன்னுடையவனானபடியால் என்னைப் பிடித்துக் கட்டிப்போடு. உன் அனுக்கிரகம் என்னும் சங்கிலிகளால் என்னை நீயே கட்டிவிடு.

அறியாமை, செருக்கு, அசுத்தத்தில் நாட்டம், பொல்லாத்தனம், என்ற நான்கு தீய பண்புகளும் யானைக்கு இருப்பது போலவே எனக்கும் உள்ளன. ஆகையால் யானையைக் கட்டிப்போடுவது போல் என்னைக் கட்டிப்போடலாம். அடங்காத்தனத்தால் அழியாதபடி அனுக்கிரகத்தால் கட்டுண்டு கிடப்பது நமக்கு நல்லது.

## 152.ஆறுகள் போல் கீழ் வழியாதே.

பாதையில் மேல்நோக்கிப்போ; கீழ்நோக்கி வழியாதே.

जनित्वाऽपि महागोत्रे निम्नगा वक्रचेष्टिताः।
वैपरीत्यं वितन्वन्ति समेषु विषमेषु च॥

--- *ஸுபாஷிதநீவீ.*

கலபத்ததியில் பொல்லாதவர் பற்றிக் கூறுகிறார்:

ஆறுகளிடம் ஐந்து கெட்ட குணங்கள் இருக்கின்றன. பெரிய கோத்ரங்களில் (மலைகளில்) உற்பத்தியானாலும் அந்த கோத்திரப்பெருமையைக் காப்பதில்லை. எப்போதும் கீழ்நோக்கியே ஓடும்; பள்ளங்களில் பாயும். கோணல்மாணலாகப் போகும்; நேர்பாதையில் போவதில்லை. சமப்பாங்கான இடங்களிலும் மேடுபள்ளங்களை ஏற்படுத்தும். மேடுபள்ளமான இடத்தையும் சமப்படுத்தும். இரண்டு விதமாகவும் இடங்களில் விபரீதத் தன்மையை உண்டாக்கும். இதே போலத்தான் தீயவர்களுக்கும் ஐந்து குறைகள். உயர்குலத்தில் பிறந்தாலும் அதற்கேற்ப நடத்தை கிடையாது. உயர்நோக்கிச்செல்லாமல் கீழேகீழே போகிற சுபாவம். நேர்மையான வழியில் செல்லாமல் வக்கிரமான போக்கு. நல்லவர்களிடம் விஷமம் பண்ணும் வழக்கம். விஷமிகளிடம் நன்கு பழகும் இயல்பு. இவ்வாறாக ஆறுகளும் போக்கிரிகளும் ஒத்துப்போகிறார்கள்.

நாம் இந்த ஐந்து தீய செயல்களையும் விலக்கவேண்டும். நம் குடிக்கு நல்லபெயர் பெற்றுத்தரவேண்டும். மேன்மேலும் உயரவேண்டுமே யன்றி, தாழ்ந்துபோகக்கூடாது. வக்கிரமாகப்போகாமல் நேர்பாதையில் (அதாவது, நல்லொழுக்கத்துடன்) செல்லவேண்டும். நல்லவர்களுக்கு நல்லவனாகவும், பொல்லாதவர்க்கு வேண்டாதவனாகவும் இருக்கவேண்டும். நதிகள் கோணலாகவும் கீழ்நோக்கியும் வழிவது போலே வழியக்கூடாது.

கடந்த நாலு அறிவுரைகளில் செய்யக்கூடாததாகச்சொன்னவை எவையென்றால்:

- ஆதாரம் அழித்தழியாதே.
- ஆட்யரின் பாழியில் நுழையாதே.
- ஆனைபோல் அடங்கா தொழியாதே.
- ஆறுகள் போல் கீழ் வழியாதே.

## 153.ஆளுக்கொரு சொல் கலங்காதே.

முனிவர்களுக்குள்ளேயே அபிப்பிராயபேதங்கள் இருப்பதால் எது உண்மைநிலை என்று கலக்கம் ஏற்பட வாய்ப்புண்டு; ஆனாலும் கலங்கத்தேவையில்லை.

तर्को न प्रतितिष्ठति प्रभवति त्रय्याऽपि वैयाकुली
क्षोभं यान्ति मिथः क्षता ऋषिगिरः क्षुद्रोक्तयः किं पुनः।
इत्त्हं तत्वविनिश्चयो निधिरिव क्षिप्तो गुहाभ्यन्तरे
पन्थानं तु महाजनस्य निपुणः प्रत्यञ्चमध्यञ्चति॥

--- ***ஸங்கல்பஸூர்யோதயம்.***

ராஜா விவேகன் ராணி ஸுமதியிடம் பேசுவதாக அமைந்த இந்தச் சுலோகம் மஹாபாரதத்தில் உள்ள ஒரு சுலோகத்தைத் தழுவி வேறொரு விருத்தத்தில் பாடப்பட்டிருப்பதாலும், இந்தக் கருத்தை வேறு சில கிரந்தங்களிலும் ஸ்வாமி தேசிகன் கூறுவதாலும் இது நமக்கு முக்கியமான அறிவுரையாகிறது.

> தர்க்கம் நிலைத்திருப்பதில்லை. (ஒரு தர்க்கத்தால் நிலைநாட்டப்பட்ட கருத்து வேறொரு தர்க்கத்தால் கண்டிக்கப்படுகிறது.) வேதத்தால் கூடக் கலக்கம் ஏற்படக்கூடும். (வேதவாக்கியங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவது போல மேலெழுந்தவாரியாகத் தோன்றலாம்.) முனிவர்களின் கூற்றுகள் (இதிஹாஸ புராணாதிகளில் உள்ளவை) ஒன்றோடொன்று மோதிக்கொண்டு கலக்கம் அடைகின்றன. மற்ற சாதாரண வார்த்தைகளைப் பற்றிக் கேட்பானேன்? இவ்வாறு தத்வநிர்ணயமானது நிதி போல குகையில் வைக்கப்பட்டிருக்கிறது. பெரியோர் வழியை நிபுணன் பின்பற்றுகிறான்.

நாம் புத்தக அறிவை மட்டும் கொண்டு உண்மை நிலையைத் தீர்மானிக்க முடிவதில்லை. கபிலர் சொன்னவையும் மனு சொன்னவையும் எதிரும் புதிருமாக இருக்கின்றன. ஹாரீதர் சொல்பவையும் யாஜ்ஞவல்க்யர் சொல்பவையும் வித்தியாசப்படுகின்றன. தோழப்பர் சொல்வதும் வைத்யநாதர் சொல்வதும் வேறுபடுகிறது. சங்கரர் ஸித்தாந்தமும் ராமானுஜர் ஸித்தாந்தமும் முரண்படுகின்றன. ஆளுக்கொரு சொல் சொன்னால் நாம் எதை முடிவான நிர்ணயமாக ஏற்பது? நமக்குக் கலக்கம் தான் மிஞ்சுகிறது. இந்தக் கலக்கத்தை நீக்க ஒரு வழி இதோ. நம் பெரியவர்கள் சென்ற வழியில் நாமும் நடப்போம். அவர்கள் எவ்வழியில் பிரமாண வாக்கியங்களுக்குள் முரண் இல்லாதபடி, கலக்கத்தைத் தவிர்த்தார்களோ, அதே வழியில் நாமும் கலக்கம் தீர்வோம். முரண்பாடு இருக்கட்டுமே என்றோ, சில வேதவாக்கியங்களைத் தள்ளிவிடுவோமே என்றோ, என் பங்குக்கு நான் இன்னும் கொஞ்சம் குட்டை குழப்புகிறேன் என்றோ புத்தகங்கள் எழுதுபவர்களின் வழி நமக்கு வேண்டாம். ஆளுக்கொரு சொல் போல் முனிவர்களின் கூற்றுகள் தோன்றினாலும் அவற்றுள் விரோதபரிஹாரத்தை அவர்களே காட்டிய வழியில் ஏற்று, எவ்விதக் கலக்கமும் இல்லாமல் இருப்போம். இன்னொரு விஷயம். சொற்களை விட அனுஷ்டானங்களை நாம் முன்மாதிரியாகக் கொள்வோம்.

## 154.ஆர்க்கும் உதவிடத் தயங்காதே.

சிலருக்குத்தான் உதவலாம்; சிலருக்கு உதவவேண்டாம்; என்றெல்லாம் பாகுபாடின்றி எல்லோருக்கும் உதவவேண்டும்.

> **छिद्रं जनयतां नीचैः अच्छिद्रं बिभ्रतामपि।**
> **त्रासहीनास्सुमणयः स्वभावादुपकुर्वते॥**
>
> **--- *ஸுபாஷிதநீவீ.***

ஸமசித்தபத்ததியில் மணிகளுக்கும் நடுநிலைகோணாத நல்லோருக்கும் சிலேடையாக இந்தச் சுலோகம் உள்ளது.

கீழே (கோப்பதற்காக) துளைகளைப் போடுபவருக்கும் சரி, துளையே போடாமல் நகையாகப் பூண்பவர்களுக்கும் சரி, த்ராஸம் என்ற தோஷம் இல்லாத நல்ல மணிகள் தாங்கள் சொத்தாக அமைகின்ற காரணத்தால் உதவி செய்கின்றன. (இது முதல் அர்த்தம்.) கீழ்த்தரமாகப் பிளவுகளை ஏற்படுத்துபவருக்கும் சரி, முழுமையாகத் தாங்குபவர்களுக்கும் சரி, அச்சம் எதுவே இல்லாத நல்லோர் மாந்தருள் மாணிக்கமாய் தங்கள் இயற்கையான பண்பால் எல்லோருக்கும் உதவுகிறார்கள். ( இது இரண்டாவது அர்த்தம்.)

சித்ரம், த்ராஸம், ஸ்வபாவம், என்ற பதங்களுக்கு இரண்டிரண்டு அர்த்தங்கள் இருப்பதால் நமக்கு ஒரே வாக்கியத்தில் இரண்டு அர்த்தங்கள் கிடைத்தன. சாதாரண மனிதர்கள் தங்களை ஆதரிப்பவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள். தங்களுக்குக் கீழே குழி பறிப்பவர்களுக்கு உதவமாட்டார்கள். ஆனால் மனிதருள் மாணிக்கமானவர்கள் தங்களுக்குத் தீங்கிழைத்தவர்களுக்குக்கூட ஒரு சிறிதும் தயக்கமின்றி உதவி பண்ண முன்வருவார்கள். ஏனென்றால் இப்படி உதவி செய்வது அவர்களுக்கு ஸஹஜமான சுபாவம். இயற்கையாய் அமைந்த நற்பண்பு அது. அதை மாற்றுவதோ, உதவி வேண்டுபவர்க்குள் தராதரங்கள் என்ற பெயரில் வேற்றுமைகளைக் காண்பதோ அவர்களுடைய சுபாவத்துக்கு ஒத்துவராது. நல்ல ரத்தினங்களை சிலபேர் துளையிட்டுக் கோர்த்து அணிகிறார்கள். இன்னும் சிலர் அப்படியே அணிகிறார்கள். இரண்டு விதங்களிலும் அது அழகும் மதிப்பும் கூட்டித்தருகிறது. தன்னைக்குத்தித் துளையிட்டவர்களுக்கு அழகையோ செல்வத்தையோ தராமல் இருப்பதில்லை. யார் எப்படியிருந்தாலும், நாம் பக்ஷபாதமின்றி எல்லாருக்கும் உதவி செய்வோமாக. நண்பருக்கு மட்டும் உதவுதல், பிரதிபலன் கருதி உதவுதல், கைம்மாறாக மட்டும் உதவுதல், வேண்டாவெறுப்பாக உதவுதல், நிர்ப்பந்தத்தால் மட்டும் உதவுதல், இதெல்லாம் சாதாரண மனிதர்கள் செய்பவை. மஹான்களோ, எல்லாருக்கும் உதவுதல், தீங்கு இழைத்தவருக்கும் உதவுதல், மனப்பூர்வமாக உதவுதல், தயக்கமின்றி உதவுதல், என்றிவற்றைச் செய்வார்கள். இதை ஸ்வபாவாத் உபகுர்வதே என்று சொல்கிறார். நாம் இந்த நிலைக்கு உயரவேண்டும்.

## 155.ஆகாரருகில் உறங்காதே.

நமக்கு ஆகாதவர்களிடம் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

नूनं अप्रतिबुद्धतैव पुरुषेषु प्रतिपक्षजनस्य हस्तावलम्बः

--- ***ஸங்கல்ப ஸூர்யோதயம்.***

ஸம்ஸ்காரம் என்கிற ஒரு கதாபாத்திரத்தின் கூற்று இது. தனக்கு ரஜோகுணம் தமோகுணம் என்ற இரண்டு எதிரிகளும் ஸத்துவகுணம் என்ற ஒரு நண்பனும் இருப்பதாகவும், ஏதோ ஒரு அவகாசம் பெற்று அந்த இரு பகைவர்களும் தன்னை ஒழித்துக் கட்டிவிடத் தீர்மானித்திருப்பதாகவும் உணர்ந்து அப்போது கூறும் வாக்கியம் நமக்கு நல்ல அறிவுரையாக அமைந்துள்ளது.

> விழிப்புடன் இருங்கள். மக்களின் கவனக்குறைவு மட்டுமே எதிரிகளுக்குக் கைகொடுக்கும். நம்முடைய அஜாக்கிரதை நிச்சயம் எதிர்க்கட்சியினருக்குத் துணைபுரியும். எதிரிகள் நாம் அஜாக்கிரதையாக இருக்கும் தருணம் பார்த்து நம் மேல் பாய்வார்கள். அவர்களுக்கு இடைவெளியே தரக்கூடாது. நாம் எப்போதும் ஸாவதானமாக இருக்கவேண்டும்.

குறிப்பாக, மஹாபலசாலிகளான எதிரிகள் நம்மை வீழ்த்தக் காத்திருக்கும்போது, அதிகப்படி உஷார்நிலை தேவை.

## 156.ஆகாச்செயலில் இறங்காதே.

கைகூடாத காரியங்களை ஆரம்பிக்கவேண்டாம்.

**कामं लिखतु संस्थानं कश्चित् रूपं च भास्वतः।**
**अभित्तिविहितालम्बं आलोकं विलिखेत् कथम्॥**

***--- ஸுபாஷித நீவீ.***

நம்மால் ஆகாத செயல்களும் உள்ளன என்று உணர்ந்து அவற்றில் நாம் இறங்காமல் இருக்கவேண்டும்.

> ஒருவன் சூரியனின் அமைப்பைப் படமாக வேண்டுமானால் வரையட்டும். சூருயனின் நிறத்தை வேண்டுமானாலும் அந்தப் படத்தில் எழுதட்டும். ஆனால் சூரியனின் ஒளியை அந்தச் சுவர்ச்சித்திரத்தில் எழுதமுடியுமோ? ஒளி என்பது சுவரின் பிடிப்புக்குள் அடங்கியது அல்லவே?

கடவுளுடன் போட்டியாக சூரியனையே படைப்பது சாத்தியமோ? வரைபடம் வேண்டுமானால் சுவரில் எழுதலாம். அதற்குச் சூரியவெளிச்சத்தையே உண்டாக்குவது நம்மால் முடியுமோ? நம் முயற்சிகள் ஒரு எல்லைக்குள் அடங்கி நின்று விடுகின்றன. அதற்கு அதீதமான காரியங்களை நாம் செய்ய விழையக்கூடாது. முயற்சிகளால் அசாத்தியமான செயலில் இறங்கக்கூடாது.

கடந்த நாலு அறிவுரைகளாவன:

- ஆளுக்கொரு சொல் கலங்காதே.
- ஆர்க்கும் உதவிடத் தயங்காதே.
- ஆகாரருகில் உறங்காதே.
- ஆகாச்செயலில் இறங்காதே.

## 157.ஆயுள் முழுதும் கருமம் செய்.

சாத்திரங்களில் விதித்த நித்யநைமித்திக கருமங்களை ஆயுள் முழுவதும் செய்தாகவேண்டும்.

> नित्यनैमित्तिकरूपं विद्याङ्गभूतं कर्म यावज्जीवं अनुष्ठेयमित्याह
> कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेत् शतं समाः इति। ...
> न कदाचिदपि विद्याङ्गं कर्म परित्यजेत् इत्यर्थः।
> ...ज्ञानाग्निदग्धाधिकारो विधिनिषेधानधिकारीति पक्षस्तु न वेदवित्सम्मतः।
>
> *--- ஈஶாவாஸ்யோபநிஷத் பாஷ்யம்.*

ஈஶாவாஸ்யோபநிஷத்தில் இது நமக்கு இரண்டாவது அறிவுரை. முதல் அறிவுரையை ஏற்கெனவே இந்த ஆயிரம் அறிவுரைகளில் ஏழாவதாகப் பார்த்தோம். ப்ரம்மவித்யையில் ஈடுபட்டு ஆத்மஜ்ஞானம் பெற்றவனுக்கு அக்நிஹோத்ராதி கர்மங்கள் தேவையா என்றால் சொல்கிறார்.

> (அக்நிஹோத்ரம் முதலிய) நித்யகர்மங்களையும், (க்ரஹணத்தில் ஸ்நானம் முதலிய) நைமித்திக கர்மங்களையும், உயிருள்ளவரை செய்வது கடமையாகும். ‘‘கர்மங்களைச் செய்துகொண்டே நூறாண்டு வாழ விரும்புக’’ என்று உபநிஷத்தும் ஓதியது. ...ஒருபொழுதும் ப்ரம்மவித்யைக்கு அங்கமான கர்மத்தை விடக்கூடாது. ... அறிவுத்தீ ஒருவனை சாத்திர ஆணைகளுக்குக் கட்டுப்படாதவனாக ஆக்கும் என்கிற பக்ஷம் வேதமறிந்தவரால் ஒப்புக்கொள்ளப்படாதது.

சில பேர் சொல்கிறார்கள். ஞானிக்குக் கருமம் தேவையில்லை என்று. ஆத்மஜ்ஞானம் முதிரும் வரை தான் நித்யநைமித்திகக் கருமங்கள் தேவைப் படும் என்றும், அதன் பிறகு அவை தேவையற்றவை என்றும். இன்னும் சொல்லப்போனால் ஞானம் பெற்றபின் கர்மம் வளர்ச்சிக்குத் தடையாகும் என்றும் அவர்களது கருத்து. ஜ்ஞானத்தீ கொளுத்துவதாகக் கண்ணன் கீதையில் சொன்னாரே, அதன்படி பிரம்மஜ்ஞானி சாத்திரக்கட்டளைகளுக்கு அடங்கவேண்டியதில்லை; இதைச்செய், இதைச் செய்யாதே, என்ற விதிநிஷேதங்கள் அவனைக் கட்டுப்படுத்த மாட்டா. அவன் முழுநேரத்தையும் வித்யையிலேயே செலவிடலாம்; கர்மங்கள் வித்யைக்கு அங்கமல்ல. என்றெல்லாம் அவர்கள் வாதிடுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்தை வேதம் வல்ல பெரியோர் ஏற்பதில்லை. வித்யைக்கு (உபாஸநத்துக்கு) அங்கமான கருமத்தைக் கடைசி வரை, ஆயுள் உள்ள வரை, அனுஷ்டித்தே தீரவேண்டும். ஒரு முதிர்ச்சி நிலை ஏற்பட்ட பின் விட்டு விடலாம் என்பது கூடாது. யாவஜ்ஜீவம் செய்தேயாக வேண்டும். எப்பொழுதும் விடலாகாது. கர்மத்தினால் வித்யை அங்கஸம்பத்தி பெற்று உறுதிப்படுமே யன்றி, குறைவுபடாது.

## 158.ஆசார்யர்க்குப் பணிவிடை செய்.

குருசுச்ரூஷை பண்ணுவது அவசியம்.

**கரணத்ரயத்தாலும் கர்த்தவ்யங்களில் ப்ரதானம் பகவத் கைங்கர்யத்தின் எல்லைநிலமாய் ஶாஸ்த்ராநுஜ்ஞாதமான ஆசார்யாதி பாகவத கைங்கர்யம்.**
***———ரஹஸ்யத்ரயஸாரம், உத்தரக்ருத்யாதிகாரம்.***

சரணாகதி செய்து முடித்த பிறகு மேலுள்ள நாட்களில் நமது கடமைகள் என்னென்ன என்பதை விளக்கும்போது இதைச் சொல்கிறார்:

> மனம். வாக்கு, காயம், என்கிற மூன்று கரணங்களாலும் ஆசாரியர் முதலான பாகவதர்களுக்குக் கைங்கரியம் பண்ண வேண்டும். இது பண்ண வேண்டியவற்றுள் முக்கியமாகும். பகவானுக்குப் பண்ணும் கைங்கரியங்களில் இதுவே எல்லைநிலம். ஆசார்யாதி பாகவதகைங்கரியத்தில் பகவத்கைங்கர்யமும் முடிவுபெறும். சாஸ்திரம் நமக்குப் பண்ணியுள்ள அனுஜ்ஞையும் இதுதான்.

பாகவதர்கள் பலர் இருப்பினும், அவர்களுள் முதன்மை பெற்றவர் ஆசார்யர். அவருக்கும் மற்ற பாகவதர்களுக்கும் பணிவிடை செய்யவேண்டும். இதற்குக் காரணங்களும் பண்ணும் முறைகளுமாக நாலு விஷயங்கள் இங்கு சொல்லப் படுகின்றன. இதை முக்கரணத்தாலும் பண்ணவேண்டும் என்பது முதலாவது விஷயம். இது பண்ணவேண்டியவற்றுள் முக்கியமானது என்பது இரண்டாவது. இது பகவத்கைங்கர்யத்துக்கு எல்லை நிலம் என்பது மூன்றாவது. இதை சாஸ்த்ரத்தினால் அனுமதிக்கப் பட்டபடி பண்ணவேண்டும் என்று நான்காவது. இந்த நாலையும் சற்று விவரிப்போம். 1. கரணத்ரயத்தாலும் கர்த்தவ்யங்கள் என்று சொன்னதற்கு இரண்டு தாத்பர்யங்கள். பணிவிடையை எண்ணி, பணிவிடையைப் பேசி, பணிவிடையைச் செய்யவேண்டும் என்று ஒரு தாத்பர்யம். எல்லாப்பணிவிடைகளிலும், எண்ணம், பேச்சு, செயல், என்ற மூன்றையும் ஈடுபடுத்த வேண்டும் என்று அர்த்தமாகும். இன்னொரு கருத்து என்னவெனில், தியானம், ஸ்தோத்ரம், விழுந்து ஸேவித்தல், என்று சில மனத்தால் செய்ய வேண்டியவை, சில வாக்கினால் செய்யவேண்டியவை, சில உடலினால் செய்யவேண்டியவை. இந்த மூன்று வகைப் பணிவிடைகளும் பண்ண வேண்டும் என்பது இரண்டாம் தாத்பர்யம். 2.இப்படி ஆசார்யாதிகளுக்குக் கைங்கர்யம் பண்ணுவதே முக்கியக் கடமை; மற்றதெல்லாம் இதற்குப் பின்னர் தான். 3.பகவத் கைங்கர்யத்துக்கு எல்லைநிலமாக ஆசார்யாதி கைங்கர்யம் என்பதும் அர்த்தபுஷ்டி கொண்ட வாக்கியம். இந்த ஆசார்யாதி கைங்கர்யங்களாலும் பகவத்ப்ரீதி ஏற்படுவதால் இதை பகவத் கைங்கர்யத்திலும் ஓரமாகச் சேர்த்து வைக்கலாம். பகவத்கைங்கர்யம் மேலும் மேலும் பண்ணிக்கொண்டே போகும்போது அது ஆசார்யாதி கைங்கர்யம் வரை செல்லும். இதற்கு மேற்பட்ட பகவத்கைங்கர்யம் கிடையாது. என்ற மூன்று அர்த்தங்களும் கிடைக்கும். ஏனென்றால், ஒரு க்ஷேத்திரத்தின் எல்லை அந்த க்ஷேத்திரத்தையே சேர்ந்தது; அந்த எல்லை வரை அந்த க்ஷேத்திரம் இருக்கும்; அதற்கு மேற்பட்டு அந்த க்ஷேத்திரம் இருக்காது; என்று உவமையைப் பொருந்தவிடுவது நல்லது. 4.ஶாஸ்த்ரத்தில் அநுஜ்ஞாதமான கைங்கர்யம் என்றதிலும் இரண்டு தாத்பர்யங்கள். ஏற்கெனவே சொன்னபடி, ஆசார்யாதி கைங்கர்யமானது ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டது என்ற அர்த்தம் உண்டு. இருந்தாலும் அதைவிட ஸ்வரஸமான தாத்பர்யம் என்னவென்றால், நாம் கைங்கரியங்களாகக் கருதும் பலவற்றுள், சிலவே ஶாஸ்த்ரஸம்மதமாகுமானால், அவற்றை மட்டுமே பண்ணவேண்டும் என்பதாம். கைங்கரியங்களைப் பண்ணும்போது கூட, ஶாஸ்த்ரவிருத்தமற்ற கைங்கரியம் மட்டுமே பண்ணவேண்டும். சாத்திரவரம்புகளை மீறும்

வகையில் எந்தக் கைங்கரியமும் அமைந்து விடக்கூடாது. (காயாந்நஸ்தலசுத்தி முதலிய பெயர்களையிட்டு சிலர் அஶாஸ்த்ரீயமான கைங்கர்யங்களைப் பண்ணுவது ஏற்கத்தக்கதன்று.) இப்படி ஆசார்யர் முதலானோருக்குக் கைங்கர்யம் பண்ணச்சொன்னது உத்தரக்ருத்யாதிகாரத்தின் கடைசி அறிவுரையாய் இருப்பதாலும், கர்த்தவ்யங்களில் ப்ரதானம் என்று வெளிப்படையாகச் சொல்லியிருப்பதாலும், இது முக்கிய அறிவுரையாகிறது.

## 159.ஆராய்ந்து விழிப்புடனே செய்.

எந்தக் காரியம் பண்ணுவதானாலும், நன்கு ஆலோசித்துப்பார்த்து ஜாக்கிரதையாகப் பண்ணவேண்டும்.

**भयाभयस्थानविशेषवेदिनः**

**प्रमादमुक्तस्य परीक्ष्यकारिणः ।**

**परानुभूतिप्रतिबन्धशङ्कया**

**भयानुबन्धोऽप्यभयाय कल्पते॥**

***--- ஸங்கல்ப ஸூர்யோதயம், மூன்றாவது அங்கம்.***

விவேகராஜன் ஸுமதிராணியிடம் சொல்லும் செய்யுள் இது.

> செயல்களைச் செவ்வனே செய்வதன் நற்பலனை விளக்குவது. எந்த இடத்தில் பயம் தேவை, எங்கே பயம் வேண்டாம் என்கிற வாசியை அறிந்து கவனக்குறைவு இல்லாமல் யோசித்துப் பார்த்துச் செயல் புரிபவனுக்கு உயர்ந்த அனுபவத்துக்குத் தடையாகுமோ என்ற அச்சத்தின் இணைப்பு கூட பயம் முழுதும் நீங்கக் காரணம் ஆகிறது.

இந்த ச்லோகத்தில் பர என்பதற்குப் பரம்பொருளையும் அபயம் என்பதற்கு மோக்ஷத்தையும் அர்த்தமாகக் கொண்டு வேறு பொருள் உரைப்பது இந்த உரையாடலுக்கு மேலும் பொருந்தும். ஆனாலும் ஒரு பொது நீதியாகவும் அமையும்படி இதை ஸ்வாமி தேசிகன் வேண்டுமென்றே அமைத்துள்ளார். பணிகளைச் சரிவரப் பண்ணவேண்டுமானால், மூன்று அம்ஶங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். அறிவு, கவனம், ஆராய்தல், என்று சுருக்கமாக இந்த மூன்றையும் சொல்லலாம். சற்று விவரமாகச் சொன்னால், 1.என்ன பண்ணினால் தீய பின் விளைவு உண்டாகும், என்ன பண்ணினால் நல்ல விளைவு உண்டாகும், என்பதைப் பிரித்தறியும் திறமை வேண்டும். 2.கவனப்பிசகு ஏற்படக்கூடாது. 3.தீர ஆராய்ந்தபிறகே பணியைத் தொடங்கவேண்டும். இந்த மூன்று விதமான முன்னெச்சரிக்கையும் கொண்டவனுக்கு, பயப்படுவதே கூட பயம் நீங்கக் காரணமாகும். எப்படியென்றால், பெரியதொரு நன்மைக்கு இது தடங்கலாயிருக்கும் என்று பயந்து செயல் புரிபவன் இறுதியில் அந்த நன்மையை அடைகிறான்; பயம் நீங்கப்பெறுகிறான். தீவிளைவுகளுக்குப் பயந்தவர்கள் தானே நிர்ப்பயமாக வாழமுடியும்? காரியத்தைச் செவ்வனே பண்ணுவதற்குத் தேவையான மேற்கூறிய மூன்று அம்சங்களில் எந்த ஒன்று குறைந்தாலும் கெட்ட விளைவு உண்டாகும். சிலர் நல்லது கெட்டது தெரியாமல் காரியங்களைச் செய்து அதனால் வருந்துகிறார்கள்.

இன்னும் சிலர் தெரிந்திருந்தும் கவனக்குறைவால், பணியில் இடறல், தடுமாற்றம், பிசகு, இவை நேர்வதால், காரியம் கைகூடாமல் துன்புறுகிறாகள். இன்னும் சிலர், அறிவும் கவனமும் இருந்தபோதிலும், விசாரியாமல் அவசரப்பட்டு ஒரு காரியத்தைப் பண்ணி அவதிப்படுகிறார்கள். அறியாமை, அனவதானம், ஆராயாமை, என்ற மூன்று குறைகளையும் தவிர்க்க வேண்டும்.

## 160.ஆதரவுடனே தானம் செய்.

தானம் செய்யும்போது தானம் வாங்குபவரை மதித்து ஆதரித்துச் சிரத்தையுடன் கொடுக்கவேண்டும்.

**कालोत्त्हिताः स्थितिभृतो गुणयन्त्रितत्वात्**

**दानोदकार्द्रकरपुष्करदर्शनीयाः ।**

**सम्भावयन्त्यभिमुखाः समयोपयातान्**

**भृङ्गान् वनीपकजनानिव वारणेन्द्राः॥**

***--- யாதவாப்யுதயம், பத்தொன்பதாம் ஸர்க்கம்.***

காலைப்பொழுதின் வருணனைக்கிடையில் சில நீதிகளையும் புகுத்தியிருக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

> தானம் பண்ணும் காலத்தில் எழுந்து நிற்கிறார்கள். சொத்தைக் கையில் எடுத்துக் கொள்கிறார்கள். நடத்தையின் விதிகளுக்கு அடங்கி நடக்கிறார்கள். நற்பண்புகளுக்குக் கட்டுப்படுகிறார்கள். தானஜலத்தால் கையை நினைத்துக் கொள்கிறார்கள். யாசகர்களை எதிர்நோக்கி வந்து ஆதரிக்கிறார்கள். அவர்களுக்கு ஸம்பாவனை பண்ணுகிறார்கள்.

இந்த ச்லோகத்தில் நிறைய பதங்களில் இரட்டை அர்த்தங்கள் உண்டு. ஸ்திதி, குணம், தாநம், புஷ்கரம், முதலிய பதங்களின் மூலம் முழு ச்லோகமும் வேறு அர்த்தமும் தரும்படி அமைத்திருக்கிறார். காலையில் யானையின் மதஜலத்தை வண்டுகள் பெறுகின்றன என்பது இரண்டாவது அர்த்தம் இவ்விடத்து வருணனைக்குப் பொருந்துவது. இதன்படி இப்படி அர்த்தமாகும்:

> இதுகாறும் படுத்திருந்த யானைகள் சரியான காலத்தில் எழுந்து நிற்கின்றன. கயிற்றால் கட்டப்பட்டிருப்பதால் ஒரே இடத்தில் நிற்கின்றன. மதஜலம் தும்பிக்கையை நனைப்பதால் அழகாக இருக்கின்றன. இரவலர் போல் வந்திருக்கும் வண்டுகளை எதிர்கொண்டு மகிழ்விக்கின்றன.

நமக்கு இப்பொழுது இரண்டாவது அர்த்தத்தை விளக்கவேண்டிய தேவை இல்லை. முதல் அர்த்தத்தை மட்டும் பார்ப்போம். 1.எழுந்து நிற்பது மரியாதைக்கு அடையாளம். யாசிப்பவரை இளக்காரப் படுத்தாமல் மரியாதை தரவேண்டும். படுத்தபடியோ உட்கார்ந்தபடியோ இருப்பது

சரியன்று. 2.விதிமுறைகளுக்கு அடங்கி நிற்பது பெரியோரின் பண்பு. தான் கொடுக்கும் ஸ்திதியிலும், இன்னொருவன் வாங்கும் நிலையிலும் இருப்பதால், தன்னிஷ்டப்படி நடக்கலாமென்று நினைக்கலாகாது. ஸ்திதி வேண்டும். இருப்பு கொள்ளாமல் தவிக்கக்கூடாது. 3.நற்பண்புகளால் கட்டுப்படுவது புரவலரின் பண்பாடு. அவிழ்த்துவிட்ட காளையாகத் திரியமாட்டார்கள். 4.நீர்த்தாரை வார்த்துப் பொருளைக் கொடுப்பது, பொருளுக்கான முழு உரிமையையும் கொடுப்பதைக் காட்டும். ஏனோதானோவென்று அரைகுறையாகத் தானம் பண்ணலாகாது. 5.இரப்பவரை எதிர்நோக்கிச்சென்று ஆதரிக்க வேண்டும். பாராமுகமாகத் தரலாகாது. 6.யாசகர்கள் மகிழும்படி தர வேண்டும். அவர்கள் விதியை நொந்து கொள்ளும்படி விடக்கூடாது. இந்த ஆறையும் யானைகள் மூலமாகக் காலைப்பொழுது நமக்கு உணர்த்துகிறது.

கடந்த நாலு அறிவுரைகளில் செய்யச்சொன்னவற்றை ஒருசேரப்பார்ப்போம்:

- ஆயுள் முழுதும் கருமம் செய்.
- ஆசார்யர்க்குப் பணிவிடை செய்.
- ஆராய்ந்து விழிப்புடனே செய்.
- ஆதரவுடனே தானம் செய்.

## 161.ஆயுள் கழியும் திமிர் வேண்டாம்.

நாள்தோறும் ஆயுள் கழிந்துகொண்டிருப்பது தெரிந்தும் கூடத் திமிர் பிடித்திருப்பது கூடாது.

**रत्ति म्तियह मच्चुय तुटिय पटन्ताइ आयु तुमकण्टाइ|**
**तट्टूण वि तरियमण म्पाल मेण्हि म्वि परसु म मपमए||**

*--- அச்சுதசதகம்.*

அயிந்தையில் அச்சுதனிடம் வேண்டுகிறார் ஸ்வாமி தேசிகன்:

> ஏ அச்சுதனே! அல்லும் பகலும் என் ஆயுள்-மரத்தின் கிளைகள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. அதைப் பார்த்தும் என் மனத்தில் திமிர் குறையவில்லை. இப்படிச் சிறுபிள்ளைத் தனத்துடன் இருக்கும் என்னை நீயே கவனத்துடன் தாங்கவேண்டும்.

ஆயுள் என்பது ஒரு மரம் போல. அதன் கிளைகள் நாளுக்கு நாள் வெட்டப்படுகின்றன. இந்த வெட்டல் இரவும் பகலும் இடைவிடாது நடைபெற்று வருகிறது. இப்படி ஓய்வில்லாமல் நமக்கு நடக்கும் இக்கேடு நம் கண்முன்னேயே நடைபெறுகிறது. இதைத் தடுக்க இயலாத நாம் நம் அஸாமர்த்யத்தை நினைத்து அடங்கி ஒடுங்கிக் கிடப்பது தகும். கையாலாகாத்தனத்தைக் கருத்தில் கொண்டு கப்சிப்பென்று முடங்கி இருப்பது சரியாகும். வாலைச் சுருட்டிக்கொண்டு

வாளாவிருப்பது உசிதமாகும். ஆனால் நேர்மாறாக நாம் திமிர் பிடித்துத் திரிகிறோம். தருக்கும் செருக்கும் தலைதூக்கத் தரணியில் சுற்றுகிறோம். ஆயுள் முடிவுக்குள் அவசர அவசரமாக அறங்களைச் செய்யாமல் அவலேபத்துடன் அலைகிறோம். வீடு பற்றி எரியும்போது வீணை வாசித்துக் கொண்டிருப்பவர் போல் அசடராய் இருக்கிறோம். சிறிதேனும் மனமுதிர்ச்சி உடையவர் இப்படியிருப்பரா? பாலர்கள் மட்டுமே, தம் கண்முன் நிகழும் சம்பவங்களின் பின்விளைவுகளை அறியாமல், தம் தற்காலத் தேவைகளையே முக்கியமாகக் கருதுவர். ஆயுள் துண்டுதுண்டாகப் போவதைப் பார்த்தும், பசுபுத்ராதிகளை அடையப் பாடுபடுபவரைப் பாலர் என்னாமல் என்னென்பது? இந்த அறியாச்செயலின் விளைவாய் நாம் அயரும்போது தாங்கிப் பிடிக்குமாறு அச்சுதனையே வேண்டலாம். அந்த அளவுக்காவது நம் திமிரைக் குறைத்துக் கொள்வோம். இவ்வளவு ஆசைக்குத் தகுதி இந்த உடம்புக்குக் கிடையாது. தகுதி படைத்த பொருளின் மேல் ஆசை கொள்ளலாம். இளமை மேல் வேண்டாம்.

## 162.ஆரணவழியை விடவேண்டாம்.

வேதமார்க்கம் சிறந்தது. அதை விடவேண்டாம்.

**अविरळगुणच्छाया मायातपप्रतिरोधिनी**

**परिहृतरजःपङ्का तापैरसङ्घटिता त्रिभिः।**

**मधुरिपुदयामूर्तिर्दिव्या निराकृतकण्टका**

**वहति निगमाद्वर्तन्येका पुरीमपराजिताम्॥**

--- ***ஸங்கல்ப ஸூர்யோதயம், முதல் அங்கம்.***

வேதத்திலிருந்து நமக்குத் தெரிய வரும் பாதையின் சிறப்பை விவேகராஜன் ஸுமதிராணிக்குக் கூறுவதாக அமைந்த சுலோகம் இது.

> அடர்ந்த நற்பண்புகளாகிற நிழல் கொண்டது. மாயைவெய்யிலைத் தடுப்பது. ரஜஸ் (தும்புதூசி, ரஜோகுணம்) இல்லாமல் செப்பனிடப்பட்டது. மூன்று தாபங்களும் சேராதது. பகவானின் அருள்வடிவானது. திவ்வியமானது. முட்கள் நீக்கப்பட்டது. வழிதப்பவைக்கும் கிளைகள் இல்லாமல் ஒரே பாதையானது. உயர்ந்த புரிக்கு நம்மை அடைவிப்பது. இத்தகையது வேதத்திலிருந்து நாம் அறியும் பாதை.

ஒரு நல்ல பாதைக்கு இருக்கவேண்டிய பண்புகள் ஆறு: அடர்த்தியானதும் வெய்யிலைத் தடுக்கவல்லதுமான நிழல் தேவை; தும்புதூசிகளோ சேறுசகதிகளோ இல்லாமல் பராமரிப்பு தேவை; இயற்கைச் சீற்றங்கள், கொடிய விலங்குகள், வழிப்பறிகள், முதலிய ஹிம்ஸைகள் இல்லாமல், பாதுகாப்பு தேவை; கல்லும் முள்ளும் குத்தாதபடி திவ்வியமான செப்பம் தேவை; குழப்பியடிக்கும் கிளைவழிகள் இல்லாமல் ஒற்றையான வழியாய் இருக்கவேண்டும்; அந்தப் பாதை நம்மைச் சேர்ப்பிக்கும் இடம் சிறந்த ராஜதானியாக இருக்கும்படி, ராஜபாட்டையாய் இருக்கவேண்டும். இவ்வாறு வெயிலின்மை, மாசின்மை, பயமின்மை, தடையின்மை, குழப்பமி

ன்மை, குறுகலின்மை, என்ற ஆறு பண்புகளும் வேதமார்க்கத்துக்கு உண்டு என்பதைச் சிலேடையால் காண்போம். இதற்காக, குணம், சாயா, ரஜஸ், கண்டகம், நிகமம், அபராஜிதா, என்ற ஆறு சொற்களிலும் இரட்டைப் பொருள்களைக் கையாளுவோம். இந்த மார்க்கத்தில் ஸௌஶீல்யம் முதலிய குணங்க்ளின் அழகு மேலோங்குகிறது; இதைச் சொல்லும் வாக்கியத்தின் இன்னொரு அர்த்தப்படி, அடர்த்தியான நல்ல நிழல் சூடு தணிப்பதாக இருக்கும். ரஜோகுணத்தின் அழுக்கு நீக்கப்பட்டிருக்கும்; இன்னொரு அர்த்தப்படி, தூளும் சேறும் இல்லாதிருக்கும். ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்னும் மூவகைத் தாபங்களும் நேராமல் இருக்கும். இப்பாதையில் புறமதத்தவரால் போடப்பட்ட தடைகள் நல்லோரால் நீக்கப்பட்டிருக்கும்; இன்னொரு அர்த்தப்படி முள் குத்தாமல் இருக்கும். நிகமம் என்பதற்கு ராஜபாட்டை என்றும், வேதம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால் நிகமமார்க்கம் பெரிதாய் விசாலமாய் அலங்காரங்களுடன் இருக்கும். பல பிரிவுகளும் ஒரே இடத்தில் கூடி விடுவதால் வழிதப்பும் பயம் இல்லை. அயோத்யா என்றும் அபராஜிதா என்றும் சொல்லப்படும் ஸ்ரீவைகுண்டத்துக்கு நம்மை அடைவிக்கும். இவ்வளவு நல்ல மார்க்கத்தை விட்டு வேற்று வழிகளில் போய் அவஸ்தைப்படலாகாது. சுள்வழி, சுற்றுவழி, சுரீர்வழி, சுழற்றுவழி, இதெல்லாம் வேண்டாம். சுருதிவழியே சுபவழியாம்.

## 163.ஆரணச்செயல்களில் பகை வேண்டாம்.

வேதக் கருமங்களில் த்வேஷம் கூடாது.

आशरीरं प्रवृत्तत्वात् स्वभावप्राप्तकर्मणाम्।
किमर्थं क्रियते द्वेषः शास्त्रप्राप्तेषु कर्मसु॥

--- ***சததூஷணி, அறுபத்துமூன்றாம் வாதம்.***

தத்வஜ்ஞானம் நிலைபெற்றபின் வைதிககர்மங்கள் தேவையில்லை என்று சொல்லும் பிற மதத்தவரைக் கண்டிக்கிறார்.

> வைதிக கர்மங்கள் உடல் உள்ளவரை ஏற்பட்டவை. இயற்கையாகவே ப்ராப்தமானவை. ஶாஸ்த்ரம் விதித்த கருமங்களில் எதற்காகப் பகை பாராட்டல்?

எவனுக்குத் தத்வஜ்ஞானம் உண்டாகிவிட்டதோ அவன் கர்மயோகத்துக்கு அதிகாரியன்று என்று வாதிப்பவர்களே! ஏன் இப்படி? தத்வஜ்ஞானம் பெற்றபின் கர்மயோகஜ்ஞானம் இருக்காது என்பதாலா? இருந்தும் அதற்கான ஸாமக்ரிகள் இல்லை என்பதாலா? இருந்தாலும் பலன் கிடைக்காது என்பதாலா? கிடைத்தாலும் அந்தப் பலன் தேவையற்றது என்பதாலா? தேவைப்பட்டாலும் அது வேறொரு வகையால் கிடைத்துவிடும் என்பதாலா? அல்லது வேறேதோ ஒரு காரணத்தாலா? என்று விகல்பித்துக் கொண்டு ஒவ்வொன்றாக விவாதித்துக் கண்டித்துவிட்டு, வாதத்தின் கடைசியில் சொல்லும் சுலோகம் இது. வைதிக கருமங்களில் த்வேஷம் எதற்கு? வேதவிஹித கருமங்களைப் பண்ணத்தான் வேண்டும். விட்டுவிடலாகாது. பண்ணக்கூடாதென்று வாதிப்பது இன்னும் தப்பு.

## 164.ஆண்டியும் பூணூல் விடவேண்டாம்.

ஸந்யாஸிகளும் பூணூல் போட்டுக்கொள்வதை விடக்கூடாது.

> **एवं परिव्राजकानां सामान्यतः प्राप्तं ब्रह्मसूत्रम्।**
> **परमहंसेष्वेव विशेषतोऽपि प्राप्तिर्दृश्यते।**
>
> ***---சததூஷணி, அறுபத்து நாலாவது வாதம்.***

ஸ்ரீவைஷ்ணவ ஸந்யாஸிகள் இதிஹாஸபுராணகாலத்து யதிகள் போலவே குடுமி, பூணூல், இவற்றுடன் இருக்கிறார்கள். இடைக்காலத்தில் ஒருசில அத்வைதஸந்யாஸிகள் (வேறு சில அத்வைத ஸந்யாஸிகளுக்கு மாறாக) குடுமியையும் பூணூலையும் கூடத் தியாகம் பண்ணத் தொடங்கினார்கள். இதற்கு சாஸ்திரம் இடம் கொடுக்குமா என்பது இப்போதைய விசாரம்.

> இவ்வாறாக ஸந்யாஸிகளுக்குப் பொதுவாகப் பூணூல் ஏற்பட்டிருக்கிறது. பரமஹம்ஸர் என்னும் உயர்நிலை ஸந்யாஸிகளுக்குக் குறிப்பாகப் பூணூல் தேவை என்பதையும் காண்கிறோம்.

வஸிஷ்டர், ஶௌநகர், தத்தாத்ரேயர், மேதாதிதி, அங்கிரஸ், அத்ரி, வ்ருத்தஜாபாலி, ஹாரீதர், என்று அனேக மஹர்ஷிகள் ஒரே குரலில் சொல்லும் விஷயம் இது. ஸந்யாஸாச்ரமத்தில் பூணூலை விடலாகாது என்பதும், விட்டால் பெரும்பாவம் என்றும், பிராயச்சித்தங்களைப் பண்ணிக்கொள்ளவேண்டு மென்றும் பலபடியாகச் சொன்னதொரு விஷயம். இதெல்லாம் ஸாதாரண ஸந்யாஸிகளுக்கு; நாங்களோ அதற்கும் மேல்நிலையில் உள்ளவர்கள் என்று சொல்லி சாஸ்திரத்திலிருந்து தப்பமுடியாது. ஏனென்றால் பரமஹம்ஸர் என்னும் உயர்நிலை ஸந்யாஸிகளுக்குப் பூணூல் அவசியம் என்று ஶாட்யாயநக உபநிஷத்திலும், பராஶரஸ்ம்ருதியிலும், தெளிவாக நிர்ணயம் உள்ளது. உலக மக்களை ஏமாற்றுவதற்காக சாஸ்திரங்களை மீறலாமோ? கூடாது. வைதிகன் ஆண்டியானாலும் பூணூல் தரிக்கவேண்டும்.

கடந்த நாலு அறிவுரைகளில் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னவற்றை ஒருசேரப்பார்ப்போம்:

- ஆயுள் கழியும் திமிர் வேண்டாம்.
- ஆரண வழியை விடவேண்டாம்.
- ஆரணச்செயல்களில் பகை வேண்டாம்.
- ஆண்டியும் பூணூல் விடவேண்டாம்.

## 165.ஆறு குணம் சேர் உணவுட்கொள்.

உணவுண்பது போல பகவதனுபவம் பண்ணவேண்டும்.

> त्रैगुण्यं षड्गुणाढ्यं च द्विधाऽन्नं परिकीर्तितम्।
> त्रैगुण्यमन्नं बद्धानां इतरेषां अथेतरत्॥
> **என்கிற बहुगुणाढ्य மான அன்னமாவது பகவத்குணானுபவம்.**
> **அதடியாக வருகிற போக்யதமகைங்கர்யவிஶேஷங்களாகவுமாம்.**
> **--- *ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், மூலமந்த்ராதிகாரம்.***

கைங்கரியம் குறித்த சர்ச்சையின் தொடக்கத்தில் உள்ள பகுதி இது.

> முக்குண உணவென்றும் அறுகுண உணவென்றும் இருவகையாக உணவு கீர்த்திக்கப்பட்டிருக்கிறது. முக்குண உணவு பத்தஜீவர்களுக்கானது. இன்னொன்று மற்றவர்களுக்கானது. என்று லக்ஷ்மீதந்த்ரத்தில் சொன்னதில் அறுகுணம் நிறைந்த அன்னம் என்றது பகவானின் குணங்களை அனுபவிப்பதாகும். அல்லது அந்த அனுபவத்தால் தோன்றியதும் பேரின்பம் பயப்பதுமான கைங்கர்யவிசேஷம் ஆகும்.

லக்ஷ்மீதந்த்ரத்தில் உள்ள ச்லோகம் நமக்கு இருவகை உணவு இருப்பதாய்ச் சொல்கிறது. பிப்பலம் ஸ்வாது அத்தி என்று உபநிஷத்திலும், அத்தைத் தின்று அங்கே கிடக்கும் என்று மதுரகவியாழ்வார் சரிதத்திலும் சொன்னபடி ஸம்ஸாரத்தில் சிக்கியவர்கள் உண்ணும் உணவு முதல் வகை. இது ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களால் ஆன உணவு. முக்தனை உணவு உண்பவனாக உபநிஷத்து ஓதியபடியும். தனக்கு உண்ணும் சோறு கண்ணனே என்று ஆழ்வார் பாடியபடியும், பகவதனுபவம் என்கிற உணவு இரண்டாவது வகை. இதில் ஆறு குணங்கள் (ஜ்ஞானம், பலம், முதலிய ஆறு) செழித்திருப்பதால் இதை ஷட்குணாயம் என்கிறார். மூன்று குண உணவு, ஆறுகுண உணவு, என்று பாகுபடுத்திக் காட்டியதில் இலக்கியநயம் மட்டுமே; ஏனென்றால் குணம் என்பதற்குப் பொருள்கள் வெவ்வேறு. முக்குண உணவை உண்டுவரும் நாம் அறுகுண உணவை உண்ண முயலவேண்டும் என்று அறிவுரை. பகவத் அனுபவத்தை உணவாகச் சொல்வதில் பல பொருத்தங்கள் உண்டு. நமக்குப் பசிக்களைப்பை நீக்கும் சாதாரண உணவு போல, ‘‘நினைந் திருந்தே சிரமம் தீர்ந்தேன் நேமி நெடியவனே’’ என்றபடி பகவானை அனுபவிப்பதாலும் களைப்பு நிங்கும். அறுசுவை உண்டியால் நமக்கு இன்பம் கிடைப்பது போல, ஆறு குணங்கள் கொண்ட பகவானை அனுபவிப்பதால் நமக்குப் பேரின்பம் கிடைக்கும் என்பதை போக்யதமம் என்ற பதத்தால் சொன்னார். அனுபவமும் அதன் விளைவான கைங்கரியங்களுமே நமக்கு அன்னம் என்னலாம்.

## 166.ஆசை கோபம் அளவாய்க்கொள்.

வரம்புக்குள் அடங்கியிருக்கும்போது காமக்ரோதங்களும் நல்லவையே. நல்லதில் ஆசையும் நியாயமான கோபமும் கொள்ளவேண்டும்.

स्मर्यते हि। द्वाविमौ कण्टकौ तीक्ष्णौ शरीरपरिशोषणौ।
यश्चाधनः कामयते यश्च कुप्यत्यनीश्वरः॥ इति।
न सर्वशक्तेरीश्वरस्य चिकीर्षितमशक्यं किञ्चिदस्ति।
अतोऽस्य न दुःखाय क्रोधः।

--- ***ஸர்வார்த்தஸித்தி, நாயகஸரம்.***

பெருமாளுக்கும் காமம் உண்டு; ஸோகாமயத என்று விரும்பியல்லவா உலகைப் படைத்தார்? அவருக்குக் கோபமும் உண்டு; அதனால் அல்லவா பாவிகளைத் தண்டிக்கிறார்? அப்படியானால் காமக்ரோதங்கள் நல்லவையா கெட்டவையா என்று கேட்டால் ஒரு ஸ்ம்ருதியை மேற்கோள் காட்டி விடையிறுக்கிறார். நாயகஸரத்தின் முதன்முதல் ச்லோகத்தில் ''ரோஷோபி ப்ரீதயே ஸ்யாத்'' என்பதற்கு உரையாக ஸ்வாமி தேசிகன் வரைவது இது.

> இவ்விரண்டு கூரிய முட்கள் உடலை வாட்டி வருத்துபவை. ஆசையை நிறைவேற்றுவதற்கான ஸாதனமற்ற ஏழை ஆசைப்படுவதும், கோபத்தைச் செலுத்தி வெற்றி பெறும் ஆற்றல் இல்லாதவன் கோபித்துக்கொள்வதும், என்கிற இந்த இரண்டும். இவ்வாறு ஸ்ம்ருதி சொல்கிறது. அதனால் ஸர்வசக்தனான ஈச்வரன் கோபப்படுவது அவனுக்குத் துக்கத்தை விளைவிக்காது. மாறாக, ப்ரீதியையே தரும்.

நமக்கு ஆசையும் சினமும் அறவே நீங்கா. அவற்றைச் சரியான இடத்தில் புகுத்துவது தான் நாம் பண்ணவேண்டியது. முழுமையாகப் போக்குவது முடியாத காரியம்; வேண்டாத காரியமும் கூட. நிறைவேறக்கூடிய அளவுக்குள் தகுந்த விஷயங்களில் ஆசையும் கோபமும் கொள்ளப் பயிற்சி செய்வோமாக.

## 167.ஆழ்வார் பாடல் வாழ்வாய்க்கொள்.

ஆழ்வாரின் பாசுரங்களை ஜீவனமாகக் கொள்ளவேண்டும்.

**எத்திசையும் வாழ இவர் பாடிவைத்த**
**இவை நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே**

***---பிரபந்தஸாரம்.***

சாற்றுமுறைப் பாட்டிலும் ''தொகை நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே'' என்று இந்த முந்தைய பாட்டின் கருத்தைத் திரும்பச்சொல்வதால் இது முக்கியமான கருத்தாகிறது.

> (வேதியர்கள் மட்டுமின்றி) எல்லாத் திசையினரும் உஜ்ஜீவனம் பெறவேண்டும் என்னும் பரந்த நோக்குடன் ''ஆறிருவர் ஓரொருவர்'' என்ற இவர் தமிழில் பாடி நமக்கு வைப்பாகத் தந்துள்ள நாலாயிரம் பாசுரங்களும் நமக்கு வாழ்வானவை.

ஆழ்வார் பாசுரங்களை அனுஸந்தித்தால் மட்டும் போதாது; அனுபவித்துப் பாடினால் மட்டும் போதாது; அவற்றைப் பொழுதுபோக்காக மட்டும் கொண்டால் போதாது; அவற்றையே நமக்கு வாழ்வாகக் கொள்ளல் வேண்டும். ஜன்ம ஸாபல்யமே நமக்கு நாலாயிரத்தால் தான் என்று கருதவேண்டும்.

## 168.ஆக்கை உனக்காய் ஆக்கிக்கொள்.

நீ உடலுக்காக உழைப்பதற்குப் பதில் உடம்பை உனக்கு உபகரணமாகப் பயன்படுத்திக்கொள்.

**பரமசேஷி பாத நிவேதநார்த்தையான விசித்ர தேஹ ஸம்பத்தியைப் பெற்றாலும் "ஆக்கையின் வழி உழன்று"--- போந்த படிகளையும்**

***———பரமபதஸோபானம், நிர்வேதபர்வம்.***

நமக்காக உடம்பா, உடம்புக்காக நாமா? என்று சிந்திக்கத் தூண்டும் வாக்கியம் இது:

> பரமசேஷி என்பவன் பகவான். அவனுடைய பாதத்தில் நம்மைச் சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக ஒரு உடம்பு நமக்குத் தேவைப்படுவதால் அது நமக்கு கிடைத்திருக்கிறது. அப்படி நமக்குக் கிடைத்துள்ள உடம்பு நம்மை ஏவலாள் போல் நடத்துகிறது. நாமும் அதன் வழி உழலுகிறோம்.

சில அலுவலகங்களில் யார் யஜமானன், யார் பணியாள் என்பதே தெரியாமல் போய்விடுகிறது. பணியாளர்கள் தங்கள் நலனுக்காக மட்டுமே அலுவலகம் ஏற்பட்டிருப்பதாகக் கருதி விடுகிறார்கள். அவர்கள் இட்ட வழக்காக மொத்தமும் இயங்கவேண்டிய நிர்ப்பந்தம். அது போலத்தான் இங்கும். சரீரம் என்பது நமக்கு ஒரு உபகரணம். ஆனால் நாளடைவில் நாம் சரீரத்துக்கு உழைப்பது தான் அதிகமாகிவிடுகிறது. நமக்காகச் சரீரத்தைப் பயன்படுத்துவதன்றோ அறிவாளியின் செயல்? நம் பணியாளனுக்கு நாம் பணி செய்வானேன்? திருப்திப் படுத்துவதோடு நின்று நம் காரியங்களைச் செய்து கொள்ளலாமே? பகவத் பாகவத கைங்கரியத்துக்காக வேலை வாங்கலாமே? இது கூடச் செய்யாமல் நாம் சரீரேந்த்ரியங்களுக்கும் அடிமைப் படுவானேன்?

கடந்த நாலு அறிவுரைகளில் கொள் கொள் என்று சொன்னவற்றை ஒருசேரப்பார்ப்போம்:

- ஆறு குணம் சேர் உணவுட்கொள்.
- ஆசை கோபம் அளவாய்க்கொள்.
- ஆழ்வார் பாடல் வாழ்வாய்க்கொள்.
- ஆக்கையை உனக்காய் ஆக்கிக் கொள்.

## 169.ஆசறு வழியை அடையுங்கள்.

நிர்மலமான மாதவபக்திமார்க்கத்தை அடையுங்கள்.

श्रुतिकिरीटनिरूपण निर्भर
प्रसरयैव धिया परिशोधिताम्।
सुविमलां पदवीमदवीयसीम्
भजत माधवभक्तिमयीमिमाम्॥

*--- சததூஷணீ, முப்பத்தொன்பதாவது வாதம்.*

ஒவ்வொரு வாதத்தின் தொடக்கத்திலும் ஒரு பத்யத்தை இட்டிருக்கிறார் ஸ்வாமி தேசிகன். அந்த ரீதியில் பாவரூபாஜ்ஞாந பங்கவாதத்தின் ஆரம்பத்தில் உள்ள ச்லோகம் இது.

> மாதவபக்தி மார்க்கம் என்னும் இது வேதாந்தநிரூபணத்திலேயே கண்ணும் கருத்துமான அறிவால் பரிசோதிக்கப்பட்ட மார்க்கம் ஆகும். நன்றாக நிர்மலமாக இருப்பது. தூரமில்லாமல் அருகில் இருப்பது. இந்த வழியையே பின்பற்றுங்கள்.

ஒரு நல்வழிக்கு மூன்று முக்கியப் பண்புகள் தேவை. ஒன்று, நன்கு செப்பனிடப்பட்டிருக்க வேண்டும். இரண்டு, குப்பைகூளங்கள் இல்லாமல் தூய்மையாக இருக்கவேண்டும். மூன்று, தொலைவில்லாமல் அருகில் விரைவில் சென்றடையக் கூடியதாய் இருத்தல் நன்று. இந்த மூன்றுமே வாய்க்கப் பெற்றது பகவானிடம் பக்தி பண்ணும் மார்க்கம். ஆகையால் எல்லோரும் பக்திமார்க்கத்தை அடைவது நல்லது. வேதாந்த நிரூபணம் என்று ஏன் சொல்கிறார் என்றால், இப்பொழுது பண்ணும் காரியம் அதுவானபடியால், இந்த வாதத்துக்குப் பின் பக்திமார்க்கம் மேலும் விளங்கப்போவதால் என்னலாம். நம் ஸித்தாந்தத்தினரின் அறிவுக்கும் குத்ருஷ்டியினரின் அறிவுக்கும் முக்கியமான வித்தியாசத்தை முதல் பதத்தால் சொல்கிறார். அதியற்புதமாக அறிவு இருவருக்கும் இருக்கலாம். ஆனால் உபநிஷத்துகளின் உண்மைக்கருத்தை நிரூபிப்பதில் நைர்ப்பர்யம், முழு நோக்கம், நமக்கு மட்டுமே. மற்றவர்க்குச் சொந்தக் கருத்துகளைப் புகுத்துவதில் நைர்ப்பர்யம். வேதாந்த வாக்கியங்களுக்கு மதிப்பளித்து நிரூபித்துப் பார்த்தால், பக்திமார்க்கமே அடையத்தக்கது.

## 170.ஆன்றோர் அறிவுரை கேளுங்கள்.

பெரியோரின் உபதேசங்களைக்கேட்டு அதன்படி நடக்கவேண்டும்.

श्रुतशालिभिरुक्तानि दुरुत्सेकज्वरातुराः।
अप्रियाण्यपि पथ्यानि मा जिहासत जातुचित्॥

*--- யாதவாப்யுதயம், இருபத்திரண்டாம் ஸர்க்கம்.*

கண்ணன் அரசர்களிடம் கூறிய அறிவுரைகளுள் ஒன்று இது.

> கல்வியால் மிக்கவர்கள் கூறுபவை நம் மனதுக்குப் பிடிக்காதவையாயினும் நன்மை பயப்பவை ஆதலால் துர்மதம் என்னும் ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவர்களாய் ஒருகாலும் அவற்றை ஒதுக்கிவிடாதீர்கள்.

மருந்து கசந்தாலும் அது நோயைத் தீர்க்கும். ஆகையால் ஜுரமுள்ளவர்கள் மருந்தை வேண்டாமென்று எறியக்கூடாது. அதுபோலவே கற்றோரின் உபதேசங்களும், முதலில் பிடிக்காமல் போகலாம்; ஆனாலும் நாளடைவில் நலம் பெறுவிக்கும். அதனால் துர்மதம் என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் உபதேசம் என்னும் இந்த மருந்தைப் புறக்கணிக்கக்கூடாது. மருந்துக்கும் உபதேசத்துக்கும் மூன்று ஒற்றுமைகளைக் கூறியுள்ளார். அறிந்தவர் சொன்னது என்பது முதல் ஒப்புமை. கற்றுக்குட்டிகளின் அறிவுரையைப் பேண வேண்டிய அவசியமில்லை; போலி மருத்துவர் கொடுத்த மாத்திரைகளை உட்கொள்ளவேண்டியதும் இல்லை. ஆனால் கல்வியாளர் சொல்லும் மருந்துகளை ஏற்றுத்தான் ஆகவேண்டும். இரண்டாவது ஒற்றுமை தற்பொழுது ருசியில்லாவிடினும் நன்மை செய்யவல்லது என்பது, மருந்துக்கும் அறிவுரைக்கும் பொது. மூன்றாவதாக, மருந்தை எப்படி ஒருவேளை கூட நிறுத்தக்கூடாதோ, அதைப்போல உபதேசங்களையும் சிறிது கூடப் புறக்கணிக்கலாகாது. துர்மதம் என்பதை ஜ்வரமாகச் சொல்கிறாரே, அது பல காரணங்களால் பொருந்துகிறது. மருந்தால் ஜ்வரம் நீங்குவது போல் உபதேசங்களால் துர்மதம் நீங்கும் என்பது முதல் காரணம். (மருந்துக்கும் உபதேசத்துக்கும் உள்ள உபமாந-உபமேய-பாவத்தை உறுதி செய்வது.) ஜ்வரம் போலே துர்மதமும் தீங்கு விளைவிப்பது இரண்டாம் காரணம்.

## 171.ஆசான் புகழைப் பரப்புங்கள்.

ஆசாரியனின் கீர்த்தி பல இடங்களில் பரவும்படி நாம் பண்ணவேண்டும்.

**போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்**
**சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே**

***———அதிகாரசங்கிரகம்.***

சிஷ்யக்ருத்யாதிகாரத்தின் முடிவில் உள்ள பாசுரம் இது.

> நாம் நமது ஆசாரியனிடமிருந்து இதற்கு முன் ஏராளமாகப் பெற்றுள்ளோம். அவரைத் துதித்து மகிழ்வதும் அவரது உபதேசங்களைப் புத்தியில் கொள்வதும் அவருடைய புகழை நானாதிக்குகளிலும் பரப்புவதும் நமது கடமைகள். நாம் அவரிடமிருந்து பெற்றதுடன் ஒப்பிடும்போது இவ்வளவும் மிகச்சிறிதேயாம்.

ஆசானின் புகழைப் பரப்புவது நமது கடமை. கைம்மாறு செய்ததாக ஆகாது. அவருடைய மேதாவிலாஸத்தையும் வாத்ஸல்யாதி குணங்களையும் ஊரறிய உலகறியப் பேசுவதும், அவர் கூறிய விசேஷார்த்தங்களை அவர் பெயர் மொழிந்து வெளியிடுவதும், சந்தர்ப்பம்

கிடைக்கும்போதெல்லாம் அவருடைய வைபவத்தைப் பிறருக்கு எடுத்துரைப்பதும், ஆக இப்படிப்பல வழிகளில் ஆசாரியனின் புகழைப் பரப்புவது தகும்.

## 172.ஆயுள் காத்துக் கொள்ளுங்கள்.

கொலையுண்ணாமல் உயிரைக் காத்துக்கொள்ளுங்கள்.

तदत्रायुस्तावदस्माभिरभिरक्षणीयम् ।
“सर्वत एवात्मानं गोपायेत्” इति हि श्रूयते

--- *ஸங்கல்பஸூர்யோதயம், நாலாவது அங்கம்.*

லோபன் என்கிற கதாபாத்திரம், காமன் க்ரோதன் முதலியவர்களிடம் சொல்லும் பேச்சு இது. விவேகம் தலைதூக்கினால் தங்களுக்கு அழிவு ஏற்படும் என்பதனால் இவ்வாறு கூறுகிறான்.

> ஆகையால் இங்கு நாம் நம் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும். எல்லா வகையாலும் எல்லாரிடமிருந்தும் தன்னைக் காக்கவும் என்று வேதமே சொல்கிறது.

ப்ராணாபத்தில் ஒழுக்கம் குன்றினாலும் பரவாயில்லை; உயிரை மாயவிடக்கூடாது என்பர். தற்காப்புக்காக எதையும் செய்யலாம் என்பர். தன்னுயிரை நேசிப்பதில் தவறில்லை. தன்னுயிர் காத்தலை வேதமே விதிக்கிறது. உயிர்த்தியாகம் செய்து உலகத்தில் சாதிக்கவேண்டியது எதுவும் இல்லை. பிராணனைப் பரிரக்ஷிப்போம். உயிரை ஓம்புவோம். ஆயுளை ஆதரிப்போம். வாழ்வை வளர்ப்போம். மரணத்தை முடிந்தவரை தள்ளுவோம். வதப்படுவதை வேண்டோம். கொலையுண்பதிலிருந்து தப்புவோம்.

கடந்த நாலு அறிவுரைகளில் பண்ணச் சொன்னவற்றை ஒருசேரப்பார்ப்போம்:

- ஆசறு வழியை அடையுங்கள்.
- ஆன்றோர் அறிவுரை கேளுங்கள்.
- ஆசான் புகழைப் பரப்புங்கள்.
- ஆயுள் காத்துக் கொள்ளுங்கள்.

## 173.ஆறலை தாண்டத் திருவணை பார்.

ஸ்ரீராமஸேதுவைப் பார்ப்பது நல்லது. அதற்காக ஸேதுயாத்திரை போகவேண்டும்.

तं वीक्ष्य सेतु मधुनाऽपि शरीरवन्तः
सर्वे षडूर्मिबहुळं जलधिं तरन्ति॥

*--- வரதராஜ பஞ்சாஶத்.*

அத்திகிரி வரதனின் விபவாவதாரங்களில் நாலை மட்டுமே முழுப்பாடலிட்டு வருணிக்கிறார். அவற்றுள் மூன்றில் இப்பொழுதும் அவதாரத்தின் நல்விளைவு இருப்பதைப் பேசுகிறார். அந்த மூன்றில் ராமாவதாரத் துக்கான ச்லோகத்தில் இது பின் பாதி.

> இன்றைக்குக் கூட எல்லா உயிரினங்களும் அந்த ஸேதுவைப் பார்த்த மாத்திரத்திலேயே ஆறு அலைகள் கொண்ட கடலைக் கடக்கிறார்கள்.

இங்கு சொன்ன ஆறு அலைகள் என்னவென்றால், பசி, தாகம், சோகம், மோகம், மூப்பு, மரணம் என்பவையாம். இந்த ஆறு அபாய அலைகளைக் கொண்ட சமுத்திரம் எதுவென்றால் அது ஸம்ஸார ஸாகரமாகும். அதைக் கடக்க ஒரு வழி என்னவென்றால் ஸேதுயாத்திரை பண்ணி, திருப்புல்லாணியில் ஸமுத்திரஸ்நானத்தைக் காட்டிலும் முக்கியமாக, திருவணையைக் கண்ணால் காண்பதாம். பார்த்த மாத்திரத்தில் பாவம் போகும். ஸங்கல்பம் சொல்லி ஸமுத்திரஸ்நானம் பண்ணுவது, இராமபிரானைத் தியானித்து வழிபடுவது, இதெல்லாம் கூட அதிகப்படி தான். ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவது எளிதாகும். ராமாவதாரத்தினால் பிற்காலத்தவருக்கும் இவ்வாறு பெரும் பயன் ஏற்படுகிறது. இன்றளவும் இப்பயன் ஏற்படுவதால் அதுநாபி என்கிறார். (ஆனால் சில ஆண்டுகளாக இந்தப் பாக்கியத்தையும் இழந்து விட்டோமோ? ஸ்ரீராமஸேது கண்ணுக்குத் தெரிந்து கொண்டிருந்தது சில வருஷங்களுக்கு முன்பு வரை.) இந்த மஹாப்ராயச்சித்தம் இவ்வளவு எளிதாக அமைந்திருப்பது மட்டுமின்றி, இதற்கு எல்லோருமே தகுதி பெறுகிறார்கள். உயர்குலத்தவர், தாழ்குலத்தவர், படித்தவர், படிக்காதவர், ஆண், பெண், என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல் எல்லாரும் பயன் பெறும் லகுவான உபாயம் இது. அதற்காக, ஸர்வே ஶரீரவந்த: என்று பதப்பிரயோகம் பண்ணுகிறார். இதில் இன்னொரு இலக்கியநயமும் உண்டு. கடலைக் கடப்பதற்காக (இலங்கைக்குப் போவதற்காக) ராமர் ஸேதுவைக் கட்டினார்; ஆனால் அந்த ஸேது நமக்கு வேறொரு ஸமுத்திரத்தைத் தாண்ட உதவுகிறது. அது நிறைய அலை கொண்ட ஜலஸமுத்திரம்; இது ஆறு அலைகள் கொண்ட பிறவிக்கடல். அதைத்தாண்ட ஸேதுவின் மீது நடந்து போகவேண்டும்; இதைத்தாண்ட ஸேதுவைப் பார்த்தாலே போதும்.

## 174.ஆசான் கொடுத்த கண்ணால் பார்.

ஆசாரியனின் அனுக்கிரகத்தால் மறைந்துள்ள பொருள்களெல்லாம் தெரியவரும். அதைப்பெறு.

इह मूलमन्त्रसंवृतं
अर्थमशेषेण कश्चिदनुभवति।

**स्फटिकतलनिहितनिधिमिव**

**देशिकदत्तेन चक्षुषा जन्तुः॥**

--- ***ரஹஸ்யத்ரயஸாரம், மூலமந்த்ராதிகாரம்.***

மூலமந்த்ராதிகாரத்தின் ஆரம்பச்லோகங்களில் கடைசியானது இது. அஷ்டாக்ஷர மந்திரத்தின் பெருமையையும் ஆசார்ய கடாக்ஷத்தின் பெருமையையும் சேர்த்து விளக்குவது.

> மூலமந்திரத்தில் ஏராளமான அர்த்தங்கள் புதைந்துள்ளன. அவற்றை முழுமையாக அனுபவிக்கக் கூடியவர் அரியர். அதெல்லாம் புரிவதற்கு ஆசாரியரின் அனுக்கிரகம் அவசியம். அவர் நமக்கு ஒரு விசேஷமான கண்ணைக் கொடுப்பதாக நினைக்கலாம். இந்தக் கண்ணால் பார்த்தால், மறைந்திருக்கும் பொருளும் புலப்படும். படிகத்துள் வைத்த நிதி போல எல்லாம் பளிச்சென்று தெரியும்.

உள்ளிருக்கும் பொருள் வெளியே தெரியும்படி வழவழப்பான படிகம் போல் ஆவது மூலமந்திரம் என்கிற திருவெட்டெழுத்து. அதன் அர்த்தமோ நிதி போன்றது. அது எல்லார் கண்ணுக்கும் புலப்படாது. ஆசாரியன் அனுக்கிரகித்துக் கொடுத்த கண்ணால் மட்டுமே அதைப் பார்க்க முடியும். இவ்வாறு பார்ப்பவர்கள் மிகச்சிலரே. இந்த விசேஷமான கண்ணைப் பெறாதவர்கள் பூமிக்குள் புதைந்து கிடக்கும் நிதியைப் பார்க்க முடியாதது போல், இந்த நிதியையும் பார்க்க முடியாமல் கிடக்கிறார்கள். இந்தத் திருஷ்டாந்தத்தில் ஐந்து பொருத்தங்களை நாம் கவனிக்கவேண்டும். அர்த்தம் என்ற பதத்துக்கு, பொருள் என்னும் தமிழ்ச்சொல்லுக்குப் போல், இரண்டு அர்த்தங்கள். அறம் பொருள் இன்பம் என்ற முக்கையில் நடுவானதும் பணம் காசு என்ற உருவில் வருவதுமான பொருள் முதலாவது பொருள்; சொல்லின் பொருள் என்பது இரண்டாவது பொருள். மறைந்திருக்கும் நிதி என்ற உபமானத்தில் முதல் அர்த்தம்; மூலமந்திரத்தின் அர்த்தம் என்ற உபமேயத்தில் இரண்டாம் அர்த்தம். இப்படி உவமையணிக்குள் சிலேடையணியும் புகுந்திருப்பதை ரசிக்கவேண்டும். திருமந்திரம், புதையல் என்ற இரண்டுமே மறைந்த அர்த்தத்தைக் கொண்டவை என்பது முதல் பொருத்தம். இந்த நிதித் திருஷ்டாந்தத்தில் இன்னோர் உண்மையும் தெரிகிறது. காவியங்கள் போலல்ல மந்திரங்கள். காவியங்களில் பொருள் எளிதில் விளங்கும். மந்திரங்களிலோ பொருள்கள் மறைந்து கிடக்கும். இன்னுமொன்று. மூலமந்திரத்தின் பொருள் நிதி போல அதிகமாயிருக்கும். எட்டே எட்டு எழுத்துகளுக்குள் இவ்வளவு அர்த்தங்களா என்று நம்மை வியக்க வைக்கும். இந்த அர்த்தங்கள் மதிப்பு மிக்கவையாய், நன்மை பயப்பவையாய், நிதி போல் இருக்கும். ஆக மேலும் நான்கு காரணங்களாலும் இந்த உவமை பொருந்துகிறது. மறைந்திருப்பதாலும். மதிப்பு மிக்கதாலும், ஏராளமாகக் குவிந்திருப்பதாலும், துர்லபமானதாலும், நிதி போன்றது இம்மந்திரத்தின் அர்த்தம். இந்த நான்கையும் முறையே ஸம்வ்ருதம், அநுபவதி, அஶேஷேண, கஶ்சித், என்ற நாலு பதங்களால் தெரிவிக்கிறார். பூமிக்குள் இருக்கும் புதையல் சாதாரணக்கண்களுக்குத் தெரியாததால், மந்திரவாதியிடம் சென்று தவளைத்தைலம் தடவிய கண்ணைப் பெற்று அதன் மூலமாக புதையலைக் காண்பர் சிலர். அதே போல இந்த மூலமந்த்ரார்த்த நிதியைக் காண்பதற்கும் வெறும் கண்ணால் முடியாது. ஆசாரியன் கொடுத்த கண்ணால் பார்த்தால் மட்டுமே இது புலனாகும். இப்படி இந்த அர்த்தங்களை முழுமையாக அனுபவிப்பவர் மிகச்சிலரே. புதையல் பெறும் அதிருஷ்டம் நிறைய பேருக்குக் கிடைக்குமா?

வெறும் கண்ணால் பார்க்கும்போது கல்மண் மூடிய புதையல் போல் கண்ணுக்குத் தெரியாத வஸ்து இந்த விசேஷக்கண்ணால் பார்க்கும்போது பளிங்குக்குள் வைத்த நிதி போலப் பளிச்சென்று தெரியும். இந்த விசேஷார்த்தங்களையெல்லாம் இந்த அதிகாரத்தில் பார்க்கப்போகிறோம் என்று பீடிகை போடுகிறார் ஸ்வாமி தேசிகன். ஆசாரியன் கொடுத்த கண்ணால் பார்க்க வேண்டும் என்பது ஸாரமான நீதி. தான்தோன்றியாக மந்த்ரார்த்தங்களை அறிய முற்படக்கூடாது. முற்பட்டாலும் முழுமையாகத் தெரிந்து விடாது.

## 175.ஆரிருளாலொளி அருமை பார்.

இறைவன் படைப்பில் பயனற்றதென்று எதையும் திரஸ்கரிக்கவேண்டாம்.

**विदधातु धाम तमसा कृतेन किम्**

**यदि वा न वेत्ति न विधिर्न वा वयम्।**

**प्रथमोपकारि चरमं यतस्ततः**

**प्रतियोगिनो भवति तस्य सार्थता॥**

--- ***ஸுபாஷிதநீவி.***

ஸமசித்த பத்ததியில் கடைசிக்கு முன் சுலோகம் இது. பாரபக்ஷம் இல்லாத பெரியோர்கள் சில சமயங்களில் பக்ஷபாதம் காட்டுவது போல் தோன்றினாலும் நாம் யோசித்தால், அவர்கள் பண்ணுவது சரியே என்பது புரியும் என்கிறார்.

> இறைவன் ஒளியைப் படைக்கட்டும். எதற்காக இருட்டையும் படைக்கவேண்டும்? படைப்பவனும் அறியாதவன் அன்று. நாமும் அவ்வாறன்று. ஒளியின் அருமை இருட்டில் தான் தெரியும். இப்படி ஒரு பயன் எதிரிடைப் பொருளுக்கு உண்டு.

இது அந்யாபதேசமாகச் சொல்லிய நீதி. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்றொரு பழமொழி. அதுபோல ஒளியின் அருமை இருளில் தெரியும் என்கிறார். இருட்டுக்கும் பயன் உண்டு. நீதி என்ன என்பதை நம் ஊகத்துக்கு விட்டு விடுகிறார். நான்கு நீதிகளைச் சொல்லலாம். கடவுள் படைப்பில் எதுவும் வீண் அன்று என்பது ஒன்று. எத்தனையோ மக்கள் சாதனை ஏதும் புரியாதவர்கள் வ்யர்த்தமாக வாழ்கிறார்கள் என்று நாம் நினைத்துக் கர்வப்படலாகாது. ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு நற்பயன் இருக்கும் என்று எண்ணி யாரையும் மட்டம் தட்டாமல் இருக்க வேண்டும். இது முதல் நீதி. பக்ஷபாதம் கிடையாது என்ற பெயரில் தகுதியுள்ளவரையும் தகுதியில்லாதவரையும் சமமாக ஒரு பெரியவர் ஆதரித்தால், அதில் குறைகாணவேண்டாம். எல்லோருக்கும் ஏதோ ஒரு தகுதி இருக்கத்தான் இருக்கிறது. இது ஸமசித்தபத்ததிக்குப் பொருந்திய நீதி. மூன்றாவது நீதி என்னவென்றால், உலகில் ஏற்றத்தாழ்வுகளும், நிறைகுறைகளும், ஸஹஜமானவை. அவை இருக்கக்கூடாது என்று வாதிப்பதை விட, இருக்கிற நிறைகுறைகளை ஏற்று, அதன் மூலம் எல்லாரும் பயன் பெறும்படி பண்ணுபவனே அறிவாளி. இருட்டும் வெளிச்சமும் போல் பரஸ்பரவிரோதிகள் கூட தத்தம்

வரையறைக்குள் பயன் தர முடியும். வித்தியாசங்கள் தேவையும் கூட. எல்லாரும் ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக வராததால் தான் முதல்பரிசுக்காரனுக்குப் பெருமை. மற்றவர்களுக்கு வேறொரு அம்சத்தில் பெருமை இருக்கக் கூடும். நாலாவது நீதி. கடவுளே நல்லதையும் கெட்டதையும் சேர்த்துப் படைத்தது தப்பு; எல்லாம் நல்லதாகவே படைத்திருக்கலாம் என்னலாகாது. பெரியோரே பாரபக்ஷம் பண்ணுகிறார்கள்; அவர்கள் பண்ணுவது சரியில்லை; என்று வாதிடலாகாது. அந்தப் பாரபக்ஷத்துக்கும் ஒரு உபயோகம் இருக்கும்.

## 176.ஆகமம் என்னும் விளக்கால் பார்.

சாஸ்திரம் என்பது விளக்கைப் போன்றது. அதைக்கொண்டு இருட்டிலும் பார்.

**अविवेकविभावर्यां धर्ममार्गमपङ्किलम् ।**

**द्रष्टुं दीप इव न्यस्तः नायकेन नयागमः ॥**

***--- யாதவாப்யுதயம்.***

இருபத்திரண்டாம் ஸர்க்கத்தில் கண்ணன் அரசர்களுக்குச் சொல்லும் அறிவுரைகளில் இது ஒன்று. ராஜநீதிப்படி நடக்க வேண்டும் என்பது.

> அவிவேகம் என்கிற ராத்திரியில் அதர்மம் என்கிற சேறு கலவாத அறநெறியை நன்கு பார்ப்பதற்காகப் பகவானால் வைக்கப்பட்ட விளக்காகும் நீதிசாஸ்திரம் என்பது.

அவிவேகம் என்பது பகுத்தறியாமை. அதை இரவாக உருவகப் படுத்துகிறார். இருட்டினால் நம்மை வழிதெரியாமல் இடரப் பண்ணுவதாலும், சேற்றில் விழவைப்பதாலும், இரவு போன்றது அறியாமை. சேறு போன்றது அதர்மம். நம்மைப் புதையுண்டு சிக்க வைப்பதாலும் மாசுபடுத்துவதாலும் சேறு போலத் தீநெறி ஆகும். இந்தச் சேற்றில் மாட்டிக்கொள்ளாமல் நாம் தர்மமார்க்கத்தில் நடக்க வேண்டும். அதற்கு வெளிச்சம் தேவை. அதற்காகப் பகவான் ஒரு விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார். அந்த விளக்கு தான் நீதிசாஸ்திரம் என்பது. அது இருப்பதால் தான் சேற்று வழி எது, நல்ல வழி எது, என்பது நமக்குத் தெரிய வரும். இந்த விளக்கின் துணைகொண்டு நீங்கள் தருமவழியில் நடக்கவேண்டும். உங்கள் நன்மைக்காக ஏற்பட்ட சாஸ்திரங்களால் நீங்கள் பயனடைய வேண்டும். நமக்கே தெரியும், சாஸ்திரம் எதற்கு, என்று போய், சேற்றுக்குள் அழுந்துவதைத் தவிருங்கள்.

கடந்த நாலு அறிவுரைகளில் பார்ப்பது குறித்துச் சொன்னவை:

- ஆறலை தாண்ட அணையைப்பார்.
- ஆசான் கொடுத்த கண்ணால் பார்.
- ஆரிருளால் ஒளி அருமை பார்.
- ஆகமம் என்னும் விளக்கால் பார்.

## 177.ஆதர்சம் போல் காட்டுக நேர்.

கண்ணாடி போல் நிர்மலமாய்க் காட்டவேண்டும்.

स्वदृष्टिप्रतिघातेऽपि स्वच्छे क्वचन शोभनः।
तत्र ह्यभिमुखः स्वात्मा झटित्येव प्रकाशते॥

***---ஸுபாஷிதநீவி.***

ஸதாஶ்ரித பத்ததியில் உள்ள இந்த ச்லோகம் நாம் எப்படிப்பட்ட நல்லோரை அணுக வேண்டும் என்பதைச் சொல்கிறது.

> தன் பார்வை தடைப்பட்டாலும் நிர்மலமான கண்ணாடியிலே எதிரே நிற்பவர் தன் சொந்த உருவத்தை விரைவில் காண முடிகிறது. இதே வாக்கியத்தின் இன்னொரு அர்த்தப்படி, தன் கருத்துக்கு மாறுதல் ஏற்பட்டாலும், அப்பழுக்கற்ற நல்லவரை அணுகி அபிமுகனானால், தனக்கு ஆத்மஜ்ஞானம் ஏற்படும்.

கண்ணாடி போலே நல்லவன். அதற்கு மூன்று காரணங்கள். ஸ்வச்சமாக (மாசில்லாமல்) இருப்பது ஒரு காரணம். தன்னை எதிர் நோக்கி வந்தவனுக்கு அவனது ஸ்வரூபத்தைக் காட்டுதல் என்பது இரண்டாவது காரணம். கண்ணாடி எப்படி மங்களவஸ்துவோ, அதுபோல, நல்லவரும் மங்களம் பயப்பவர். இதை ஶோபந என்ற பதத்தால் சொன்னார். இது மூன்றாவது காரணம். இப்படிக் காட்டுவதற்கு, கண்ணாடிக்கு அதிக நேரம் தேவைப்படுவதில்லை. அபிமுகமாய் நின்றவுடனே உருவம் பிரதிபலித்து விடுகிறது. நல்லாசானும் அப்படியே. அபிமுகரானவர்க்கு விரைவிலேயே ஆத்மஜ்ஞானத்தை ஏற்படுத்துவார். இதை ஜடிதி என்ற பதத்தால் சொன்னார். ஸ்வாத்மா என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள். கண்ணாடி பக்ஷத்தில் தன் உருவம் என்று அர்த்தம். நல்லவன் பக்ஷத்தில், தன் அந்தராத்மா என்று அர்த்தம். இப்படிச் சிலேடையால் வலுப் படுகிறது இந்த திருஷ்டாந்தம். நல்லவர்கள் நேராகவும் விரைவாகவும் வஸ்துக்களைக் காட்டுவர் என்பது நீதி. நாம் அழுக்கு படியாத கண்ணாடி போல மற்றவர்க்குப் பயன்படும் மங்களப்பொருளாக ஆகவேண்டும். நமக்கு அபிமுகரானவர்க்கெல்லாம் உபயோகப்படவேண்டும். கண்ணாடி தன் அருகில் வராதவரது உருவத்தைப் பிரதிபலிப்பதில்லை. அதுபோல நல்லோரும் பராங்முகர்களுக்கு உபதேசங்களைப் பண்ணுவதில்லை. இதை அபிமுக என்ற வார்த்தையால் சொன்னார். தும்புதூசி படியாத கண்ணாடி மட்டுமே நல்ல பிரதிபிம்பத்தைக் காட்டும். அதுபோல, குற்றம் குறைகள் இல்லாத நல்லவர் மட்டுமே தன்னை அணுகியவருக்கு ஆத்மஜ்ஞானத்தை ஏற்படுத்த முடியும். இதை ஸ்வச்சே என்ற பதத்தால் சொன்னார்.

## 178.ஆறால் தூய்மை ஆன்றோர் சேர்.

தூய்மை அடைய விரும்புபவர் சாதுக்களோடு சேரவேண்டும். ஆறு விதமாகத் தூய்மை உண்டாகும்.

उक्तं हि तत्सङ्गतिफलं च्यवन-नहुष-संवादे

सम्भाषा दर्शनं स्पर्शः कीर्तनं स्मरणं नतिः।

पावनानि किलैतानि साधूनामिति शुश्रुम॥

*--- ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.*

உன் அடிமை யின்பத்தில் திளைப்பரின் வீட்டில் என் பிறவி அமையட்டும் என்ற ஆளவந்தார் ஸ்தோத்ரவரிக்கு உரையிடுகையில் இந்த ஸாதுக்களின் ஸஹவாஸம் நமக்கு ஶ்ரேயஸ்கரம் என்பதற்கான ப்ரமாணங்களை அடுக்குகிறார். அதில் முதலாவது இது.

> அவர்களோடு (ஆண்டவனின் அடியார்களோடு) சேர்க்கையின் பலன் ச்யவந முனிவருக்கும் நஹுஷ ராஜனுக்கும் நடந்த உரையாடலில் சொல்லப்பட்டதன்றோ? உரையாடுவது, காண்பது, தொடுவது, கீர்த்திப்பது, தியானிப்பது, வணங்குவது, என்கிற இவை சாதுக்களோடு பண்ணினால் தூய்மைப்படுத்துபவையாம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

நல்லவர்களோடு ஸம்பாஷிப்பதும், நல்லவர்களைத் தரிசிப்பதும், நல்லவர்களைத் தொடுவதும், நல்லவர்களைப் பற்றிப் பேசுவதும், நல்லவர்களை மனத்தில் நினைப்பதும், நல்லவர்களைப் பணிந்து வணங்குவதும் என்கிற இந்த ஆறாலும் தூய்மை ஏற்படும். மனமாசு நீங்கும். இது பலரும் சொல்லக் கேட்கும் உண்மை. அதனால் தான் ஆளவந்தாரும் பாகவதர்களின் திருமாளிகைகளில் புழுவாகவேனும் பிறக்கும் நிலையை வேண்டுகிறார்.

## 179.ஆவர்த்தம் கெட சொல் ஶ்ரீ பேர்.

சுழலிலிருந்து விடுபடுவதற்காகத் திருமகளின் திருநாமங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள்.

अस्येशाना त्वमसि जगतस्संश्रयन्ती मुकुन्दम्

लक्ष्मीः पद्मा जलधितनया विष्णुपत्नीन्दिरेति।

यन्नामानि श्रुतिपरिपणान्येवमावर्तयन्तः

नावर्तन्ते दुरितपवनप्रेरिते जन्मचक्रे॥

*--- ஶ்ரீஸ்துதி.*

லக்ஷ்மியின் நாமங்களை ஜபிப்பதால் ஏற்படும் நன்மையை நயத்துடன் சொல்கிறார்.

நீ இவ்வுலகின் ஈசானை(**ஆளுபவள்**). முகுந்தனை ஆச்ரயிக்கிறவள். உன் பெயர்கள் வேதங்களுக்கு மூலதனங்கள். லக்ஷ்மி என்றும் பத்மா என்றும் ஜலதிதநயா என்றும் விஷ்ணுபத்நி என்றும் இந்திரா என்றும் இவ்வாறு அவற்றைப் புரட்டுபவர்கள் உருளுவதில்லை. தீவினை என்றும் காற்றால் நுந்தப்படும் பிறவிச்சுழலில்.

அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ என்று வேத வார்த்தைகளையே ஸ்ரீஸ்துதியில் பிரயோகித்து அதன் பின்னர் நமக்குச் சொல்லும் அறிவுரை அவளுடைய திருநாமங்களை ஸங்கீர்த்திக்க வேண்டும் என்பது. அவற்றை வேதத்தின் மூலதனமாகச் சொல்வதன் கருத்து வருமாறு: வியாபாரத்தில் மூலதனம் என்பது நாளடைவில் பெருகிப் பெரும் தனமாவது போல, வேதத்தில் உள்ள பட்மா, விஷ்ணுபத்நீ, முதலிய திருநாமங்களும், விஸ்தாரமாகி வேதங்களாகியுள்ளன. வியாபாரத்தின் செழிப்புக்கு முதலீடு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானவை வேதத்துக்கு லக்ஷ்மிநாமங்கள். நீ சுழலுவதைத் தவிர்க்க வேண்டுமானால் உனக்குப் பதிலாக வேறொன்று சுழலட்டும் என்பவர் போல், நாமங்களை நாக்கில் சுழற்றுபவர்கள், பிறவிச்சுழலில் உருளமாட்டார்கள் என்கிறார். உருளப் போகிறாயா அல்லது உருட்டப் போகிறாயா என்பதைத் தீர்மானித்துக்கொள். நாக்கில் நாமங்களை நீ உருட்டிவிடு. (திரும்பத் திரும்பச்சொல்.) இது நீ ஜந்மசக்ரத்தில் உருளாமல் இருக்க வழியாகும். (திருப்பெயர்களை) ஆவ்ருத்தி பண்ணுபவர் ஜந்மசக்ரத்தில் ஆவ்ருத்தி அடைவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், ஒருவரது ஜன்மசக்ரம் சுழலவேண்டுமானால், காற்றாலை உருளைகளுக்குப் போலே, தீவினை என்னும் காற்று பலமாக வீசவேண்டும். (துரித பவநம் என்கிறார் இதை.) இந்தத் தீவினைகளை நாமஸங்கீர்த்தனத்தால் ஒழித்துக்கட்டிவிட்டால், சக்கரம் சுழலாமல் நின்றுவிடும்; தப்பித்து விடலாம். நம் வினைகள் நமக்கு எதிராக ஒன்றை உருட்ட விடாமல், நாம் அவற்றுக்கு எதிராக வேறொன்றை உருட்டிவிடலாம். தாயாரின் திருநாமங்கள் நம் நாக்குகளில் உருளட்டும். ஜபம் பண்ணுவோம். முதலீட்டுத்தொகையைத் தேங்கவிடாமல் சுழலவைக்கவேண்டும். மூலதனத்தைச் சாதுரியமாகப் பல இடங்களில் புரட்டினால், நாம் உறுதிப்பாட்டுடன் இருக்க முடியும் என்பது ஆட்டைத்தூக்கி மாட்டில் போடும் வியாபாரிகளுக்குத் தெரியும். இங்கே நடப்பதும் அது தான். மூலதனமானது லக்ஷ்மிநாமம். அதைப்புரட்டுவது என்றால் திரும்பத் திரும்பச் சொல்லி ஜபிப்பது என்று அர்த்தம். அப்படிச் சாதுரியமாகப் புரட்டுபவர்கள் அபாயச்சுழலில் சிக்காமல் இருக்கலாம் என்று வியாபாரிகளுக்குப் புரியும் பாஷையில் பேசுகிறார்.

## 180.ஆறுக்கும் மேல் பொறுமை கூர்.

ஆயுதங்களை விட வலிமையுடன் வீழ்த்தக்கூடியது பொறுமை. அதைக்கடைப்பிடியுங்கள்.

न शापो नाभिचरणं न वह्निर्न विषं तथा।

नास्त्राणि न च शस्त्राणि यथा तीक्ष्णतरा क्षमा॥

***--- யாதவாப்யுதயம்.***

கிருஷ்ணர் அரசருக்குக் கூறும் அறிவுரைகளில் ஒன்று இது.

பகைவர்களை அழிக்கக் கூராக ஒன்று வேண்டுமா? பொறுமையைக் கடைப்பிடியுங்கள். (முனிவர்கள் இடும்) சாபமும் இவ்வளவு கூரானதன்று. (மாந்த்ரிகர்கள் பண்ணும்) அபிசாரங்களும் கூரன்று. (வஞ்சகர்கள் ஏற்படுத்தும்) தீவிபத்தும் கொடியதன்று. (துரோகிகள் பண்ணும்) விஷம் வைத்தலும் கொடூரமன்று. (சூரர்களான எதிரிகள்) பாய்ச்சும் அஸ்திரங்களும் சஸ்திரங்களும் கூட அவ்வளவு கூரானவை அல்ல. இவை எல்லாவற்றையும் விடக்கூரானது பொறுமை தான்.

தமிழில் கூர் என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. அன்பு கூர், அருள் கூர், என்று வினைச்சொல் ஆகும்போது, பண்ணு, கடைப்பிடி என்று பொருளாம். கத்தி கூர், புத்தி கூர், என்று பெயர்ச்சொல்லாகும்போது, கூர்மை கொண்டது என்று பொருளாம். இங்கு பொறுமை கூர் என்றது இரண்டு அர்த்தங்களிலுமாம். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அதுவே ஆயுதங்கள் முதலியவற்றைக் காட்டிலும் கூரானதாம். கூரான ஆயுதங்கள் எதிரிக்கு விளைக்கும் சேதத்தை விட அதிகமாக, உங்கள் பொறுமை உங்கள் பகைவர்களை வன்மையாகத் தகர்த்து விடும் என்று கருத்து. சாபங்களுக்கும் ஆயுதங்களுக்கும் மசியாதவர்களெல்லாம் பொறுமைக்கு மசிவார்கள். சூழ்ச்சிகளுக்கு மடியாதவர்களெல்லாம், உங்கள் பொறுமையில் மடிந்துபோவார்கள். உங்கள் பகைவர்கள் கூட உங்கள் வழிக்கு வந்து விடுவார்கள். பொறுமைக்கு அத்துணை வலிமை உண்டு. அரசர்கள் பொறுமையால் நிறைய சாதிக்க முடியும். சாபம், அபிசாரம், தீ, விஷம், அத்திரம், ஆயுதம், என்ற ஆறுக்கும் மேல் கூரானது பொறுமை.

கடந்த நாலு அறிவுரைகளில் சொன்னவற்றைச் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆதர்சம் போல் காட்டுக நேர்.
- ஆறால் தூய்மை ஆன்றோர் சேர்.
- ஆவர்த்தம் கெட சொல் ஶ்ரீ பேர்.
- ஆறுக்கும் மேல் பொறுமை கூர்.

## 181.ஆட்டம் காணா மலை போல் நில்.

பிறரது மிரட்டலுக்குப் பணியாமல் உறுதியாய் இரு.

विबुधमहिते मेरौ ऐरावणः करटी मुहुः
कषतु करटं कण्डूलं स्वं क्षरन्मदकर्दमम्।
भजतु च तटक्रीडां पादैर्विसन्धि तथा दृढम्
न च मलिनता नापि क्षोभः क्षमाभृति सम्भ्रमः॥

***--- ஸுபாஷிதநீவி.***

ஒன்பதாவதான நீதிமத்பத்ததியில் கடைசி சுலோகம் இது.

> மேருமலையைக் கவனி. அதன் மீது ஐராவதயானை மதஜலத்தைப் பெருக்கிக்கொண்டு வந்து கன்னத்தைக் கரகரவென்று தேய்க்கட்டும். அதன் தாழ்வரையில் முட்டிமுட்டி, மூட்டே உடையும்படி, கெட்டியாகக் குத்தி விளையாடட்டும். இதனால் அந்த மலைக்கு இழுக்குமில்லை. கலக்கமும் இல்லை. பரபரப்பும் இல்லை. நம்முடைய எதிரி பலசாலியாக இருந்தாலும், அவன் நம்மை மிகவும் துன்புறுத்த முனைந்தாலும், நாம் பொறுமையும் மன உறுதியும் படைத்தவர்களாய் எதையும் சமாளிக்கவேண்டும்.

மனம் தளரக்கூடாது. தைரியம் இழக்கக்கூடாது. மிரண்டு போகக்கூடாது. மேரு மலைபோல் நிமிர்ந்து நிற்க வேண்டும். மிகப்பெரிய யானை மதஜலத்தைப் பெருக்கினாலும் சரி, கன்னத்தைத் தேய்த்துக் கசக்கினாலும் சரி, தந்தத்தால் முட்டி விளையாடினாலும் சரி, மலைக்கு ஆவது ஒன்றுமில்லை. அந்த யானையைத் தனக்கு நிகராகக் கருதி அந்த மலை பதில்சண்டைக்குப் போவதும் இல்லை. அந்த உரசலுக்கும் முட்டலுக்கும் கலக்கமுறுவதும் இல்லை. அலட்சியம் செய்து விடுகிறது. தன் உறுதிப்பாட்டில் தளர்ச்சி அடையாமல் இருக்கிறது. பெரியோரும் அவ்வாறே இருப்பர். பெரியோருக்கும் மேருவுக்கும் சிலேடையால் இரண்டு ஒப்புமைகள் கிடைப்பதால் இது மேலும் வலுப்படுகிறது. விபுதர், க்ஷமா, மதம், என்ற மூன்று பதங்களிலும் சிலேடை உண்டு. விபுதர் என்றால் தேவர் என்றும் அறிஞர் என்றும் இரு பொருள்கள். மேருமலை தேவர்களால் கொண்டாடப்படுவதாலும், பெரியோர்கள் பண்டிதர்களால் கொண்டாடப்படுவதாலும், விபுதமஹிதராக இருவருமே ஆகிறார்கள். க்ஷமா என்பதற்குப் பொறுமை என்றும் பூமி என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால், மேருவும் க்ஷமாப்ருத் (மலை) ஆகிறது; பெரியோனும் க்ஷமாப்ருத் (பொறுமை பூண்டவன்) ஆகிறான். இதனாலெல்லாம் மேரு போல ஆன பெரியவன் எதிரிகளின் தாக்குதலை அலட்சியம் செய்வதிலும் அது போலவே ஆவதில் வியப்பில்லை. மதம் என்றால் யானைக்கு வழியும் வாசனைஜலம் என்றும் திமிர் என்றும் இரண்டு அர்த்தங்கள். எதிராளிக்கு மதப்பெருக்கு அதிகமானாலும் இழுக்கு அவனுக்குத்தான்; பெரியோருக்கன்று. முட்டல் குத்தலுக்கெல்லாம் அடிபணிந்து விடக்கூடாது. ஆட்டம் காணக்கூடாது. பொருட்படுத்தவே கூடாது. தன் கொள்கைகளில் உறுதிப்பாடு, எந்த அவஸ்தையிலும் தளரக்கூடாது. உறுதியுடனும் பொறுமையுடனும் இருந்தால், பகைவன் வலி தாங்காமல் ஓடிவிடுவான். மதத்தைப் பெருக்குவதால் அவனுக்குத்தான் இழுக்கு. முட்டுவதால் அவனுக்குத்தான் மூட்டு முறிந்து போகும். பெரியோனுக்குக் குறையும் இல்லை; கலக்கமும் இல்லை. தகுதி குறைந்தவர்களுடன் தகராறுக்குப் போவதைத் தவிர்க்கவேண்டும்.

## 182.ஆண்டவன் கதை பேர் குணங்கள் சொல்.

பகவானின் குணங்களையும் சரிதங்களையும் கீர்த்திக்கவேண்டும்.

एतावताऽलं अघनिर्हरणाय पुंसाम्
सङ्कीर्तनं भगवतो गुणकर्मनाम्नाम् ।

आक्रुश्य पुत्रं अघवान् यदजामिळोऽपि
नारायणेति म्रियमाण उपैति मुक्तिम्॥...

**தோஷாந்தரங்கள் உண்டாகிலும் ஸங்கீர்த்தனம் பாவநதமம் என்றபடி.**

***--- ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவரக்ஷாதிகாரம்.***

ஸங்கீர்த்தனத்துக்கு உள்ள ப்ரபாவத்தைக் கோடிட்டுக்காட்டுகிறார். அதே சமயத்தில் பகவத்த்வேஷம் கலவாமல் இருந்தால் மட்டுமே நல் விளைவுகள் என்பதையும் வரையறுக்கிறார்.

> மக்களின் பாவம் கழிவதற்கு இதுவே போதும். பகவானின் குணங்களையும் செயல்களையும் நாமங்களையும் கீர்த்தனம் பண்ணுவது என்பதாலேயே தீவினைகளை அகற்ற முடியும். இதற்கு நிதர்சனம் அஜாமிளன் என்கிற பாவி. தன் பிள்ளையின் பெயரை நாராயணா என்று சொல்லி உரக்கக் கத்தினான். சாகும் தறுவாயில் இவ்வாறு பண்ணியதால் முக்தி அடைகிறான் அவனும். **வேறு குறைகள் இருந்தாலும் நாமசங்கீர்த்த்தனம் மிகவும் தூய்மைப் படுத்துவதாம்**.

ஸங்கீர்த்தனத்துக்கு அவ்வளவு பெருமை. ஶ்ரீமத்பாகவதத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுகிறார். அஜாமிள உபாக்கியானம் என்றொரு கதை. அதில் அஜாமிளன் கத்தியது பகவத்பக்தியால் அன்று. தன் பிள்ளையை அழைக்கத்தான் அவன் கத்தினான். பிள்ளைக்கு நாராயணன் என்ற பெயர் இருந்ததால், இறக்கும் தறுவாயில் தன்னையும் அறியாமல் பகவானின் பெயரை உச்சரித்துவிட்டான். அடித்தது அதிருஷ்டம். பறந்தது பாவம். விளைந்தது வீடுபேறு. அஜாமிளன் கதையிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? எவ்வளவு பெரிய பாவமும், பகவானைக் கீர்த்திப்பதால் நசிந்து போகும் என்பது. அவருடைய தயை, ஸௌசீல்யம், முதலிய குணங்களையும், அவதரித்தல், உபதேசித்தல் முதலிய கருமங்களையும், ராம, கிருஷ்ண, முதலிய பெயர்களையும் (குண கர்ம நாம்நாம் என்கிறார்) கீர்த்தித்தால் பாவங்கள் ஓடிப்போகும். ஏதாவதா அலம் என்றதன் கருத்து என்னவென்றால், பாவம் கொடியதானாலும், கீர்த்தனம் எளியதானாலும், இதுவே போதும் என்பதாம். கொடியதை ஒழிக்க எளியது போதுமோ என்று ஐயுறவேண்டாம்; அஜாமிளன் கதையில் நடந்ததைப் பாருங்கள். பகவானின் சரிதைகளைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.

## 183.ஆரம்பத்தில் பயனைச் சொல்.

பிறருக்காகப் புனையும் **நூல்**களிலும் **செயல்**களிலும், முதலில் பயன்என்ன என்பதைச் சொல்.

प्रयोजनं चात्र अवश्यं वक्तव्यम्। तदप्याहुः।
सर्वस्यैव हि शास्त्रस्य कर्मणो वाऽपि कस्यचित्।
यावत्प्रयोजनं नोक्तं तावत्तत्केन गृह्यते॥ इति।

मीमांसाख्या तु विद्येयं बहुविद्यान्तराश्रया।

न शुश्रूषयितुं शक्या प्रागनुक्त्वा प्रयोजनम्॥ इति च

--- *தத்வடீகா.*

ஸ்ரீபாஷ்யத்தில் முதல் ச்லோகத்திலேயே அந்த நூலின் பயனைக் குறிப்பால் உணர்த்துகிறாரே, இதைத் தத்வடீகையில் விளக்கும்போது, எல்லா நூல்களிலும் இது தேவை என்கிறார்.

> இங்கு பயனை அவசியமாகச் சொல்லியே ஆகவேண்டும். அதையும் சொல்லியுள்ளார்கள். எல்லாச் சாஸ்திரத்துக்கும், எந்தவொரு கருமத்துக்கும், எதுவரை பயனைச்சொல்லவில்லையோ, அதுவரை அது எவனால் ஏற்கப்படும்? என்று. மீமாம்ஸை என்னும் இந்த வித்யையானது மற்ற பல வித்யைகளை ஆச்ரயித்தது. தொடக்கத்திலேயே பிரயோஜனத்தைச் சொல்லாமல் இதைக் கேட்க விழையும்படி பண்ணுவது முடியாத காரியம்.

எந்தக் கிரந்தத்தை எழுதினாலும் சரி, முதலில் அதன் பயனைச் சொல்லிவிடவேண்டும். பிறருக்காகத் தானே அதை எழுதுகிறோம்? பிறர் அதைப் படிக்கத் தூண்டும்படி, அந்தப் புத்தகத்தின் பயனைச் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லாவிட்டால், பிறருக்கு அதைப் படிப்பதில் எண்ணம் ஏற்படாது. எழுதியதெல்லாம் வீணாகும். குறிப்பாக மீமாம்ஸாசாஸ்திர நூல்களில் இது இன்னும் முக்கியம். ஏனென்றால். வேறு பல வித்யைகளின் தொடர்ச்சியானது அது. எளிதில் படிக்கமுடியாதது. ஆவலுள்ளவர் மட்டுமே அதைப் படிக்கத் துணிவர். ஆகையால் ஆவலை ஏற்படுத்தும்படி, கிரந்தப்ரயோஜனத்தை ஆரம்பத்திலேயே சொல்லிவிடவேண்டும். அதை அகிலபுவந என்று தொடங்கும் ச்லோகத்தில் பாஷ்யகாரரும் பண்ணியிருக்கிறார். ஆரம்பத்தில் பயனைச் சொல்ல வேண்டிய நிலை புத்தகம் எழுதுபவருக்கு மட்டும் தான் என்றில்லை; பிறருக்குப் பயன்படுவதற்காக எந்தக் காரியம் பண்ணினாலும் அங்கேயும் இந்த அறிவுரை பொருந்தும். என்கிறது இங்கெடுத்தப் பிரமாண வசனம்.

## 184.ஆவுக்குக்கொடு தினமும் புல்.

தினந்தோறும் பிறர்வீட்டுப் பசுமாட்டுக்கு ஒரு சிறிது புல்லைக்கொடு."

ग्रासं गवामपि" इत्येतच्च परगोविषयम्।

ग्रासमुष्टिं परगवे दद्याच्चैव न लोपयेत्।

इति श्रीवैष्णवधर्मशास्त्रोक्तेः। कृष्णमन्त्रकल्पेऽप्युक्तम्।

"दद्याद्ग्रासं" इत्यारभ्य गोषु चैवं प्रसन्नासु गोपालोऽपि प्रसीदति॥ इति

---*ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.*

தினப்படி பண்ணவேண்டிய காரியங்களைச் சொல்லும்போது ஸந்தியாவந்தனத்துக்குப் பிறகு இதையும் சொல்கிறார்:

> “பசுக்களுக்குப் புல்லையும்” என்று சொல்லுமிது பிறரது பசுக்களைப் பற்றியதாம். ஒரு முஷ்டியளவு புல்லை அயலாரது பசுவுக்குத் தந்தேயாகவேண்டும். குறைக்கக்கூடாது, என்று விஷ்ணுதர்மத்தில் சொல்லியுள்ளபடியால். இது கிருஷ்ணமந்த்ர கல்பத்திலும் சொல்லப்பட்டுள்ளது. புல்லைத் தரவேண்டும் என்று தொடங்கி இவ்வாறாகப் பசுக்கள் திருப்தி அடைகையில் கோபாலனான பகவானும் உகப்பான் என்கிறது அது.

பிரதிதினமும் அயலாருக்குச் சொந்தமான பசுமாடுகளுக்குக் கையளவு புல்லைத் தரவேண்டும் என்பது சாத்திர விதி. இதனால் கோஸம்ரக்ஷண புண்ணியமும் கிடைக்கும்; அதன் மூலமாகக் கோபாலனான பகவானையும் உகப்பித்ததாகும்; பரோபகாரமும் பண்ணியதாகும்; தானும் தனதும் என்ற அகந்தையும் குறையும். இப்படியொரு நல்ல வழக்கத்தை இன்றளவும் பெரியோர் அனுஷ்டித்து வருகின்றனர். ஏன் தன் பசுவுக்கே தந்தால் என்ன என்றால், தன் பசுவுக்கு முழு வயிற்றுக்கும் உணவு தருவது வேறு விஷயம். ஆனால் காலைக் கடமையாக விதித்த கோக்ராஸதாநம் என்பது அயற்பசுக்களுக்குத் தான்.

கடந்த நாலு அறிவுரைகளில் சொன்னவற்றைச் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆட்டம் காணா மலை போல் நில்**.**
- ஆண்டவன் கதைபேர் குணங்கள் சொல்.
- ஆரம்பத்தில் பலனைச்சொல்.
- ஆவுக்குக் கொடு தினமும் புல்.

## 185.ஆழ் பள்ளங்கள் நிரப்பி அடை.

தன் நிஷ்டையை அறிவதன் மூலம் வாழ்க்கையில் குறுக்கிடும் ஆழமான பள்ளங்களை அடைத்து விடவேண்டும்.

**स्वरूपोपायार्थेष्ववितथनिविष्टस्थिरमतिः**

**स्वनिष्ठाभिज्ञानात् सुभगमपवर्गादुपनतात्।**

**प्रथिम्ना यस्यादौ प्रभवति विनीतस्स्थगयितुम्**

**गभीरान् दुष्पूरान् गगनमहतश्छिद्रनिवहान्॥**

***---ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்.***

ஒவ்வொரு அதிகாரத்துக்கும் ஒரு ஆரம்பச்லோகம் இடுவது ரஹஸ்யத்ரயஸாரத்தில் வழக்கம். அதன் படி பதினாலாவதான ஸ்வநிஷ்டாபிஜ்ஞாந அதிகாரத்தின் தொடக்க ச்லோகம் இது.

> தன் ஸ்வரூபத்திலும் தான் அனுஷ்டித்த உபாயத்திலும் அதன் பலனான புருஷார்த்தத்திலும் தன் நிஷ்டையை அடையாளங்கள் மூலம் அறிவது முடியும். இவ்வாறு அறிவது உண்மையான ஊன்றிய உறுதியான தீர்மானத்தை உடையவனுக்குச் சாத்தியம். விரைவில் வரவிருக்கும் மோக்ஷத்தினும் இனியதாகும் இது. இதன் பெருமையினால் பரிக்ஷிக்கப்பட்டவன் ஆழ்ந்த நிரப்பற்கரிய வானிற்பெரிய நிறைய பள்ளங்களை அடைக்க வல்லவன்.

வாழ்க்கையில் குறுக்கிடும் பள்ளங்கள் அதிகம். அதுவும் ப்ரபந்நனுக்கு மிக அதிகம். அவற்றுள் விழாமல் தப்புவது கடினம். விழுந்தால் எழுந்திருப்பதும் கடினம். நிஷ்டை பெற்றவன் மட்டுமே தப்பமுடியும். ஏனென்றால் இந்தப் படுகுழிகள் ஆழமானவை; (கபீரம். விழுந்தால் அதோகதி தான்.) நிரப்ப முடியாதவை; (குழியே இல்லாமல் பண்ணுவது சாத்தியமன்று.) பெரியவை; ஆகாயம் போல் பரந்தவை; (குழியைத் தாண்டியும் போவது எளிதன்று.) கும்பலானவை; (ஒன்றோ இரண்டோ மட்டுமில்லை.) இந்தக்குழிகளில் விழாமல் வாழ்வதற்குப் பயிற்சி தேவை. ஸ்வநிஷ்டாபிஜ்ஞானம் உள்ளவர்கள் இந்தக் குழிதப்பும் பயிற்சி பெற்றவராவர். அத்தகையவர் குழிகளை அடைத்து விடுவதற்கும் ஆற்றல் பெற்றவர். தன்னையும் காத்துக்கொண்டு பிறரும் விழாமல் காப்பவர். நாம் இப்படிப் படுகுழிகளை அடைக்கவேண்டும். அடைவது வேறு; அடைப்பது வேறு. இரண்டையும் அடை என்ற விதிச்சொல்லால் சொல்லலாமாயினும், அடைக்கவேண்டும் என்பது இங்கு அறிவுரை. இதற்காக மதியானது உ-உ-உ என்று, அதாவது உண்மையாய் ஊன்றிய உறுதி கொண்டிருக்க வேண்டும். அல்லது உண்மையில் ஊன்றிய உறுதி கொள்ளல் வேண்டும். அல்லது உண்மை, உட்புகல் (ஊன்றல்), உறுதி, என்ற மூன்றும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய மதியுடன் குழிகளை அடைத்துவிடு.

## 186.ஆசையை வென்றிட அறிவு படை.

**அறிவைப் படையாகக் கொண்டு ஆசையுடன் போரிட்டு ஜெயிக்க முடியும்.**

> **(विवेकः) भीरु मा ते भूदिह मनोदौर्बल्यम्।**
>
> **किमस्माकमपि सन्निधौ रागद्वेषयो रवकाशः?**
>
> ***--- ஸங்கல்ப ஸூர்யோதயம்.***

விவேகன் தன் மனைவியான ஸுமதியிடம் சொல்கிறான்:

> பயந்தவளே! உனக்கு இங்கு மனவலிமை குறையவேண்டாம். நம் முன்னிலையில் கூட ராகனும் துவேஷனும் இடம் பெற முடியுமா என்ன?

அறிவு இருக்குமிடத்தில் ஆசையும் துவேஷமும்(பகைவெறியும்) இருக்குமோ? இரா. அவ்விரண்டும் அறியாமையால் ஏற்படுபவை. அறிவென்னும் படையால் அவ்விரண்டையும்

ஜயித்து விடலாம். விவேகத்துக்கு அருகில் கூட வராதவை ஆசையும் பகையும் என்னும் அவ்விரண்டும். ஆகையால் ஸுமதி அவை குறித்துப் பீதி அடைய வேண்டியதில்லை.

## 187.ஆபத்துயர்வும் அற்பரிடை.

எத்தகைய மக்களிடை வாழ்கிறாயோ அவர்களைக் காட்டிலும் உயர்ந்தாயானால் ஆபத்தை எதிர் கொள்ளத் தயாராகு.

**नीतिः परं त्वयि सती परपुष्ट धातुः**
**कण्ठे यथैष तव पञ्चममुच्चकार।**
**पुत्रीकृतोऽसि बलिपुष्टकुलैर्यथा त्वम्**
**दूरीकृतोऽसि किल तैस्तत एव काले॥**

***--- ஸுபாஷிதநீவி.***

நீதிமத்பத்ததியில் சொல்லும் நீதிகளில் இது முதிர்ந்த உலக அனுபவத்தால் கிடைக்கும் நீதியாகும்.

> ஏ குயிலே! படைத்தவன் உன்னிடம் ஒரு தந்திரம் செய்துவிட்டான். உன் கழுத்தில் பஞ்சமஸ்வரத்தை வைத்துவிட்டான். அதன் விளைவாக, உன்னைச் சொந்தப்பிள்ளை போல வளர்த்த காக்கைகள் உன் சிறப்பு தெரிந்தவுடனே விரட்டியடிக்கின்றன. அற்பமானவர்களின் இடையில் உயர்ந்தவன் வாழ்வது கஷ்டம்.

(தம் சொந்த அனுபவத்தையும் நினைத்து இப்படி எழுதுகிறாரோ ஸ்வாமி தேசிகன்?) அதற்கு உன்னை ஆயத்தப்படுத்திக்கொள். காக்கைகள் அற்பமான பறவைகள். குயில் இனிமையாகப் பாடும் வல்லமை பெற்ற பறவை. குயில் தன் சிறப்பை வெளிப்படுத்தாத வரையில் தம்மோடு காக்கைகள் குயிலையும் சேர்த்துக்கொண்டு போஷிக்கின்றன. குயில் இனிமையாகக் கூவத் தொடங்கியதும், விரட்டியடிக்கின்றன. மக்களும் இது போலத்தான். சுபாவத்தில் அற்ப மானவர்கள். நீ அவர்கள் நிலையிலிருந்து உயராதவரை உன்னை ஆதரிப்பார்கள். சாதாரண மக்களுக்கு இல்லாத ஏதேனும் ஒரு சிறப்பைப் பெற்றுவிட்டாயோ, அவ்வளவு தான். துரத்தியடிப்பார்கள். இந்த ஆபத்தையும் எதிர்நோக்குவதற்கு நீ உன்னைத் தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும். அற்பமக்கள் கூட உயர்வை மதிப்பார்கள் என்று எதிர்பார்த்து ஏமாறக்கூடாது. நெடுநாட்கள் நட்பு பாராட்டிய புல்லியர் நாம் உயரும்போதும் உதவுவார்கள் என்று எண்ணி ஏமாறலாகாது. அற்பர்களுக்குப் பிறர் உயர்வைச் சகிக்கவே முடியாது. அடுக்கடுக்காய் ஆபத்தை ஏற்படுத்துவார்கள். உயர்பவரை விரட்டுவதற்கு முழு மூச்சுடன் பாடுபடுவார்கள். இந்த மனித இயல்பைப் புரிந்துகொண்டு வாழ்வில் உயரவேண்டும்.

எத்தரிடையே **ஏற்றம் பெற்றால்** எச்சரிக்கையுடன் இரு.
சாதாரணமானவர் மத்தியில் சாதனை புரிந்தால் சாக்கிரதையாக இரு.
வீணர்கள் மத்தியில் வியப்புற வளர்ந்தால் விழிப்புடன் இரு.

## 188.ஆவளிநூல் படி இன்பமடை.

அதிகரணஸாராவளியை வாசித்து மகிழ்.

> सासौ सासूयतत्तत्कुमतिमतसमुन्मूलनी मूलनीति
> श्रेणीनिश्श्रेणिकल्पा त्रियुगपथरथारोहसूतं सुवीत ।
> सन्तस्सन्तापवर्गप्रशमनपटुना तत्वबोधेन सन्तम्
> सन्तोषं ब्रह्मसूत्राधिकरणचरणाध्यायसारावळिर्वः॥
>
> --- *அதிகரணஸாராவளி.*

அதிகரணஸாராவளியை வாசியுங்கள். அது தத்வஜ்ஞானத்தைத் தருவது மட்டுமின்றி அதன் மூலமாக மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்கிறார் கிரந்தத்தின் முடிவில்.

> நல்லோர்களே! (அதிகரணஸாராவளியில் பரிசயமும் பரிச்ரமமும் பண்ணுங்கள்.) இது வேரறுக்கும் ஆயுதம். அஸூயை மிக்கவரின் தப்புக்கொள்கைகளை வேரறுக்கும். இது ஏணி. அடிப்படை நியாயங்களின் வரிசைக்கு நம்மை ஏற்றுவிக்கும். இது வழித்துணை. பகவானை அடைய வானேறும் தேரை ஓட்டும் பாகனைப் படைக்கும். இது துயர்தீர்க்கவல்ல தத்வஜ்ஞானத்தை விளைவிக்கும். இது நிலையான மகிழ்ச்சியை அறிவு மூலம் உண்டுபண்ணும். இது ஸாரத்தின் வரிசை. பிரம்மஸூத்ரங்களின் அதிகரணங்கள், பாதங்கள், அத்தியாயங்கள், இவற்றின் ஸாரத்தொகுப்பு. இதைப் படித்து இன்பம் அடையுங்கள்.

இதைக்கொண்டு குமதிமதங்களை வீழ்த்துங்கள். இதை ஏணியாகக்கொண்டு ஏறுங்கள். இது தரும் ஸாரதியின் துணையால் இறைவனை அடையுங்கள். இது தரும் அறிவால் தாபங்களைத் தள்ளுங்கள். இது தரும் மகிழ்ச்சியை ஏற்று இன்புறுங்கள். இதன் ஸாரத்தைப் பருகுங்கள். பின்னர் வரும் பயன்கள் இருக்கட்டும். இப்பொழுதே கிடைக்கும் இன்பத்தை நுகருங்கள். (படி என்பதற்கு இரண்டு அர்த்தங்கள். ஆவளிநூலில் சொன்னபடி இன்பம் அடை; ஆவளி நூலைப் படித்து இன்பமடை.) ஸத் என்ற சொல்லிலும் சிலேடை உண்டு. ஸந்த: என்ற விளியில் நல்லவர்கள் என்றும் ஸந்தம் என்கையில் நிலையான என்றும் அர்த்தங்கள். ச்லேஷம், யமகம், ரூபகம், உபமா, முதலிய பல அணிகளை இந்த ச்லோகத்தில் சுவைக்கலாம்.

சென்ற நாலு அறிவுரைகளில் சொன்னவற்றைச் சேர்த்துப் பார்ப்போம்:

- ஆழ் பள்ளங்கள் நிரப்பி அடை.
- ஆசையை வென்றிட அறிவு படை.
- ஆபத்துயர்வும் அற்பரிடை.
- ஆவளிநூல் படி இன்பமடை.

## 189. ஆறுயர்வுள்ள ஜபம் பண்ணு.

ஜபம் பண்ணுவது அவசியம். அது மற்ற வேள்விகளை விட ஆறு வகைகளில் சிறந்தது.

यज्ञेषु जपयज्ञस्य प्राशस्त्यं अन्यत्र सिद्धम्।

विधियज्ञाज्जपयज्ञो विशिष्टो दशभिर्गुणैः इति। किं च ...

अहिंसात्मक यज्ञानर्हाणां हिंसात्मक यज्ञानुज्ञानम्।

...अहिंसात्मकास्तु यज्ञा विशिष्टाधिकारिसापेक्षा भगवतः अतिप्रीणनत्वात्

अपवर्गप्रत्यासन्नाः।

...जपयज्ञे तु तत्प्रसङ्गाभावात् अव्याक्षेपेण अर्थप्रतीत्या

सबीजयोगद्वारा सहसा समाधौ निवेशनाच्च यज्ञान्तरेभ्यो जपयज्ञः प्रशस्ततमः।

सर्वाश्रम साधारण्यात्। ...जप्येनापि तु संसिद्ध्येत् ... विधुरादेरपि सिद्धिहेतुत्वाच्च।

***---தாத்பர்யசந்த்ரிகா.***

கீதையின் பத்தாம் அத்தியாயத்தில் "யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோஸ்மி" என்கிறார் கண்ணன். அவ்விடத்திய தாத்பர்ய சந்த்ரிகை உரை இது.

> யாகங்களுக்குள் ஜபயஜ்ஞத்தின் மேன்மை வேறிடங்களிலும் தீர்மானிக்கப்பட்டது. விதியஜ்ஞத்தை விட ஜபயஜ்ஞம் பத்து மடங்கு உயர்ந்தது என்றும் உள்ளது. மேலும், உயிர்வதையே இல்லாத யாகமாகவும் இது ஆகிறது. (யாகத்தில் உயிர்வதம் தோஷமாகாது என்பது வேறு விஷயம்.) பகவானை மி கவும் உகப்பிப்பது. அதனாலேயே மோக்ஷத்துக்கு நெருக்கமான யஜ்ஞம் இந்த ஜபயஜ்ஞம். மந்த்ரத்தின் அர்த்தம் எளிதில் விளங்குவதால் பீஜாக்ஷரத்தோடு சேர்வது வழியாகத் தியானசமாதி நிலையில் நம்மைச் செலுத்துவதாலும், மற்ற யாகங்களைக் காட்டிலும் ஜபயஜ்ஞம் சிறந்ததாம். எல்லா ஆச்ரமங்களுக்கும் பொதுவாக இருப்பதாலும், மனைவியிழந்த விதுரர்கட்கும் ஜபத்தால் ஸித்தி ஏற்படும் என விசேஷித்துச் சொன்னதாலும், ஜபம் உயர்ந்ததாம்.

அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களுக்கும் மந்த்ரஜபத்துக்கும் முக்கியமாக ஆறு வாசிகள் உள்ளன. இரண்டுமே நற்பணி. இரண்டுமே பகவத்ப்ரீதி தரும். ஆனாலும் ஆறு வித்தியாசங்கள் வருமாறு. சாஸ்திரங்களில் ஜபயஜ்ஞத்தை வேதவிஹித யாகங்களைக்காட்டிலும் உயர்ந்ததாக நிஷ்கர்ஷித்திருப்பது முதல் வாசி. விதியாகத்தைக்காட்டிலும் ஜபயாகம் பத்து மடங்கு சிறந்ததாம் என்ற ப்ரமாண வசனமும்

இருக்கிறது. ஸோமயாகத்தில் உயிர்வதம் உண்டு; ஜபயாகத்தில் அது கிடையாது என்பது இரண்டாம் வாசி. பகவான் திருவுள்ளம் ஜபத்தால் அதிகம் உகக்கும் என்பது மூன்றாவது வாசி. பீஜாக்ஷரயோகத்தால் தியான ஸமாதி நிலை ஜபத்தில் எளிதாய்க் கிடைப்பதால் முக்திநிலைக்கு அது நெருக்கமாயிருப்பது நாலாவது வாசி. ஸோமயாகம் முதலியவற்றைக் கிருஹஸ்தர் மட்டுமே அனுஷ்டிக்கலாம்; ஜபயஜ்ஞத்தை நாலு ஆஶ்ரமத்தவரும் அனுஷ்டிக்கலாம் என்பது ஐந்தாவது வாசி. ஜபத்தால் ஸித்தி கிடைக்கும் என்றும், அது நிராஶ்ரமிகளான விதுரர்களுக்குக் கூட பலனளிக்கும் என்றும் ப்ரமாணம் கூறுவது ஆறாவது வாசி. இப்படி ஆறு உயர்வுகள் ஜபத்துக்கு இருப்பதால் பிரதிதினமும் சிறிதுநேரமாவது நாம் மந்த்ரஜபம் பண்ணவேண்டும். அதற்கான நியமநிஷ்டைகளுடன் பண்ணினால் ஜபம் என்பது ஒரு வேள்வியாகும். வேள்விகளுக்குள் உத்தமமானதாகவும், பகவான் தன்னையே ஜபயஜ்ஞமாகச் சொல்லிக்கொள்ளும் அளவுக்குப் பெருமை பெற்றதாகவும் இருப்பது ஜபயஜ்ஞம்.

## 190.ஆசிரியர் போல் நோய் எண்ணு.

வியாதி வரும்போது நொந்து போகாமல், அதையும் ஒரு ஆசிரியனாக எண்ணிக்கொள்.

**ஒரு வ்யாதிவிசேஷத்தை உண்டோ என்று ராஜா கேட்க, அவரும் ஓர் உபாத்தியாயர் உண்டு என்று பட்டர் அருளிச்செய்தார். ஆயுஸ்ஸு வளர்க்கவொண்ணாதபடி நியதாயுஸ்ஸானவனுக்கு உள்ளத்தில் உத்வேகம் பிறக்கைக்காகவும், அநியதாயுஸ்ஸுக்களுக்கு ஆயுஷ்காமீயங்களையிட்டு வளர்க்க நினையாமைக்குமாக துக்காதிகள் இவனுக்கு உபாத்தியாயர்கள்.**

***--- ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவரக்ஷாதிகாரம்.***

பகவான் துக்கத்தைத் தருவதும் ப்ரபந்நனுக்கு நன்மையேயாகும் என்பதை இவ்வாறு விளக்குகிறார்.

> பராசர பட்டரின் வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி. அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அரசன் வந்தான். ஒரு வியாதியின் பெயரைச் சொல்லி இந்த நோய் உண்டோ என்று பட்டரைக் கேட்டான். "அவரும் ஓர் உபாத்தியாயர் உண்டு" என்று பட்டர் விடையிறுத்தார். நோயை ஒரு உபாத்தியாயராக அவர் சொன்னார். பிணி, வலி, துயர்களை ஆசிரியராகச் சொல்வானேன் என்னில் அவை மனிதனின் மனநிலையை மாற்றுகின்றன. உள்ளத்தில் உத்வேகம் (பொங்கியெழல்) உண்டாகும்படி செய்கின்றன. மேலும் நீண்ட ஆயுளை விழையாதபடி பண்ணுகின்றன.

உபாத்தியாயர் பண்ணுபவை நாலு காரியங்கள். சிக்ஷித்தல், தண்டித்தல், துன்புறுத்தல், எல்லாம் நன்மைக்காகப் பண்ணுவார் அவர். மனத்தைப் பண்படுத்தி முதிரச்செய்வார். உள்ளத்தில் உத்வேகம் பிறக்கப் பண்ணுவார். ஸம்ஸாரத்தை வெறுக்கச் செய்வார். இந்த நாலு காரியங்களையும் வியாதியும் பண்ணுகிறது. உடலைப் புண்படுத்தினாலும் உள்ளத்தைப் பண்படுத்துகிறது. (உடம்பில் வலி இருந்தாலும், மனதில் பொறுமை, முதிர்ச்சி, தன்னலமி ன்மை, முதலிய நற்பண்புகளைத் தோற்றுவிக்கிறது.) உத்வேகம் உண்டாக்குகிறது.

(ஆதங்கத்தால் பொங்கியெழச் செய்கிறது.) வைராக்கியம் விளைவிக்கிறது. (போதும் இந்த உலகவாழ்க்கை என்று வெறுப்படையச் செய்கிறது.) இந்த நாலையும் செய்வதால் பட்டர் வியாதியை ஒரு உபாத்தியாயராகச் சொன்னது பொருத்தம். நமக்கு உடலுபாதை நேரிட்டால் நாமும் அதனால் வரும் நன்மைகளை எண்ணி மனதைத் தேற்றிக் கொள்ளவேண்டும். நோயால் நொந்துகொள்ள வேண்டாம்.

## 191.ஆலோசித்தே செயல் பண்ணு.

தீர யோசித்துப்பார்த்த பின் காரியங்களில் ஈடுபடு. விளைவுகளை எண்ணிப்பாராமல் செயல்களைத் தொடங்காதே.

**कश्चात्र नियोज्यः? ... नाप्यहङ्कारादिकं, तत्प्रतिफलितचैतन्यादिकं वा,**

**तेषामपि विमृश्यकारिणां स्वोच्छेदकरणे नियोक्तुमशक्यत्वात्।**

**अविमृश्यकरणे तु न शास्त्रयोग्यता। न च निर्विशेषानुभूतिस्थितये**

**निरूपको बालो वा कश्चित् स्वोच्छेदमनुमन्यते।**

***--- சததூஷணி. நாற்பத்தாறாவது வாதம்***

நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகபங்க வாதம் என்பது. இதில் இடையே சொல்லும் அறிவுரை இது.

> யார் ஏவப்படுபவன்? கடவுளன்று; அவித்யையன்று. அஹங்காரமோ, அதில் பிரதிபலிக்கிற சைதன்யமோ, இது முதலானதுமன்று. அவர்கள் யோசித்துச் செயல்படுபராயின், உன்னை நீயே ஒழித்துக்கட்டு என்று ஏவத்தக்கவர் அல்லர். யோசிக்காமல் செயல் படுபவரானால் சாஸ்திரங்களுக்கான தகுதி அற்றவர். நிர்விசேஷ அநுபூதி மட்டும் இருப்பதற்காக தன்னையே மாய்த்துக்கொள்ள ஆராயும் திறன் பெற்றவன், சிறுவனாயினும், ஏற்கமாட்டான்.

இங்கு பண்ணும் அத்வைதகண்டனம் ஒருபுறம் இருக்கட்டும். சந்தடி சாக்கில் சொன்ன அறிவுரையே நமக்கு முக்கியம். விளைவுகளை விமர்சித்த பின் தான் காரியங்களைப் பண்ணவேண்டும். இப்படிப் பண்ணாதவனுக்குச் சாஸ்திர யோக்கியதையே கிடையாது. எண்ணித் துணிக கருமம் என்பது நீதி. இந்த நீதிக்கு உட்படாதவர்களும், யோசித்துச் சாஸ்திரங்களில் சொன்னபடி கேட்டு, அதன் படி தம்மைத்தாமே மாய்த்துக் கொள்வதாக அத்வைதி சொல்வது பேத்தல். அது போகட்டும். இந்த காரியம் பண்ணினால் இந்த விளைவு ஏற்படும் என்பதை முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்காதவனுக்கு யோக்கியதையே கிடையாது சாஸ்திரக் கல்வியில்.

## 192.ஆசார்யகுலத் துதி பண்ணு.

ஆசாரியனை மட்டுமின்றி, ஆசார்யபரம்பரையையும் துதிக்க வேண்டும்.

शिष्यः सविनयभयं स्वगतं “अतर्कितोपनतं आत्मश्लाघनदोषं अपमार्ष्टुं अभिष्टवानि देशिकान् तद्दर्शनं च” (प्रकाशं)
हृद्या हृत्पद्म-सिंहासन-रसिक-हयग्रीव-हेषोर्मि-घोष-
क्षिप्त-प्रत्यर्थि- दृप्तिः जयति बहुगुणा पङ्क्तिरस्मद्गुरूणाम्।

--- ***ஸங்கல்ப ஸூர்யோதயம்.***

இரண்டாம் அங்கத்தில் குருவுக்கும் சிஷ்யனுக்கும் ராஜாவுக்கும் இடையே நடக்கும் உரையாடலில் இந்த நீதியைப் புகுத்தியிருக்கிறார்.

> எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்டது இந்தத் தற்புகழ்ச்சித் தோஷம். இதை நீக்குவதற்காக ஆசாரியர்களையும் அவர்களது கொள்கையையும் துதிப்பேனாக. இந்தக் குருபரம்பரையானது மனத்துக்கினியது. இதயத் தாமரை என்னும் சிங்காதனத்தில் இனிதே வீற்றிருக்கும் ஹயக்ரீவப்பெருமானின் கனைப்பலையொலியால் தள்ளப்பட்டது பிரதிவாதிகளின் கொழுப்பு. பலப்பல சிறப்புகளுடன் ஜயிக்கிறது நம் குருபரம்பரை.

நாம் நமது குருபரம்பரையைப் போற்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் பல பலன்கள் உண்டு. முதலில் நம் தோஷம் நீங்கும். முக்கியமாக, தற்புகழ்ச்சி என்னும் வாசிகதோஷம் குருபரம்பராஸ்தவம் என்னும் வாசிககைங்கரியத்தால் வெளியேறும். இரண்டாவதாக, நம் குருபரம்பரை மனதுக்கு உகந்ததாய் இருக்கிறது. மூன்றாவதாக, நமது வாதங்களால் பிரதிவாதிகள் அடிபட்டு விழுகிறார்களே, இதற்குக் காரணம் என்னவென்றால், எங்கள் குருபரம்பரைச் சிறப்பு தான். ஹயக்ரீவர் அல்லவா அமர்ந்திருக்கிறார் எங்கள் குருக்களின் இதயக் கமலங்களில்? அவரது கனைப்பொலி அல்லவா (எங்கள் வாதகோஷம் என்னும் உருவில் வந்து) எதிரிகளை மாய்க்கிறது? இப்படி எதிரிகள் மடிந்த பின்னர் குருபரம்பரை ஜயிக்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எங்கள் குருபரம்பரைக்கு நிறைய மேன்மைகள் உள்ளன. அதனால் அது வெற்றிவாகை சூடுகிறது. இதைத் துதிப்பது தோஷ பரிஹாரமாகவும், மனமகிழ்ச்சி தருவதாகவும், பகவத்ப்ரீணனமாகவும், எதிரிகளின் கொழுப்படக்கி நமக்கு ஜயம் தருவதாகவும் ஆவதால் நாம் ஆசார்யபரம்பரையை அவ்வப்போது துதிப்போமாக.

இதற்குமுன் சொன்ன நான்கு அறிவுரைகளைச் சேர்த்துக் காண்போம்.

- ஆறுயர்வுள்ள ஜபம் பண்ணு.
- ஆசிரியர் போல் நோய் எண்ணு.
- ஆலோசித்தே செயல் பண்ணு.
- ஆசார்யகுலத் துதி பண்ணு.

## 193.ஆண்டவன் உட்புகில் ஆறுகள் ஏன்?

பகவானை அனுபவிப்பது தீர்த்தயாத்திரையை விட முக்கியமானது.

गङ्गा-सेतु -सरस्वती-रविसुता-गोदावरी-नर्मदा
तुङ्गा-शोण-मरुद्वृधा-प्रभृतिभिस्तीर्थैरलं प्रार्थितैः ।
नित्यासन्नमशेषपापशमनं निश्रेयसप्रापकम्
ग्रीष्मे शीतमिव ह्रदं बहुगुणं ब्रह्म प्रविष्टो मुनिः ॥

***---ஸங்கல்பஸூர்யோதயம்.***

ஆறாம் அங்கத்து ச்லோகங்களில் இது கடைசியானதாலும் இதில் சொன்ன அறிவுரையை வேறொரு கிரந்தத்திலும் ஸ்வாமி தேசிகன் அருளியிருப்பதாலும் இது முக்கிய அறிவுரையாகிறது.

> கங்கை, ஸேது, ஸரஸ்வதி, யமுனை, கோதாவரி, நர்மதை, துங்கை, ஶோணம், காவேரி, முதலிய புண்ணியநதிகளைப் பிரார்த்திக்க வேண்டிய தேவையில்லை. எப்பொழுதும் அருகில் இருப்பவரும், ஸமஸ்தபாபங்களையும் போக்குபவரும், நற்கதி அடைவிப்பவரும், கோடையில் குளிர்மடு போல் இருப்பவரும், பல நற்பண்புகள் கொண்டவருமான பரம்பொருளைப் பிரவேசித்து விட்டார் முனிவர்.

பகவதனுபவம், புண்ணியநதிஸ்நானம், என்ற இரண்டுள், முதலாவதே முக்கியம். கங்கை முதலிய நதிகள் தூரத்தில் இருப்பவை; பகவானோ அருகிலேயே இருப்பவர். கங்கை முதலியவை சில ஸமயங்களில் இல்லாமல் போகலாம்; பகவான் எப்போதும் இருப்பவர். கங்கை முதலியவை பெரும்பாலான பாவங்களைப் போக்குபவை; இவரோ எல்லாப் பாவங்களையும் போக்குபவர். கங்கை முதலியவை மேன்மை பயப்பவை; இவரோ மோக்ஷத்தையே தருபவர். கங்கை முதலியவை கோடையில் குளிர்ந்து இதமானவை; இவரும் கோடையில் மடு போல் குளிர்ந்தவர். இப்படி நிறைய குணங்கள் கொண்ட பரம்பொருளுள் நுழைந்த முனிவனுக்குப் புண்ணிய நதிகளை யாசிக்கவேண்டிய தேவை இல்லை. இதற்கு மூன்று விதமாகத் தாத்பர்யம் சொல்லலாம். தீர்த்தயாத்திரையால் வருவதை விட உயர்ந்த நிலையை அடைந்தவன் பிரம்மஞானி. அவனுக்குக் கங்கையும் வேண்டாம்; கோதாவரியும் வேண்டாம். அரைகுறைகளுக்குத்தான் அவை தேவை. அருகிலிருக்கும் பகவான் தூரத்திலிருக்கும் புண்ணியநதிகளை விட எவ்வகையிலும் குறைந்தவர் அன்று. பகவானைப் புக முடியாதவர்கள் மட்டும் தீர்த்தயாத்திரை போகலாம். எல்லாரும் போகவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. இது ஒரு தாத்பரியம். எதற்காகத் தீர்த்தயாத்திரை போகவேண்டும் என்றால், பிரம்மஜ்ஞானம் ஏற்படுவதற்காக. பலன் கிடைத்த பின் சாதனங்கள் எதற்கு? இது இன்னொரு தாத்பரியம். போகாதவரைக் குறை சொல்லவேண்டாம். ஒரே கிராமத்தில் நியதவாஸம் பண்ணும் பிரம்மவித்துகள் அனேக நதிகளில் நீராடும் பாக்கியசாலிகளை விட உயர்ந்தவராம். இவற்றைத் தவிர இன்னொரு தாத்பரியமும் உண்டு. புண்ணிய நதிகளில் நீராடும்போதும் பகவத் தியானமே பண்ணுங்கள். நதிகளிடம் ‘‘என் பாவத்தை அழி’’ என்றோ, ‘‘எனக்கு மேன்மை

கொடு'' என்றோ, இம்மாதிரியாகவெல்லாம் பிரார்த்தனை பண்ண வேண்டாம். பகவானை மனத்தில் இருத்தி மகிழுங்கள். நீங்கள் கேட்க விழைந்ததெல்லாம் தானே கிடைக்கும். புண்யக்ஷேத்ரங்களில் பகவத்த்யாநம் மிக நன்று. எந்த ஸத்காரியத்திலும், சொல், செயல், எண்ணம் என்ற மூன்றுக்குள், எண்ணம் முக்கியம்; சொல் முக்கியமன்று. தியானம் எதுவும் பண்ணாமல், யாத்திரைகளால் மட்டும் பயன் கிடைக்காது. மனதை வேறெதிலேயோ செலுத்திக்கொண்டு, உடலாலும் வாக்காலும் மட்டும் புண்ணியம் பண்ணுவது வீண். இந்தத் தாத்பரியங்கள் எல்லாவற்றுக்கும் ஒரே ஸாரம்: பகவானைத் தியானியுங்கள். அதில் ஆனந்தம் அடையுங்கள். மனது ஈடுபடாமல் பண்ணும் செயல்களில் நற்பலன் உண்டாகாது.

## 194.ஆறோடியபின் அணையிடலேன்?

காரியம் பண்ணக் காலம் தாழ்த்தாதே.

**अतिक्रामन् कालः तपनरथवेगेन महता**
**न रोद्धुं शक्येत प्रतिवहनवातूलरहितः।**
**गतस्रोतोरोधे न खलु यतितव्यं कृतधिया**
**तदारम्भश्श्रेयान् उपरितनभीतिप्रतिभटः॥**

--- ***ஸங்கல்பஸூர்யோதயம்.***

நாலாம் அங்கத்தின் இறுதிக்கருகில் உள்ள ச்லோகம் இது. லோபன் சொல்வதாக அமைந்தது. ஆயினும் நமக்கு நல்ல அறிவுரை இதில் உள்ளது.

> காலம் விரைவாகக் கடக்கிறது. சூரியனின் தேர் அதிக வேகம் கொண்டது. காலத்தின் ஓட்டத்துக்கு முட்டுக்கட்டை போடும் எதிர்க்காற்று இல்லவே இல்லை. ஆற்றுவெள்ளம் புரண்டுபோன பிறகு எந்த அறிவாளியும் அணைகட்ட முயலக்கூடாது. ஆகையால் பின்னர் பயம் வராதபடி இப்போது செயல்படுவது நல்லது.

செய்யும் பணியைச் சரியான சமயத்தில் செய்யவேண்டும். காலம் கடந்து காரியம் செய்தால் பயனின்றிப் போகலாம். ஆற்று வெள்ளம் ஓடிவருவதற்கு முன் அணைகட்டினால் அதில் நீரைத் தேக்கலாம்; பின்னர் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ஆற்று வெள்ளம் முழுதும் ஓடியபிறகு அணைகட்டுவதில் அர்த்தம் இல்லை. அறிவாளி அவ்வாறு பண்ணவே கூடாது. எப்போதுமே எதிர்கால நன்மையை யோசிக்க வேண்டும். என்ன பண்ணினால் பயத்தை அடக்கி நிம்மதியாக வாழலாமோ, அதை இப்பொழுதே பண்ணவேண்டும். ஒத்திப்போட வேண்டாம்.

## 195.ஆயிரம் கழுவல் காக்கைக்கேன்?

சில பேர் என்ன பண்ணினாலும் திருந்தவே மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைத் திருத்த முயல்வது வீண்.

एवमपि ये मुह्यन्ति ते मुह्यन्त्येव ।
न खलु सहस्रैरपि सलिलकुम्भैर्बलिभुजः प्रक्षाळ्यमानाः वलक्षतां प्रतिपद्यन्ते ।

*--- ஸங்கல்ப ஸூர்யோதயம்.*

விவேகன் தன் மனைவி ஸுமதியிடம் பேசுகிறான். மோஹம் எத்தகையது, அதை நீக்குவது எப்படி என்பதை விளக்கிய பிறகு அவன் ராணிக்குக் கூறும் அறிவுரை இது.

> இப்படி இருந்தும் கூட எவர்கள் மயங்குகிறார்களோ அவர்கள் மயங்குபவர்களே. ஆயிரம் குடங்கள் தண்ணீர் கொட்டிக் கழுவினாலும் காக்கைகள் வெண்மை அடைவதில்லை அல்லவா?

ஊர் உலகத்தையெல்லாம் சீர்திருத்தி நல்வழிப்படுத்துவது முடியாத காரியம். ஓரளவுக்கு மட்டுமே வெற்றி காணலாம். சில பேரைத் திருத்தவே முடியாது. எவ்வளவு தான் பிரயாசைப்பட்டாலும் அவர்கள் மோகத்திலிருந்து மீளவே மாட்டார்கள். காகங்கள் கறுப்பானவை. ஆயிரக்கணக்கில் குடங்களில் ஜலம் கொண்டுவந்து அலம்பித் தேய்த்தாலும் வெளுப்பாக்க முடியாது. நாம் நமது நேரத்தையும் சக்தியையும் வீணாக்கினது தான் மிச்சம். எதற்கு இம்மாதிரியான வீண் ப்ரயத்தினம்? எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் நல்ல வழிக்கு வராதவனோடு மாரடிப்பானேன்? இந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டு வேறு ஏதேனும் பயனுள்ள பணியைச் செய்யலாம். திருத்தவே முடியாதவர்களைத் திருத்தும் பணியில் திண்டாடவேண்டாம். அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன? காக்கா கருப்பாயே இருந்துவிட்டுப் போகட்டுமே? அதையும் வெளுப்பாக்க வேண்டுமென்று அல்லல் படுவானேன்?

## 196.ஆடல் பாடல் பட்டியில் ஏன்?

ரஸிகர்கள் இல்லாத இடத்தில் கலைத்திறனைக் காட்டக்கூடாது.

नादमङ्कणताळानां नागरीनटनोचितम् ।
कृषिक्षमेषु ग्रामेषु न मूर्च्छयति गीतिवित् ॥

*--- ஸுபாஷிதநீவி.*

இந்த நூலிலுள்ள நூற்றுக்கணக்கான சிறிய அனுஷ்டுப் ச்லோகங்களில் இதுவே கடைசியானது. பரீக்ஷித பத்ததியில் உள்ளது. நாம் நமது கலைத் திறமையை வெளிப்படுத்துமிடத்தையும் முதலில் பரீக்ஷித்து முடிவு பண்ணவேண்டும் என்கிறார்.

> தாளக்கட்டுக்குத் தகுந்த உயர்ந்த இசையை, பட்டணத்துப் பெண்கள் நடனமாடுவதற்கேற்ற இசையை, விவசாயிகள் மட்டும் வாழும் கிராமங்களிலே நல்ல பாவலன் குரலெடுத்துப் பாடமாட்டான்.

இடமறிதல் அவசியம். உயர்ந்த பொருளும் தகாத இடத்தில் வைப்பதால் மங்கிப்போகும். ஸங்கீதம் என்ற உயரிய கலையைத் தாளத்துடனும் நடனத்துடனும் ரஸிப்பவர்கள் மலிந்துள்ள நகரங்கள் பல இருக்கும். ஆனால் சங்கீதவாசனையே அறியாத குடியானவர்கள் வாழும் பட்டிதொட்டியில் இசைப்புலமையை வெளிப்படுத்தினால் அதை மதிப்பார் உண்டோ? ஏமாற்றம் தான் மிஞ்சும். ஸங்கீதம் என்றது உபலக்ஷணமே. எந்தக் கலையுமே சில இடங்களில் தான் பரிமளிக்கும். மற்ற இடங்களில் அவற்றை அம்பலமாக்குவது கலைக்கே இழுக்காகும். கண்ட இடங்களிலும் தம் திறமையைக் காட்ட மாட்டார்கள் அறிஞர்கள். மதிக்கத் தெரிந்தவர் முன்னிலையில் மட்டுமே மகத்தான கலைத் திறமைகளைப் புலப்படுத்துங்கள். அறியாதார் அவைகளிலே அரும் கலையை அரங்கேற்றேல். (அரங்கேற்றினால் அவமானமும் அவதியும் அடையநேரும்.) தெரியாதார் தெருக்களிலே தெள்ளறிவைத் தெரிவிக்கேல். (தெரிவித்தால் தலைக்குனிவும் தரக்குறைவும் தோன்றும்.) உணராதார் ஊர்களிலே உயர்கலையை உண்டாக்கேல். (உண்டாக்கினால் உபத்திரவமும் உள்ளவெதும்பலும் உண்டாகும்.) புரியாதார் புரங்களிலே புதுக்கலையைப் புகட்டாதே. (புகட்டினால் புழுக்கமும் புண்படலும் பிறக்கும்.)

கடந்த நாலு உபதேசங்களிலும் அனாவசியமெனச் சொல்லி ஏன் ஏன் என்று கேட்டவை எவையெனில்:

- ஆண்டவன் உட்புகில் ஆறுகள் ஏன்?
- ஆறோடியபின் அணையிடலேன்?
- ஆயிரம் கழுவல் காக்கைக்கேன்?
- ஆடல் பாடல் பட்டியில் ஏன்?

## 197.ஆர்ஜவம் என்பது பேற்று வழி.

நேர்மையாக நட. **அது மோட்சத்துக்கு வழி வகுக்கும்.**

**सर्वं जिह्मं मृत्युपदं आर्जवं ब्रह्मणः पदम् என்கிறபடியே**

***———ரஹஸ்யத்ரயஸாரம் .***

அபராத பரிஹார அதிகாரத்தில் நமக்குச் சொல்லும் அறிவுரையின் ஸாரம் இது. பாரதத்தின் சாந்திபர்வத்திலிருந்து மேற்கோள்.

> கோணலெல்லாம் நாசத்துக்கு வழி. நேர்மை கடவுளை அடைய வழி. சரணாகதி பண்ணினபிறகு மோக்ஷம் நிச்சயமாகி விட்டதால் நம் நடத்தை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சிலர் சொல்வதைக் கண்டிக்கிறார்.

வக்கிரத்தன்மை எல்லாமே (சாத்திர விதிகளுக்குக் கீழ்ப்படியாமை, அபராதங்களுக்கு அஞ்சாமை முதலியன) விநாசத்துக்கு வழியாகும். நேர்மை மட்டுமே கடவுளை அடையும் வழியாகும். என்கிறது மஹாபாரதம். அதன்படி சரணாகதிக்குப் பிறகும் கூட நேர்மை

அவசியம். அபராதங்களுக்கு நடுங்கவேண்டும் என்கிறார். எப்போதுமே நேர்மையைக் கடைப்பிடித்தாகவேண்டும்.

## 198.ஆறு கொடுஞ்செயலவரை அழி.

**நமக்குப் பெருந்தீங்கு விளைவித்தவர்களில் ஆறு வகையினரைக் கொல்ல நமக்கு உரிமை உண்டு.**

`` षट्सु अनभिचरत् पतेत्" इति महर्षिवाक्यं अनुवर्तमानः

***--- ஸங்கல்பஸூர்யோதயம்.***

இது டம்பன் சொல்லும் வாக்கியமானாலும் நாம் ஏற்கவேண்டிய உபதேசமாகும்.

> ஆறு கொடியவர்களை அழிக்காமல் விடுவதும் நாசத்துக்கு வழியாம் என்று மஹரிஷியின் கூற்றை அனுஸரித்தவனாய்

இங்கு சொன்ன ஆறு பேர் யார் என்றால், தீயிட்டுக் கொளுத்தியவன், விஷம் வைத்துக் கொல்ல முயன்றவன், ஆயுதபாணியாய் கொல்லவருபவன், ஆஸ்தியையெல்லாம் அபஹரித்து நடுத்தெருவில் நிற்கவைத்தவன், நிலத்தைப் பிடுங்கிக்கொண்டவன், மனைவியைப் பலாத்கரித்து இழுத்துச் சென்றவன், என்ற ஆறு பேர். இந்த அறுவருக்கும் ஆததாயிகள் என்ற வழக்கு மஹாபாரதம் முதலியவற்றில் காணலாம். இவர்களைக் கொல்வதால் பாவம் கிடையாது. கொல்லாமல் விட்டால் ஆபத்து.

## 199.ஆர் தான் தடுப்பார் அமுத மொழி

அமுதமொழியான கவிதைக்குக் குறுக்கீடு பண்ணாதே.
பிறரது திறமை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடாதே.

मनु-व्यास-प्राचेतस- परिषदर्हा क्वचिदियम्
सुधासिक्ता सूक्तिस्स्वयमुदयमन्विच्छति जने।
निरुन्ध्युः के विन्ध्याचलविकटसन्ध्यानटजटा
परिभ्रान्ता पङ्गोरुपरि यदि गङ्गा निपतति॥

***--- ஸுபாஷித நீவி.***

நல்ல கவியைப் பற்றிய பத்ததியில் கடைசி ச்லோகம் இது.

மனு, வியாசர், வால்மீகி, முதலிய மஹான்களை அவையினராகக் கொள்ளுவதற்கேற்றபடி அமுதத்தில் தோய்ந்த மொழி ஒருவனிடத்துத் தானே தேடி வருமாகில், சிவனின் சடையில் சுழன்று முடவனின் மீது பாய்ந்தோடி வரும் கங்கையைப் போல் யார் தடுப்பர்?

கங்கை போல் பிரவகிக்கும் அமுதமொழியை யார் தடை செய்ய முற்படுவார்? இதற்கு மூன்றுவிதத் தாத்பர்யங்கள் சொல்லலாகும். அசூயைப்பட்டு முட்டுக்கட்டை போடுவதெல்லாம் ஓரளவு வரை தான். அதீதமான வளர்ச்சி ஏற்பட்ட பின் தடுக்க வந்தவரெல்லாம் வாலைச் சுருட்டிக் கொள்வர். திறமையைக் கண்டு வியந்து திணறிப்போவர். ஆகையால் அசூயாளுக்களின் தடைகளுக்குத் தாண்டிவரும்படி வளர்ச்சி அடை என்பது முதல் உட்கருத்து. அதிருஷ்டவசத்தால் அலைபுரண்டுவரும் அமுதமொழியை ஆருமே தடுப்பதில்லை. தானே வந்த தகுதியைத் தடுப்பார் உண்டோ? வீட்டுக்கு வந்த லக்ஷ்மியை வேண்டாம் என்பார் உண்டோ? அது போல கங்காப்ரவாஹம் போன்ற கவிதைத்திறன் முயற்சியின்றி தானே தேடி வந்தால் அதைத் தவிர்ப்பார் உண்டோ? இது இரண்டாம் உட்கருத்து. தேடிவந்த திறமையைத் தள்ளாதே என்பது நீதி. தடுக்க முடியுமா என்ன? தானே வந்த ஆற்றலை, தனிச்சிறப்புள்ள திறமையை, யார் தடுக்க வல்லார்? கொடுக்க வந்த தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுத்தால் குறுக்கே தடுக்க யாரால் முடியும்? இது மூன்றாம் உட்கருத்து. பிறர் திறமைக்குத் தடைக்கல் ஆகாதே என்பது அறிவுரை. தடுக்க முயன்றால் வெள்ளத்தில் அடிபட்டுப் போவது போல் போக நேரும் என்று திருஷ்டாந்தத்தால் கிடைக்கிறது. (ஸ்வாமி தேசிகன் தன் பெருமைக்குப் பங்கம் பண்ண முயன்று தோற்றுத் தவித்துத் தவிடுபொடியானவர்களை எண்ணி இவ்வாறு சொந்த அனுபவத்தில் பேசுகிறாரோ?)

## 200.ஆராதனத்தில் பொழுது கழி.

நா**ட்களைக் கழிப்பது** பகவானை ஆராதிப்ப**தன் மூலம் ஆகட்டும்**.

**"இருமுப்பொழுதேத்தி" என்ற பாசுரத்துக்கு விவக்ஷிதமாக ஆசாரியர்கள் வியாக்கியானம் பண்ணின காலவிபாகத்தை**

**अभिगच्छन् हरिं प्रातः पश्चात् द्रव्याणि चार्जयन् ।**

**अर्चयंश्च ततो देवं ततो मन्त्रान् जपन्नपि॥**

**ध्यायन्नपि परं देवं कालेषूक्तेषु पञ्चसु ।**

**वर्तमानस्सदा चैवं पाञ्चकालिकवर्त्मना॥**

**स्वार्जितैर्गन्धपुष्पाद्यैः शुभैः शक्त्यनुरूपतः ।**

**आराधयन् हरिं भक्त्या गमयिष्यामि वासरान्॥**

**என்று பாஷ்யகாரர் அருளிச்செய்யக்கேட்டு வங்கிபுரத்து நம்பி நித்யத்திலே ஸங்க்ரகித்தார்.**

***——— ரஹஸ்யத்ரயஸாரம்.***

ப்ரபத்தி பண்ணிக்கொண்டவன் கூட நித்தியப்படி திருவாராதனம் முதலியவற்றைப் பண்ணவேண்டிய அவசியம் என்ன என்று சிலர் வாதாடுவதால் ஸாத்யோபாய யோதநாதிகாரத்தில் இந்த விளக்கம் தரப்படுகிறது.

> குலசேகராழ்வார் "இருமுப்பொழுதேத்தி" என்று அருள்கிறார். இதற்கு நம் ஆசாரியர்கள் உரையாகக் காலத்தை ஐந்தாகப் பிரித்திருப்பதை**க் காட்டு கிறார்கள்**. "காலையில் அபிகமனம் பண்ணி, பிறகு பொருள்களைச் சேகரித்து, அதன் பிறகு தேவனை அருச்சித்து, பிறகு மந்திரஜபங்கள் பண்ணி, பின் பரம்பொருளைத் தியானித்து ஐந்தாகச் சொன்ன காலங்களில் எப்போதும் இவ்வாறு பஞ்சகால பராயணராய் இருக்கிறவனாய் தானே சம்பாதித்த நல்ல சந்தனம், மலர்கள், இவற்றால் பக்தியுடன் ஹரியை ஆராதித்துக்கொண்டு நாட்களைக் கழிக்கப்போகிறேன்" என்று வங்கிபுரத்து நம்பிகள் நித்யம் என்னும் நூலில் சொல்லியிருப்பது உண்மையில் பகவத்ராமானுஜர் அருளிச்செய்த கருத்தாகும்.

நம் ராமானுஜ ஸித்தாந்தத்திலேயே ஒரு பகுதியினர் பஞ்சகாலப்ரக்ரியை நமக்குத் தேவையில்லை என்று வாதிடுவதால், "பசித்தபோது புசித்து வியர்த்தபோது குளிர்த்து வாழலாம்" என்று மருள்வதால், இந்த விஷயத்தில் குலசேகராழ்வாரும் எம்பெருமானாரும் அவருக்கு நெருங்கிய சிஷ்யரான வங்கிபுரத்து நம்பிகளும் ஏககண்டமாகக் கூறுவதைக் காட்டுகிறார். ஒருநாளை ஐந்து பகுதிகளாகப் பிரித்து முறையே அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம், என்ற ஐந்தையும் அனுஷ்டிப்பதற்குப் பஞ்சகால ப்ரக்ரியை என்று பெயர். ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் சொன்னது. இந்தப் பஞ்சகாலத்தைத்தான் இருமுப்பொழுது என்கிறார் குலசேகரப் பெருமான். இதே ஐந்து காலங்களில் பண்ண வேண்டிய கருமங்களை நித்யம் என்னும் நூலில் விளக்குகிறார் வங்கீஸர். இந்த நூல் முழுதுமே உடையவர் சொல்லக்கேட்டு எழுதியது. ஆகையால் உடையவரின் வழிநிற்பார் பஞ்சகால நெறியைத் தவறலாம் என்பது தப்பு. நாம் **ஐந்து பொழுதுப் பணிகளில் நாட்களைக்** கழிக்க வேண்டும்.

சென்ற நாலு அறிவுரைகளை மறுபடி காண்போம்.

- ஆர்ஜவம் என்பது பேற்று வழி.
- ஆறு கொடுஞ்செயலவரை அழி.
- ஆர் தான் தடுப்பார் அமுதமொழி.
- ஆராதனத்தில் பொழுது கழி.

## இரண்டாவது நூறு அறிவுரைகளின் தொகுப்பு

**101.**தற்புகழ்ச்சி பண்ணிக்கொள்வது பெரும்பாவம். -ரஹஸ்யத்ரய ஸாரம்.
102.ஆத்மா உடலே என்று மருளக்கூடாது. -பரமத பங்கம்.
103.ஆத்மாவைப் பகவானிடமிருந்து ஸ்வதந்த்ரமாக எண்ணித் திருடாதே. -யாதவாப்யுதயம்.
104.எல்லா ஆத்மாக்களும் ஒன்றெனக் கருதி ஏமாறாதே. - ரஹஸ்யத்ரய ஸாரம்.
105.சோம்பேறித்தனத்தால் அழியாதே. -ரஹஸ்ய த்ரய ஸாரம்.
106.ஆலயத்தில் உள்ள விளக்கை அகற்றாதே. -ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை.
107.நாலு ஆச்ரமங்களில் எதுவும் இன்றி இருக்காதே. -சததூஷணி.
108.ஆடும் செக்காய்ச் சுழற்றாதே. - ஸுபாஷிதநீவி
109.முக்கியக் கொள்கைகளில் தெளிவாயிரு. ஆர் கலக்கிடினும் கலங்காதே. -நிக்ஷேபரக்ஷை.
110.ஆயிரம் தடங்கல்கள் வந்தாலும் முடங்கிப்போகாதே. -ரஹஸ்யத்ரய ஸாரம்.
111.அறத்தில் ஐயம் வரும்போது ஆன்றோர் வழியில் தயங்காமல் செல். -அபயப்ரதாந ஸாரம்.
112.கலகம், கபடம், முதலிய ஆஸுரகுணத்தில் அமுங்கிப்போய் விடாதே. -ஸுபாஷிதநீவி.
113.ஆத்தும வித்யையைத் தகுதி அற்றவர்க்கு இரைக்காதே. -ரஹஸ்யத்ரய ஸாரம்.
114.ஆசை வெறியரை ஏறெடுத்தும் பார்க்காதே. -யாதவாப்யுதயம்.
115.ஆசைப் பிடியில் மாட்டிக்கொள்ளாதே. -தத்வ டீகா.
116.சங்கு சக்கர அங்கனம் பண்ணிக்கொண்டவர்களைப் பழிக்காதே. -ஸச்சரித்ர ரக்ஷை.
117.வேதம் உரைத்ததில் எந்தப் பகுதியையும் வேண்டாமென்று தள்ளாதே. -தத்வ டீகா.
118.ஆரையும் பகைத்துக் கொள்ளாதே. -அச்சுதசதகம்.
119.ஆடம்பரமாய்த் துள்ளாதே. -ஸுபாஷிதநீவி.
120.புகலடைந்தவரிடம் உள்ள குறைகளைப் பொருட்படுத்தாதே. - தாத்பர்ய சந்த்ரிகை.
121.ஆலய வளாகத்துக்குள் உண்ணாதே. -ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை.
122.தன்னைத் தானே பழித்துக் கொள்ளாதே. - ஸ்தோத்ர ரத்ந பாஷ்யம்.
123.ஆல், அரசு, அத்தி, இந்த மூன்றையும் தின்னாதே. -ஆஹார நியமம்.
124.எல்லாருக்கும் நல்லதையே நினை; கெடுதலை எண்ணாதே. -தாத்பர்ய சந்த்ரிகை.
125.பெரியோரின் நல்வார்த்தைகளை மறுக்காமல் ஒப்புக்கொள்ளு. -ப்ரதாந சதகம்.
126.பகவான் செய்துள்ள ஏராளமான உதவிகளை மறக்காதே. -உபகார சங்கிரகம்.
127.ஆசாரியனை நிந்திப்பவரை ஒறுக்கவேண்டும். -ரஹஸ்யத்ரயஸாரம்.
128.உணவுக்காக ஆலாய்ப் பறக்காதே. -ரஹஸ்யத்ரயஸாரம்.
129.வேதப்போர்வையில் ஒளிந்து, புறம்பான கருத்தைப் பரப்பாதே.-ஸங்கல்பஸூர்யோதயம்.
130.குருவை அச்சுறுத்திப் பேசக்கூடாது. -ஸ்தோத்ரரத்ந பாஷ்யம்.
131.ஆகமக்கருத்துகளை யுக்தி முதலிய ப்ரமாணங்களால் புரட்டக்கூடாது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
132.வாதங்களில் ஆர்ப்பாட்டமும் வெற்றுக்கூச்சல்களும் கூடாது. –ஸங்கல்பஸூர்யோதயம்.
133.விரைவாக ஓடும் ஆயுளை வீணாக்காதே. -யாதவாப்யுதயம்.
134.பேராபத்துகளிலும் மனம் தளராதே. -ஸுபாஷிதநீவி.
135.கோவிலிலிருந்து வந்த பின் தீட்டென்று குளிக்காதே. -ஸ்ரீபாஞ்ச்ராத்ரரக்ஷா.
136.வேதநூல்வழியின் செம்மையை விதண்டாவாதங்களால் அழிக்காதே. -அதிகாரசங்கிரகம்.
137.கருப்புத்துணியுடன் பெருமாளை ஸேவிக்காதே. -ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
138.வேதத்தோடுமுரண்பட்ட குலதர்மத்தையோ தேசாசாரத்தையோ ஏற்காதே. -ஸச்சரித்ரரக்ஷா.
139.இல்லாப் பொல்லாக் குறையைச் சுமத்தினால் அலட்சியப்படுத்து. -ஸுபாஷிதநீவி.
140.நல்ல வஸ்துவைக் கெட்ட இடத்தில் வைத்துக் கெடுக்காதே. -ஸுபாஷிதநீவி.
141.ஆபத்தை அறியாத தூண்டில்மீன் போல் மகிழ்ந்து மாட்டிக்கொள்ளாதே. -அபீதிஸ்தவம்.
142.வேதமே பயப்படும்படி தப்பான அர்த்தங்களைச் சொல்லாதே. -ரஹஸ்யசிகாமணி.

143.கோவில்களுக்கு அருகில் உள்ள இடங்களை அசுத்தப்படுத்தாதே. -ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
144.வெட்கம் கெட்டவனாக நடந்துகொள்ளாதே. -ஸுபாஷிதநீவி.
145.ஆற்றல் மிக்கவர் குற்றம் புரிந்தால் அதையும் தட்டிக்கேள். -ஸுபாஷிதநீவி.
146.கோவில்களில் எச்சில் துப்பக்கூடாது. -ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
147.த்வயம் முதலிய மந்திரங்களை நாத்திகர்க்குச் சொல்லித்தராதே. -ரஹஸ்யத்ரயஸாரம்.
148.பயிரை மேயும் ஆடுமாடுகளை விரட்டுவது போல் நல்லவரை இம்சிப்பவரை அடக்கு. -யாதவாப்யுதயம்.
149.உனக்கு ஆதாரமாய் நின்று தாங்குபவரையே அழிக்காதே. - ஸுபாஷிதநீவி.
150.பணத்திமிர் பிடித்து நம்மை மதிக்காதவரின் வீட்டில் நுழையாதே. -பாதுகா ஸஹஸ்ரம்.
151.மதயானை போலத் திமிறிக்கொண்டு திரியாதே. -தயாசதகம்.
152.கீழே கீழே போகாமல் உயர உயரப்போ. - ஸுபாஷிதநீவி.
153.சாத்திரவிதிகளை விட மஹான்களின் அனுஷ்டானத்தைப் பின்பற்று. –ஸ.ஸூர்யோதயம்.
154.சிலருக்குத்தான் என்றில்லாமல் எல்லோருக்கும் உதவி பண்ணு. -ஸுபாஷிதநீவி.
155.எதிரிகளின் அருகில் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இரு. –ஸ. ஸூர்யோதயம்.
156.நம்மாலாகாத செயல்களும் இருப்பதை அறிந்து வீண் முயற்சிகளைக்கைவிடு. -ஸுபா.நீவி.
157.பக்தி-ஜ்ஞானம் ஸித்தித்தபின் கூட ஆயுள்முழுதும் கருமங்களைச்செய். –ஈசாவா.பாஷ்யம்.
158.ஆசாரியன் முதலிய பாகவதர்க்குப் பணிவிடை பண்ணு. -ரஹஸ்யத்ரயஸாரம்.
159.பின்விளைவுகளை யோசித்து ஜாக்கிரதையாகக் காரியங்களைப்பண்ணு.–ஸ.ஸூர்யோதயம்.
160.தானம் பெறுபவரை மதித்து ஆதரவோடு தானம் பண்ணு. -யாதவாப்யுதயம்.
161.நாள்தோறும் ஆயுள் குறைவதை அறிந்து திமிரைக்குறைத்துக்கொள். -அச்சுதசதகம்.
162.வேதமார்க்கம் சிறந்ததாயிருப்பதை உணர்ந்து அதில் நட. -ஸங்கல்பஸூர்யோதயம்.
163.சாத்திரம் விதித்த கருமங்களில் பகை பாராட்டாதே. -சததூஷணி.
164.துறவியான பின்பும் பூணூலை விடாமல் அணி. -சததூஷணி.
165.பகவானின் ஆறு குணங்களை உணவு போல் அனுபவி. -ரஹஸ்யத்ரயஸாரம்.
166.ஆசையும் கோபமும் அளவுக்குள் வை; தக்க விஷயத்தில் செலுத்து. -ஸர்வார்த்தஸித்தி.
167.ஆழ்வார் பாடல்களை வாழ்வாகக்கொள். -பிரபந்தஸாரம்.
168.நீ உடலுக்குப்பயன்படல் கிடக்கட்டும்; உனக்கு உடலைப் பயன்படுத்து.–பரமபதஸோபானம்.
169.நிர்மலமான மாதவபக்திமார்க்கத்தில் செல். -சததூஷணி.
170.பெரியவர்களின் உபதேசங்களைக் கேட்டு அதன்படி நட. -யாதவாப்யுதயம்.
171.ஆசார்யனின் கீர்த்தியைப் பரப்பு. -அதிகாரசங்கிரகம்.
172.கொலையுண்ணாமல் உயிரைக் காத்துக்கொள். -ஸங்கல்பஸூர்யோதயம்.
173.ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்காக ஸ்ரீராமஸேதுவைக் கண்ணால் பார். -வரதராஜபஞ்சாஶத்.
174.ஆசாரிய–அனுக்கிரகம் என்ற புதிய கண்ணால் பொருள்களைப்பார். -ரஹஸ்யத்ரயஸாரம்.
175.இறைவன் படைப்பில் எதையும் வியர்த்தமெனத் தள்ளாதே. -ஸுபாஷிதநீவி.
176.சாத்திரம் என்ற விளக்கைக்கொண்டு பார். -யாதவாப்யுதயம்.
177.கண்ணாடி போல் தன்முன் நிற்பவர்க்கு நிர்மலமாகக் காட்டு. -ஸுபாஷிதநீவி.
178.ஆறு விதமாக ஆன்றோரோடு சேர்ந்து தூய்மை பெறு. -ஸ்தோத்ரபாஷ்யம்.
179.சுழலிலிருந்து விடுபட, திருவின் திருநாமங்களைத் திரும்பத்திரும்பச் சொல். -ஸ்ரீஸ்துதி.
180.ஆயுதங்களை விட வலியதான பொறுமையைக் கடைப்பிடி. -யாதவாப்யுதயம்.
181.தகுதியிலார் தகராறுசெய்தால் பொருட்படுத்தாமல் உன்நிலையில் உறுதியாயிரு.-ஸுபா.நீவி.
182.பகவானின் பேர்களையும் கதைகளையும் கீர்த்தித்துப் பாவம் தொலை. -ரஹஸ்யத்ரயஸாரம்.
183.எந்தக்காரியம் பண்ணினாலும் முதலில் என்ன பிரயோஜனம் என்பதைச்சொல். -தத்வடீகா.

184.அயலான் வீட்டுப் பசுமாட்டுக்குத் தினமும் புல் கொடு. -ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
185.தன் நிஷ்டையை அறிந்து, ஆழ் பள்ளங்களை அடைத்துவிடு. -ரஹஸ்யத்ரயஸாரம்.
186.ஆசையையும் பகையையும் வெல்ல ஆயுதமாக விவேகத்தைக் கொள். –ஸ.ஸூர்யோதயம்.
187.அற்பர்களுக்கு நடுவில் உயர்வு பெற்றால் ஆபத்து; எச்சரிக்கையுடன் இரு. -ஸுபாஷிதநீவி.
188.அதிகரணஸாராவளியை வாசித்து மகிழ்ச்சியடை. -அதிகரணஸாராவளி.
189.பிற யாகங்களை விட ஆறுகாரணங்களால் சிறந்த ஜபயஜ்ஞத்தைப் பண்ணு.–தா.சந்த்ரிகா.
190.ஆசிரியர் போல வியாதியும் பயனுள்ளதென்று கருது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
191.விளைவுகளை நன்கு ஆலோசித்துப் பணிகளைப் பண்ணு. -சததூஷணி.
192.ஆசார்யபரம்பரையைத் துதிபண்ணு. -ஸங்கல்பஸூர்யோதயம்.
193.தீர்த்தயாத்திரையை விடப் பகவதனுபவத்தை முக்கியமாகக்கருது.- ஸங்கல்பஸூர்யோதயம்.
194.காலம் தாழ்த்தாமல் காரியம் பண்ணு. -ஸங்கல்பஸூர்யோதயம்.
195.திருந்தவே மாட்டாதவர்களைத் திருத்தும் முயற்சி வேண்டாம். -ஸங்கல்பஸூர்யோதயம்.
196.ரஸிகர்கள் இல்லாத இடத்தில் கலைத் திறனைக் காட்டாதே. -ஸுபாஷிதநீவி.
197.இறைவனை அணுக விரும்பினால் நேர்மையாக நட. -ரஹஸ்யத்ரயஸாரம்.
198.ஆறு கொடுஞ்செயல் புரிந்தவரைக் கொன்றாலும் கொல்லு. -ஸங்கல்பஸூர்யோதயம்.
199.பிறரது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடாதே. -ஸுபாஷிதநீவி.
200.ஆராதனத்தி**லும் ஐந்துபொழுதுப்பணிகளிலுமாய் நாட்களை**க்கழி. -ரஹஸ்யத்ரயஸாரம்.

இரண்டாம் நூறின் சுருக்கம் முடிந்தது.